# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 12 Issue - 09

செப்டம்பர் 2019 - முஹர்ரம் - 1441





## அன்றும்,
## இன்றும் தொடரும் தீண்டாமை!

## அஸ்ஸாம்
### 40 லட்சம் முஸ்லிம்கள் இந்தியாவை விட்டு வெளியேற்றம்

**அகில உலக இஸ்லாமிய மாநாட்டில் வீர கேசரியின் முழக்கம்**

بسم الله الرحمن الرحيم

முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

(5:08)


04 கஷ்மீர் துரோகத்தின் வரலாறு

10 மெஹ்பூபா முப்தியின் துரோகம்

18 கஷ்மீர் குண்டு வெடிப்புகள் யாரால்? யாரால்?

24 அன்றும், இன்றும் தொடரும் தீண்டாமை!

31 40 லட்சம் முஸ்லிம்கள் இந்தியாவை விட்டு வெளியேற்றம்

38 மோடியின் ஆட்சியில் அறிவியல் கூற்றுகள்

44 சிலுவைப் போர் 2.0

50 இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?

56 முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)



# வைகறை வெளிச்சம்

செப்டம்பர் 2019 - முஹர்ரம் 1441

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.

+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in




# கஷ்மீர் துரோக

தொடக்க நாள் தொட்டே கஷ்மீர் மக்கள் துரோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். தொடர் துரோகம் மட்டுமல்ல அடர்ந்த அடுக்கடுக்கான அநீதிகளுக்கும் ஆளாக்கப்பட்டு வருகின்றார்கள்.

### 1. துரோகம்

ஆகஸ்ட் 5, 2019 அன்று அமித்ஷாவும், மோடியும் தங்கள் பாசிசத்தை பச்சையாக வெளிப்படுத்தி கஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்த்தைத் தரும் நமது அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370 ஐயும், பிரிவு 35A ஐயும் விலக்கினார்கள். அத்தோடு கஷ்மீர் மாநிலத்தைத் துண்டாடினார்கள். இவர்களின் கூற்று இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கும் கஷ்மீர் மாநிலம் தனியான பல உரிமைகளைப் பெறுகின்றது. அதற்கு அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370 வகை செய்கின்றது. அதனால் அந்தப் பிரிவை அகற்றிட வேண்டும் என்பதே!

இந்த மொத்த விவகாரத்தையும் புரிந்து கொள்ள அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370 என்ன சொல்லுகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதனால் அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370 இன் மொழியாக்கத்தை அப்படியே தனிப்பகுதியாக இங்கே தந்திருக்கின்றோம். வாசகர்கள் அதில் பயனைந்திடலாம். கஷ்மீரில் நடந்த துரோகத்தை பட்டியலிடும் வகையில் அதன் முக்கிய பகுதி ஒன்றை இங்கே தருகின்றோம். அது, “இந்தியா நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் எந்தச் சட்டமும் கஷ்மீரின் சட்டமன்றம் அங்கீகரித்தாலன்றி கஷ்மீரில் செல்லுபடி ஆகாது” என்பதே!

இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டு தான் விடுதலை நாள்களில் போது (1947ஆம் ஆண்டில்) நாம் கஷ்மீரின் டோக்ரா மன்னர் ஹரிசிங் அவர்களிடமிருந்து கஷ்மீரை இந்தியாவோடு இணைத்துக் கொண்டோம்.

இதையே வேறு சொற்களால் சொன்னால் இந்தப் பிரிவு 370 இல்லை என்றால் கஷ்மீர் நம்மோடு இணைந்திருக்காது. அது தனி நாடாக இருந்திருக்கும். அது பாகிஸ்தானோடு இணைந்திருக்க வாய்ப்பில்லை. ஒரு வேளை இணைந்திருந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

ஆக இந்தியாவின் நாடாளுமன்றத்தில் ஏற்றப்படும் சட்டங்கள் கஷ்மீர் மக்கள் மன்றத்தின் ஒப்புதலோடு தான் கஷ்மீரில் சட்டமாக்க முடியும். இந்த நிபந்தனையை அன்றைய அரசியல் தலைவர்கள் ஓராயிரம் முறை வாக்குறுதி தந்தார்கள்.

இந்த வாக்குறுதியோடு அல்லது நிபந்தனையோடு கஷ்மீர் இந்தியாவோடு இணைக்கப்பட்டது என்பது மட்டுமல்ல நாங்கள் இந்த வாக்குறுதியில் உறுதியாக இருப்போம் என்பதை எடுத்துக் காட்டிடத்தான் நாம் இந்தப் பிரிவை நமது இந்திய அரசியல் சாசன சட்டத்தோடு இணைத்தோம்.

இந்தப் பிரிவை அரசியல் சாசன சட்டத்திலிருந்து அகற்றிட வேண்டும் என்றாலும் அந்த கஷ்மீர் மக்களின் ஒப்புதலை



# த்தின் வரலாறு

அவர்களின் சட்டமன்றம் மூலம் அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிகளின் மூலம் பெற்றிட வேண்டும். இதையும் நமது அன்றைய தலைவர்கள் 1949களில் மக்களுக்கு வாக்குறுதியாகத் தந்தார்கள். அதையும் பின்னர் 1949 அக்டோபர் 17இல் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் இணைத்தார்கள். ஆனால் அடுத்து வந்த 20 ஆண்டுகளுக்குள் பெரும்பாலான சட்டங்கள் அதாவது நமது நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் அங்கே நடைமுறைப் படுத்தப்பட்டன. 2018ஆம் ஆண்டு கணக்கின் படி நமது இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் உள்ள மொத்தம் 395 பிரிவுகளில், 260 பிரிவுகள் அங்கே செயபல்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய அரசுக்கு அதிகாரமுள்ள 97 விவகாரங்களில், 94 விவகாரங்களை மத்திய அரசு கஷ்மீரில் திணித்துவிட்டது. அவற்றை கஷ்மீர் சட்ட சபையைப் பற்றிக் கவலைப்படாமல் அங்கே செயல்படுத்திவிட்டது. இது சந்தடி இல்லாமல் நமது அரசுகள் செய்த துரோகம்.

இதைத்தான், அதாவது இந்த ஏமாற்று வித்தையைத்தான், Concede in concept defeat in detail - கொள்கை அளவில் ஒத்துக் கொள், செயலில் அதைத் தோற்கடித்து விடு என்பது. இதுதான் பிரிவு 370லும் நடந்து வருகின்றது. இப்போது அதைக் கொள்கை அளவிலும் வீழ்த்தித் தீராத துரோகத்தைச் செய்திருக்கின்றார்கள். இன்றைய EVMS பாசிஸ்டுகள்.

## 2. துரோகம்

இந்தியாவுடன் தான் கஷ்மீர் இருந்திட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் ஷேக் அப்துல்லாஹ். இவர் கஷ்மீரின் முதல் முதலமைச்சராக இருந்தவர். பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியாவின் முதல் பிரதம அமைச்சர். இவர் தான் அநேக வாக்குறுதிகளை கஷ்மீர் மக்களுக்கும் அன்றைக்கு கஷ்மீர் பற்றிய விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கும் கொண்டு சென்றவர். உலக அரங்கிலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் அந்த மக்கள் ஒப்புதல் இல்லாமல் அதாவது கஷ்மீர் மக்களின் சம்மதம் இல்லாமல் கஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க மாட்டோம் என்பதில் உறுதியாக இருக்கின்றோம் என வாக்குறுதிகளை வாரி வழங்கினார்.

இத்தோடு நில்லாமல் அந்த மக்களிடம் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்படும் அதில் அந்த மக்கள் என்ன முடிவு செய்கின்றார்களோ அதற்கு கட்டுப்படுவேன் என்றெல்லாம் பீற்றினார். மொத்தத்தில் தானொரு ஜனநாயகவாதி போலும், உலக அரங்கில் மக்கள் கருத்துக்களை கேட்டு நடப்பவர் என்றும் காட்டிக் கொண்டார். உலக அரங்கில் பாராட்டுக்களைப் பெற்றார். ஆசியாவின் ஜோதி என்றெல்லாம் அழைக்கப்பட்டார்.

1947 அக்டோபரில் கஷ்மீரை ஆட்சி செய்து கொண்டிருந்த டோக்ரா மன்னர் 26, 1947இல்

இந்தியாவுடன் சேரும் ஒப்பந்தத்தை செய்தார். இந்திய அரசின் போக்குகள் ஐயங்களை எழுப்பியதால் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் இணைத்து உத்திரவாதம் தந்திட வேண்டும் என அந்த மக்கள் கேட்டார்கள். அதன் படி அக்டோபர் 17, 1949 ஆம் ஆண்டில் அது நமது அரசியல் நிர்ணய சட்டத்தில் இணைக்கப்பட்டது.

ஷேக் அப்துல்லாஹ் தன் உயிரிலும் மேலான நண்பராக கருதிய நேரு, காலப்போக்கில் ஷேக் அப்துல்லாஹ்வின் பால் சந்தேகம் கொண்டார். அவரது ஆட்சியைக் கவிழ்க்கும் சதி ஒன்றை அரங்கேற்றினார். ஷேக் அப்துல்லாஹ்வை 11 ஆண்டுகள் தொடர்ந்து சிறையிலடைத்தார்.

இதில் நெஞ்சை நெகிழச் செய்யும் நிகழ்வு என்னவெனில் நேரு போன்றவர்களின் ஆளுமையை மையமாகக் கொண்டு தான் இந்தியாவின் மதசார்பின்மை இந்தியாவின் ஜனநாயகம் என்பவற்றின் மீது நம்பிக்கைக் கொண்டார் ஷேக் அப்துல்லாஹ். அந்தப் பின்னணியிலேயே அவர் பண்டித ஜவஹர்லால் நேருவின் அடுக்களை நண்பர் என்றானார். அந்த நேருவே அவருடைய ஆட்சியை பிடுங்கினார். அவரை ஆகஸ்ட் 9, 1953இல் சிறையில் அடைத்தார். அவர் 1964 வரை சிறையில் தான் இருந்தார். இது தன்னுடைய உற்ற நண்பர் என்று பேசிக் கொண்டிருந்த பண்டித ஜவஹர்லால் நேரு செய்த பெரிய துரோகம்.



ஷேக் அப்துல்லாஹ்

## பண்டித நேருவும் - ஷேக் அப்துல்லாஹ்வும்


இந்த விவகாரங்களின் முழு பின்னணியையும் புரிந்து கொள்ள பண்டித நேருவுக்கும், ஷேக் அப்துல்லாஹ்வுக்கும் இடையே நடந்தவற்றை இங்கே சுருக்கமாகத் தருகின்றோம்;

கஷ்மீரை கடைசியாக ஆட்சி செய்த மன்னர் ஹரி சிங். இவர் டோக்ரா என்ற இனத்தைச் சார்ந்தவர். இவர் டோக்ரா மன்னர் ஹரி சிங் என்றே அழைக்கப்பட்டு வந்தார். இவர் டோக்ரா என்ற இன மக்களை தன்னுடன் வைத்துக் கொண்டு தான் தனது ஆதிக்கத்தை செலுத்தி வந்தார். இவருக்கு எதிராக ஷேக் அப்துல்லாஹ் இயக்கம் நடத்தினார். டோக்ரா மன்னர் ஹரி சிங் - இன் வரி விதிப்புகள் தாம் அவருக்கு எதிராக மக்களை கிளர்ந்தெழச் செய்தன. இந்த மக்கள் கிளர்ச்சியை அடக்கிடத்தான் அவர் இந்தியாவின் உதவியை முதலில் நாடினார். டோக்ரா மன்னர் ஹரி சிங் - க்கு இராணுவ உதவிகளை வழங்கிவிட்டு அவரை இந்தியாவுடன் இருப்போம் என எழுதி வாங்கி விட்டார் நேரு.

அதன் பின் டோக்ரா மன்னருக்கு எதிராக நடந்த ஷேக் அப்துல்லாஹ்வின் இயக்கத்திற்கு ஆதரவு தந்தார் நேரு. அவர் முதலமைச்சராகவும் ஆனார். தொடக்க நாள் தொட்டே ஷேக் அப்துல்லாஹ் கஷ்மீரிகளின் விவகாரத்தை கஷ்மீரிகளே முடிவு செய்திட வேண்டும் என்றே கூறினார். அதனால் ஷேக் அப்துல்லாஹ் டோக்ரா மன்னர் ஹரி சிங் எழுதிக் கொடுத்த, "இந்தியாவோடு இருப்போம்" என்ற ஒப்பந்தத்தை பெரிதாக மதிக்கவில்லை. பாகிஸ்தானை கஷ்மீர் பிரச்சனையிலிருந்து வெளியே நிறுத்திட மகாராஜா ஹரி சிங் எழுதிக் கொடுத்தது பயன்படும் என்ற அளவிலேயே ஒத்துக் கொண்டார். ***(Front Line: Aug 30,2019)***

ஷேக் அப்துல்லாஹ் கஷ்மீர் விவகாரத்தை கஷ்மீரிகளே முடிவு செய்திட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அத்தோடு இந்தியாவின் கடைசி வைசிராய் - மவுண்ட் பேட்டன் அவர்களும் அதற்கு உத்திரவாதம் தந்திட வேண்டும் என்றார். மவுண்ட் பேட்டன் அவர்களும் உத்திரவாதம் தந்தார். இந்தப் பின்னணியில் ஷேக் அப்துல்லாஹ்வுடன், பண்டித நேரு அவர்களும் மவுண்ட் பேட்டன் அவர்களும் செய்து கொண்ட ஒப்பந்தமே (The Delhi Agreement 1952 - 1952 **டெல்லி ஒப்பந்தம்**)

- இந்த உடன்படிக்கையில் மக்களின் கருத்துக் கணிப்பிற்கே முதலிடம் தரப்படும் என்று மையப்பொருளாக அமைந்தது. ஆனால்



நேரு

அதுவும் நடைபெற்றிடவில்லை. அதற்கு அதிக அழுத்தம் தந்த ஷேக் அப்துல்லாஹ் சிறை பிடிக்கப்பட்டார்.

- இந்த துரோகத்தின் சுருக்கம் என்னவெனில் டோக்ரா மன்னர் ஹரி சிங்கிடமிருந்து, Instrument of Assenssion இணையும் ஒப்பந்தம் நிபந்தனையுடன்.
- டோக்ரா மன்னர் ஹரி சிங் - க்கு எதிராக ஷேக் அப்துல்லாஹ் அவருடன் டெல்லி ஒப்பந்தம். 1953 முதல் அவருக்கு சிறை.
- ஊரையும், உலகையும் ஏமாற்றிட அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370.
- 1975 இல் பினிபிசைட் என்ற கருத்துக் கணிப்பு கோரிக்கையை கைவிட நிபந்தனை. இந்த முறை பண்டித நேருவின் பணிகளை அவருடைய மகள் இந்தியா காந்தி அவர்கள் நிறைவேற்றினார்கள்.

இந்திரா காந்தி அவர்கள் 1974இல் ஷேக் அப்துல்லாஹ்வுடன் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஷேக் அப்துல்லாஹ் கஷ்மீர் மக்களின் கருத்துக் கணிப்பு வந்த பின்னரே கஷ்மீரின் நிலை குறித்து முடிவெடுக்க வேண்டும் என்ற முடிவை மாற்றினார். அதற்காக ஜம்மு & கஷ்மீர் கருத்துக் கணிப்பு முன்னணி என்றொன்றை 1955 இல் தொடங்கினார்கள். 1975இல் கைவிட்டார் ஷேக் அப்துல்லாஹ். அத்தோடு கஷ்மீரின் முதலமைச்சராகவும் ஆனார். இது அவர் அந்த மக்களுக்கு செய்த துரோகம்.

## 3. ஷேக் அப்துல்லாஹ்வின் துரோகம்

ஷேக் அப்துல்லாஹ்வின் நடவடிக்கைகளைப் பார்த்திடும் போது அவர் முதலமைச்சர் பதவிக்காக எந்தவொரு முடிவையும் எடுப்பார் என்று தெளிவாகின்றது. காரணம் 1953இல் அவர் பேசிடும் போது;


நாட்டின் பிரிவினைக்காக வகுக்கப்பட்ட விதிகளின் படி கஷ்மீர் பாகிஸ்தானோடு தான் போயிருக்க வேண்டும். ஆனால் நான் பாகிஸ்தானை நம்பவில்லை. இந்தியாவின் மதசார்பின்மையையும், ஜனநாயகத்தையும் தான் நம்புகின்றேன். அதனால் கருத்துக் கணிப்பு முடியும் வரை இந்தியாவுடன் இருக்கும் மகாராஜா ஹரி சிங் - இன் ஒப்பந்தத்தை ஒத்துக் கொள்கிறேன் என்றார். கருத்துக் கணிப்பு நடத்தப்படும் என்று உறுதிமொழி வாங்கிடும் ஒப்பந்தங்களையும் செய்து கொண்டார்.

இந்த ஒப்பந்தத்தை செய்து கொண்ட பண்டித நேருவே அவரை சதித்திட்டம் தீட்டினார் எனக் குற்றம் சாட்டி சிறை பிடித்தார். ஷேக் அப்துல்லாஹ் தான் எடுத்த நிலைபாட்டில் உறுதியாக இருந்திருந்தால் கருத்து கணிப்பு என்பது "இனி இல்லை" என்ற நிலைப்பாடு வந்திருக்காது.

ஆனால் மீண்டும் 1975 இல் முதலமைச்சர் பதவி கிடைக்கும் என்று தெரிந்தவுடன் கருத்துக் கணிப்பு விவகாரத்தில் காலை வாரினார். இதனால் கடைசி வரை மக்களின் கருத்து என்னவென்பதை 1981இல் அவர் மரணிக்கும் வரை தெரிந்து கொள்ள இயலவில்லை.

## 4. பக்ஷியின் துரோகம்

இந்த துரோகத்தை பக்ஷி குலாம் முஹம்மத் என்பவர் செய்தார். இவர் தான் ஷேக் அப்துல்லாஹ்வை 1953 இல் கைது செய்திடக் காரணமாக அமைந்தவர். இவரிடம் தான் பண்டித ஜவஹர்லால் நேரு ஷேக் அப்துல்லாஹ்வின் போக்கைப் பற்றிய செய்திகளைக் கேட்டுப் பெற்றார். தான் முதலமைச்சராகலாம் என்ற ஆசையில், "ஷேக் அப்துல்லாஹ் கஷ்மீர் தனித்து இருக்க வேண்டும் என விரும்புகின்றார். அடுத்து டோக்ரா பண முதலைகளுக்கு எதிராக "Socialism - சமுதாய பொதுவுடமை" (அதாவது ஆக்கப்பட்டவை அனைத்தும் அரசாங்கத்திற்கே சொந்தம்) என்றும் பேசுகின்றார் என்றெல்லாம் தகவல் சொன்னார்.



பக்ஷி குலாம் முஹம்மது

பக்ஷி குலாம் முஹம்மத் தன்னுடைய முதலமைச்சர் பதவி ஆசையில் பொய்களையும், புணைந்துரைகளையும் தாராளமாகவே பேசியிருக்க வாய்ப்பிருக்கின்றது. நேரு தன் உற்ற நண்பர் ஷேக் அப்துல்லாஹ்வை காலை வாருவது என்ற முடிவுக்கு வந்த பின் அவரும் தன்னாலான சதிகளைப் பின்னினார்.

மொத்தத்தில் சதி வழக்கு ஒன்றின் மூலம் ஷேக் அப்துல்லாஹ்வை சிறையிலடைத்தார். தனது கையாளாக மாறிய பக்ஷியை முதலமைச்சராக்கினார்.

## 5. பக்ஷியின் பச்சைத் துரோகம்

முதலமைச்சர் பதவியை எப்படியேனும் பிடித்து விட வேண்டும் என்பதில் தனது உற்ற நண்பர் ஷேக் அப்துல்லாஹ் அவர்களுக்கு முதலில் துரோகம் செய்தார். பின்னர் கஷ்மீர் மக்களுக்கு துரோகம் செய்திட தலைப்பட்டார் பக்ஷி.

இந்த துரோகத்தின் முதல் படியாக மத்திய அரசின் பொதுப் பட்டியலில் உள்ளவற்றில் கஷ்மீருக்கும் சேர்த்து சட்டமியற்றும் உரிமையை மத்திய அரசுக்கு வழங்கினார். இதற்காக 1954இல் பிறப்பிக்கப்பட்ட குடியரசு தலைவரின் ஆணையை ஏற்றார்.

முதலமைச்சர் பதவியைப் பயன்படுத்தி வகித்த கஷ்மீர் சட்ட சபையின் ஒப்புதலைப் பெற்றுத் தந்தார். அன்றைக்கே அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370 வழங்கிய பாதுகாப்புக்கு பின் பெரும் பகுதி பட்டுப்போனது.

இன்று மத்திய அரசு சட்டமியற்ற அதிகாரம் பெற்ற 97 விவகாரங்களில் 94 விவகாரங்களில் ஏற்றப்படும் சட்டங்கள் கஷ்மீருக்கும் பொருந்தும். இதை கஷ்மீர் சட்டமன்றமும் ஒத்துக் கொண்டுள்ளது. இதில் சொல்ல முடிந்ததெல்லாம், முதலமைச்சர் பக்ஷி 1954 லிலேயே ஒரு பெரும் துரோகத்தை கஷ்மீர் மக்களுக்கு செய்து விட்டார் என்பதே! (Front Line, Aug 30, 2019)

அவருடைய துரோகம் அத்தோடு நிற்கவில்லை. 1954ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் இப்படி அறிவித்தார்.

“ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே கஷ்மீர் இந்தியாவுடன் பிரிக்க முடியாத அளவில் இணைந்து விட்டது. இப்போது நாம் செய்வதெல்லாம் அதனுடைய நடைமுறைகளை முழுமைப்படுத்துகின்றோம் அவ்வளவுதான்” என்றார். அப்போதே எல்லாம் முடிந்து விட்டது.

## 6. தொடர்ந்த இன்னொரு துரோகம்

கஷ்மீரில் கவர்னர் என்ற ஆளுனரை கஷ்மீர் சட்ட சபை அதாவது மக்கள் மன்றம் தான் தேர்ந்தெடுத்து வந்தது. பின்னர் இந்த உரிமையும் அந்த மக்களிடமிருந்து பிடுங்கப்பட்டது. அது 1964இல் நடந்தது. மீண்டும் இந்திய குடியரசு தலைவர் ஒரு பிரகடனத்தைச் செய்தார். அதில் இனி கஷ்மீரின் கவர்னரை ஏனைய இந்திய மாநிலங்களைப் போலவே இந்தியக் குடியரசு தலைவர் தான் நியமிப்பார் என்பதே! அதன் பின்னர் கஷ்மீரின் எல்லா கவர்னர்களும் இந்திய குடியரசு தலைவராலேயே நியமிக்கப் பட்டார்கள். **(Front Line, Aug 30, 2019)**

அதன் பின்பும் பல குடியரசு தலைவரின் பிரகடனங்கள் தொடர்ந்து வந்தன. அவற்றிலும் பல உரிமைகள் பிடுங்கப்பட்டன. இவற்றிற்கெல்லாம் பிறகு ஏட்டளவில் தான் அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370 இருந்தது.

இந்த தகவல்களையெல்லாம் தந்த ஆய்வாளர் “மிருது ரே” என்பவர் இப்போது 370 நீக்கப்பட்டு விட்டது எனக் கொண்டாடுபவர்கள் முட்டாள்களே! பெயரளவில் இருந்த இந்த 370 ஐ நீக்குவதற்கு இத்தனை கெடுபிடிகள் தேவையில்லை. இதில் கவனிக்க வேண்டியவை என்னவெனில் அந்த மக்கள் மீது அரசு இயந்திரம் செய்யும் அநியாயங் களுக்கு நீதி கிடைப்பதே இல்லை.

அவர்கள் நீதிக்காகப் போராடும் போதெல்லாம் இந்த 370 ஐக் காட்டித்தான் அரசு அட்டூழிங்களை நியாயப்படுத்தினார்கள். அப்படியானால் இப்போது ஏன் இத்துனை கெடுபிடிகள். கஷ்மீரை முஸ்லிம்களே இல்லாத கஷ்மீராக மாற்றிட வேண்டும் என்பதற்கே!

அங்கே போடப்பட்டிருக்கும் ஊடகத் தடைகள், 144, பயணங்கள் செய்வதில் தடை எல்லாம் அங்கே

*முஸ்லிம்களை அப்புறப்படுத்தி விட்டு புதிய குடியிருப்புகளை உருவாக்கி இந்துத்துவவாதிகளை குடியமர்த்துவதற்காகவே!*

### கஷ்மீரின் எதிர்காலத் திட்டம்

*பௌத்தர்களும், இந்துக்களும் மிகக்குறைந்த அளவில் முஸ்லிம்களும் வாழும் ஜம்மு பகுதியை முற்றாகப் பாதுகாப்பதை மத்திய அரசே நேரடியாக செய்யும் இதனால் தான் அது "யூனியன் டெரிட்ரெடி" என அறிவிக்கப்பட்டுள்ளது. சட்ட சபை இல்லாத யூனியன் டெரிட்டரி.*

*கஷ்மீர் பகுதியில் முஸ்லிம்களை அப்புறப்படுத்தி விட்டு சங்கப்பரிவரத்தினரை குடியமர்த்துவது. இந்த குடியிருப்புகளை விசாலப்படுத்திக் கொண்டே பாகிஸ்தானின் பிடியில் உள்ள கஷ்மீரில் கை வைப்பது. அடுத்த தேர்தல் நேரத்தில் அல்லது பிரதான மாநிலங்களில் தேர்தல் நடக்கும் நேரத்தில் அந்தப் பகுதியில் தாக்குதல்களை நடத்துவது. அதன் மூலம் மக்களை நாட்டில் நடக்கும் பொருளாதார வீழ்ச்சி போன்ற முக்கிய சீர்கேடுகளின் பக்கம் கவனம் செலுத்தாமல் திசை திருப்புவது. ஓட்டுக்களாய் பெறுவது. இவை நடக்கும் என எதிர்ப்பார்க்கலாம்)*

### மாபாதகம்

*1964இல் இன்னொரு துரோகம் அரங்கேறியது. அதை துரோகம் என்பதை விட பெரும் பாதகம் எனலாம். அது;*

*கஷ்மீரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நமது மத்திய அரசு கலைக்கலாம் என்ற நிலை கஷ்மீருக்கும் செல்லும் என அறிவிக்கப்பட்டது. மாநில அரசுகளை மத்திய அரசு கலைக்கலாம் என்பது எப்படிச் செயல்படுமென்றால் மத்திய அமைச்சரவை நமது குடியரசு தலைவருக்குப் பரிந்துரை செய்யும். குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தை கலைத்து விட்டு கவர்னரின் ஆட்சியைக் கொண்டு வருவார்.*

*சுருக்கமாகச் சொன்னால் இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு 65 கஷ்மீருக்கும் செல்லும் என (1964இல்) அறிவிக்கப்பட்டது.*

*அதன் பின் மத்தியரசு சதுரங்கம் ஆடுவதைப் போல் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபையை தூக்கி வீசி விட்டெறிவதும், அந்த இடத்தில் தங்களுக்கு வேண்டிய ஒருவரை கவர்னராக நியமிப்பதும் அடிக்கடி நடந்தேறின. அதுவே முப்தி மெஹ்பூபா விஷயத்திலும் நடந்தது. 1970களில் 23 அரசியல் அமைப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவற்றின் வழி கஷ்மீர் இந்தியாவின் பிரிக்கவே முடியாத பகுதி என்றானது.*

**- MGM**

ஒரு முறைப்படுத்தப்பட்ட இனப்படுகொலை கஷ்மீரில் நடத்தப்பட்டு வருகிறது. கஷ்மீர் ரீடர் என்ற இதழ் கஷ்மீரில் நடத்தப்பட்டு வரும் தாக்குதல் களையும் படுகொலைகளையும் இவ்வாறு தான் வர்ணிக்கிறது. இந்தியாவில் இஸ்ரேலில் நடப்பது போன்ற "முறைப்படுத்தப்பட்ட இனப்படு கொலையையும்"எல்லா கஷ்மீரிகளையும் ஊனப்படுத்துதல்" என்பதையும் செயல் முறையில் ஏற்றுக் கொண்டுள்ளதை கஷ்மீர் ரீடர் இதழ் படம்பிடித்து காட்டுகிறது.

கஷ்மீரின் மொத்த மக்கள் தொகை 7198114 (2011ன் கணக்கெடுப்பின் படி) ஜம்மு-கஷ்மீர் மொத்தம் சேர்த்து 1,25,48,925. அதாவது காஷ்மீரில் 72 லட்சம் ஜம்முவில் 53.5 இலட்சம்.

கடந்த 27 ஆண்டுகளில் கஷ்மீரின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் வரை கொல்லப் பட்டுள்ளனர். 60,000 க்கும் மேற்பட்டோர் காணாமல் போய் உள்ளனர். (இவர்கள் இராணுவத்தால் அழைத்து செல்லப்பட்டவர்கள். அவர்களின் நிலை என்னவென்று என்பதே. உண்மை வெளியிடப்படவில்லை. ஆனால் அவர்கள் கொல்லப்பட்டு விட்டனர். படிக்க வேர்கள் பதிப்பகத்தின் காஷ்மீரின் பாதி விதவைகள்! இது கிட்டத்தட்ட 2.2% அதாவது காஷ்மீர் மக்கள் தொகையில் 2.2 சதவிகிதம் பேர் கொல்லப்பட்டு விட்டனர். கிட்டத்தட்ட 2 இலட்சம் பேருக்கு மேலாக. ஏதாவது ஒரு வகையில் ஊனப்படுத்தப்பட்டுள்ளனர். இது கிட்டத்தட்ட. 2.8 சதவீதம்.

ஆக காஷ்மீரின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 5 சதவிகிதம் பேர் கொல்லப்பட்டு, ஊனமாக்கப்பட்டு விட்டனர். இனி மீதம் உள்ளவர்களையும் முறையாக கொல்லவும் ஊளனப்படுத்தவும் இத்திய அரசு முயன்று வருகிறது.



# மெஹ்பூபா முப்தி

மெஹ்பூபா முப்தி கஷ்மீரில் நடந்த சட்டசபை தேர்தலுக்குப் பின் ஒரு பெரும் தவறைச் செய்தார். அது பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தார். மொத்தமுள்ள 87 கஷ்மீர் சட்டசபை உறுப்பினர்களில் 28 இடங்களை மெஹ்பூபா முப்தியின் மக்கள் ஜனநாயக கட்சி - PDP கட்சிப் பெற்றிருந்தது. இந்தக் கட்சியே அதிக இடங்களைப் பெற்ற கட்சி. இதற்கு அடுத்தாற் போல் (அதிக இடங்களைப் பெற்ற கட்சி) பாரதீய ஜனதா கட்சி 25 இடங்களும், ஷேக் அப்துல்லாஹ்வின் பேரன் நடத்தும் தேசிய காங்கிரஸ் (இந்த பெயர் ஷேக் அப்துல்லாஹ் வைத்தது) 15 இடங்களைப் பெற்றது.

காங்கிரஸ் கட்சி 15 இடங்களைப் பெற்றது. இந்த நிலையில் ஆட்சி அமைக்க 44 இடங்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் தேவை. மெஹ்பூபா முப்திக்கு காங்கிரஸ் கட்சி(15 இடங்கள்) தேசிய காங்கிரஸ் கட்சி (12 இடங்கள்) ஆகியவை ஆதரவு தருவதாக அறிவித்தன. இந்த நிலையில் அவருக்கு மெஹ்பூபா முப்திக்குக்கு 28+15+12=55 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்து விடுகின்றது. ஆனால் அந்த அம்மணி பாரதீய ஜனதா கட்சியின் 25 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவைப் பெற்று ஆட்சியை அமைத்தது.

அதாவது தேர்தல் பிரச்சாரங்களின் போது பாரதீய ஜனதா கட்சியை எதிர்த்து பேசி மக்களின் ஓட்டுக்களாய் பெற்றுவிட்டு பிறகு அந்தக் கட்சியோடு கை கோர்த்து ஆட்சியை அமைத்து போதாக்குறைக்கு அவர்களுக்குத் துணை முதல்வர் பதவியை தந்தது. இன்னும் பல பதவிகளையும் தந்தது. இது மக்களிடையே பயங்கரமான அதிருப்தியை ஏற்படுத்தியது.

பதவியில் அமர்ந்த நாள் முதல் பாரதீய ஜனதா கட்சியினர் முதலமைச்சர் மெஹ்பூபா முப்தியின் ஆட்சியை வழிமறித்துக் கொண்டே இருந்தார்கள். கஷ்மீரை மந்த நிலைக்கு கொண்டு வருவதிலேயே குறியாக இருந்தார்கள். அத்தோடு கஷ்மீர் தலைமைச் செயலகத்திலும் இதரப் பகுதியிலும் பாதுகாப்பாக வைத்திருந்த பழங்கால ஆவணங்கள் அனைத்தையும் கையகப்படுத்தினார்கள்.

அத்தோடு ஒவ்வொரு கட்சியிலும் அதாவது பாரதீய ஜனதா கட்சி அல்லாத கட்சிகளில் எத்தனை செயல் வீரர்கள் இருக்கின்றார்கள் என்ற தகவலை சேகரித்தார்கள். அவர்களின் முகவரிகளோடு அவர்களின் உற்றார் உறவினர்கள் இப்படி எல்லா தகவல்களையும் சேகரித்தார்கள். அங்கே அனைத்து கட்சிகளிலும் இருந்த முஸ்லிம்களைப் பற்றிய தகவல்களைத்தான் அதிகமாக சேகரித்தார்கள்.

கஷ்மீருக்குத் தாங்கள் செய்திடவிருக்கின்ற மாபாதகத்திற்கு எதிராக யார், யாரெல்லாம் களப்பணி ஆற்றி மக்களை ஒன்று திரட்டிடும் ஆற்றல் பெற்றவர் என்ற கணக்கெடுப்பை கட்சிதமாக முடித்தார்கள். குக்கிராமத்து மக்களை கூட அணி திரட்டிடும் ஆற்றல் பெற்றவர்கள் யார்? யார்? என்ற தகவல்களையும் துல்லியமாக சேகரித்தார்கள். இதனைத் தொடர்ந்து அங்கிருக்கும் பள்ளிவாசல்களின்,



# யின் துரோகம்

மஸ்ஜித்களின் தகவல்களைத் திரட்டினார்கள். அந்த மஸ்ஜித்களை நிருவகிப்பவர்கள், அவர்களின் குடும்பம் ஆகியவைப் பற்றின தகவல்களையும் திரட்டினார்கள். அதேபோல் காங்கிரஸ் கட்சி தேசிய காங்கிரஸ் கட்சி இவற்றின் நிருவாகிகள், தொண்டர்கள், அதற்குக் கீழுள்ள களப் பணியாளர்கள் இவர்களைப் பற்றிய தகவல்களையும் சேகரித்தார்கள்.

எந்த அளவுக்கு இந்தத் தகவல் சேகரிப்பு துல்லியமாக நடந்தது என்றால் முஹம்மத் அலி சாகர் என்றொரு சமூக ஆர்வலர். இவர் கஷ்மீரிலுள்ள ஏழைகளோடு நெருங்கிய தொடர்புடையவர். ஏழைகளுக்கு உதவிகளைப் பெற்றுத் தருபவர். இவரைப் பற்றிய தகவல்கள் இவர் உதவி செய்யும் ஏழைகளைப் பற்றிய தகவல்கள் இவரோடு களப்பணியாற்றிடுபவர்கள் பற்றிய தகவல்கள் அனைத்தையும் திரட்டினார்கள்.

*2014*ஆம் ஆண்டு மோடி ஆட்சிக்கு வந்த நாள் முதலே வருமான வரித்துறை (Income Tax Department) அமலாக்கத்துறை (Enforcement Directorate) தேசிய புலனாய்வு முகமை (National Investigation Agency) இவற்றையெல்லாம் மக்கள் நல ஆர்வலர்கள் மீது ஏவி விட்டார்கள்.

அவர்கள் மீது பொய் வழக்குகளைப் பதிவு செய்தார்கள். இதன் மூலம் அவர்களை அச்சுறுத்தினார்கள். அங்கிருந்த பணக்காரர்களின் சொத்துக்களை முடக்கினார்கள்.

இதையெல்லாம் தட்டிக்கேட்டிட மெஹ்பூபா முத்தியால் முடியவில்லை.

### அதிருப்தி

மெஹ்பூபா முப்தி பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தவுடன் மொத்த கஷ்மீர் மக்களின் அதிருப்திக்கும் ஆளானார். அந்த நிலையில் அவர் பாரதீய ஜனதா கட்சியினை கழற்றி விட்டு விட்டு இன்னொரு கட்சியுடன் சேர்ந்திட இயலாது காரணம், மக்கள் வெறுப்பை சம்பாதித்துக் கொண்டு மெஹ்புபா முப்தியுடன் யாரும் கூட்டுச் சேர்ந்திட விரும்பவில்லை. ஆகவே பதவியை காப்பாற்றிட வேண்டும் என்றால் பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டுச் சேர்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

அதே போல (Gps Co Ordinates) என்ற வழித்தடங்கள் பற்றின இணையதள சேவையை அடிக்கடி பயன்படுத்துபவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தார்கள். அவர்களை அழைத்து நாள் கணக்கில் வைத்து விசாரணை என்ற பெயரில் சித்திரவதைப்படுத்தினார்கள்.



### பத்திரிகையாளர்கள்

கஷ்மீரில் அதிகமாக விற்பனையாகும் பத்திரிகை “கிரேட்டர் கஷ்மீர்” என்பதாகும். அவர்களுடைய இன்னொரு பத்திரிகை கஷ்மீர் உஸ்மா. இந்த இரண்டு பத்திரிகைகளின் உரிமையாளர் “ஃபயாஸ் காலூ”. இவரை என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமை ஆறு நாட்கள் விசாரணை நடத்தியது. இந்தப் பத்திரிகையில் பணியாற்றிடும் இராஃப் அமீர் என்ற நிருபரை காரணம் சொல்லாமல் சிறையிலடைத்தார்கள்.

அதேப்போல கல்லெறிந்து போராடுபவர்களின் குடும்பங்களிலும் கடைசி உறுப்பினர்கள் பற்றிய தகவல்களும் சேகரிக்கப்பட்டன. கல்லெறிந்து போராட்டங்களை நடத்தியவர்களின் குடும்பத்தினர் தீவிர கண்காணிப்பு இருக்கும் கைதுகளுக்கும் உள்ளாக்கப்பட்டார்கள்.

இவர்களின் குடும்பத்தைச் சார்ந்த மைனர்களும், குழந்தைகளும் கூட கண்காணிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

### குழந்தைகள்

ஆகஸ்ட் 5ஆம் நாள் அறிவிப்புக்கு 10 நாள்களுக்கு முன்பு அதாவது ஜூலை 25ஆம் நாட்களில் குழந்தைகள் பலரும் பாதுகாப்புப் படையினரால் காவலில் வைக்கப்பட்டார்கள்.

இதை ஆகஸ்ட் 5இல் நடந்த கெடுபிடிகள் பற்றி கள ஆய்வை மேற்கொண்ட Jean Dreze - ஜூன் டிரஸ் இ என்ற பெண்மணியும் கவிதா கிருஷ்ணன் என்ற பெண்மணியும், மைமுனா மொல்லா என்ற பெண்மணியும் மேற்கொண்ட கள ஆய்வில் தெளிவுபடுத்தினார்கள்.

ஒரு குழந்தையை பாதுகாப்புப் படையினர் தடுப்புக் காவலில் வைப்பதற்காக அழைத்துச் செல்வதை அவர்கள் ஆவணப்படுத்தியுள்ளார்கள். அதை வீடியோவாக வெளியிட்டிருந்தார்கள். (ஆதாரம்: Quint. com 14.08.2019)

இவையும் இன்னும் பல வீடியோக்களையும் அவர்கள் பிரஸ் கிளப் - இல் (Press Club) கஷ்மீர் தலைநகர் ஸ்ரீ நகரில் அவர்கள் வெளியிட வந்த போது காவல்துறையினர் தடுத்து விட்டார்கள்.

அந்த வீரமங்கை மூவரும் மேற்கொண்ட கள ஆய்வு இப்போது நடந்தவை என்றாலும் இவற்றிற்கான முன்னேற்பாடுகளும் தகவல் சேகரிப்புகளும் மெஹ்பூபா முப்தியின் ஆட்சியின் போது தான் நடந்துள்ளன.

### கஷ்மீரில் அமெரிக்க - இஸ்ரேலிய உளவுத் துறையினர்

Caravan - கேரவான் என்ற பத்திரிகை இந்தத் தகவலை பதிவு செய்கின்றது.

“ஸ்ரீ நகர் நகரம். சின்ன சின்ன பார்சல்களாகப் பொதியப்பட்டு நிறுவகிக்கப்படுகிறது. இந்த சின்ன சின்ன பகுதிகளிலும் எல்லாப் பக்கங்களிலும் காவல்துறையினரால் முற்றுகையிடப்பட்டுள்ளது. இந்த உத்தியை வகுத்துத் தந்தவைகளில் ஒன்று, “அமெரிக்க ஆலோசனை வழங்கும் நிறுவனம் - American Consultancy, அல்லது இஸ்ரேலைச் சார்ந்த ஆயுத ஒப்பந்தக்காரர்கள் - Israel Arnox Contractors. இந்தத் தகவல்களை ஒரு நிறுவனம் தருகின்றது. அதன் பெயர் பாதுகாப்புகளை அலசி ஆலோசிக்கும் கிராய்வைன் - Security Analyst Community Grewine என்ற நிறுவனம் தருகின்றது.

தேசிய நுண்ணறிவு ஆய்வு மையத்தைச் சார்ந்த அதிகாரிகள் அலுவலர்கள் அங்கே குவிக்கப்பட்டுள்ளார்கள். (Huge numbers of official from National Technical Research Organizations) இவர்கள் ஸ்ரீ நகரின் குப்காப் ரோடு, சர்ச் லேன் என்ற கிருஸ்தவ ஆலயச் சந்து இவற்றில் தான் அதிகமாகக் குவிக்கப்பட்டுள்ளார்கள் இவர்கள் பயங்கரமான கண்காணிப்புகளைச் செய்து வருகின்றார்கள். இதில் (இந்தக் கண்காணிப்பில் ஆளில்லா விமானத்தைப்

பறக்க விடுவதும் அடங்கும்) (ஆதாரம்: The Caravan as Quoted in Quint.com 14.08.2019)

இத்தனையையும் திட்டமிட்டதும் பெரும்பானவற்றைச் செயல்படுத்தியதும் மெஹ்பூபா முப்தியின் ஆட்சியில் தான்.

## கவர்நர் ஆட்சியின் போது

தங்களது அடிப்படை வேலைகள் அனைத்தையும் முடித்து வைத்து விட்டு அவருடைய ஆட்சியைக் கவிழ்த்தார்கள். ஒரே காரணம் அவர்களுடைய சதித்திட்டம் நிறைவேற்றிடும் வாய்ப்பும், காலமும் கனிந்து விட்டது. ஆட்சிக் கவிழ்ப்பு ஜூன் 19, 2019 இல் நடந்தது.


ஆட்சியைக் கவிழ்த்தவர்கள் மெஹ்பூபா முப்தி அல்லாத ஏனைய கட்சிகளை இணைத்து ஆட்சி அமைத்திட அனுமதிக்கவில்லை. கவர்னர் ஆட்சியைக் கொண்டு வந்து விட்டார்கள்.

கவர்நர் ஆட்சியின் போது நிருவாகத்துறை காவல்துறை இவற்றில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள். தாங்கள் சொல்வதை அட்டி இன்றி அடிபணியும் அதிகாரிகளை முக்கியத் தளங்களில் கொண்டு வந்து அமர்த்தினார்கள். எல்லா அதிகாரிகளும் அரசுக்கு சாதகமாகத்தான் செயல்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. இருந்தாலும் சில அதிகாரிகள் நேர்மையாகச் செயல்படுவார்கள். அடாவடித்தனங்களை மக்கள் மீது அரங்கேற்றிடச் சொன்னால் அவர்கள் அதைச் செயமாட்டார்கள். முந்தைய ஆண்டுகளில் சில அதிகாரிகள் குழந்தைகளை தடுப்புக் காவலில் வைத்திட வேண்டும் எனக் கட்டாயப்படுத்திய போது மறுத்துவிட்டார்கள் காவல்துறையைச் சார்ந்த பல அதிகாரிகள் இதுபோல காரணமற்றக் கைதுகளைப் பற்றி மேல் அதிகாரிகள் எதிர் கேள்வி கேட்டுள்ளார்கள். அவர்களெல்லாம் நிராயுத பாணிகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள். இதனால் சில பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் பொதுவான அதிகாரிகளுக்கும் தரப்பட்டிருந்த அனைத்து பாதுகாப்புகளும் விலக்கப்பட்டன. ஆகஸ்டு 5க்குப் பின் இவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.

மொத்தத்தில் கஷ்மீரில் நடந்தது அந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம் மட்டுமல்ல. அநீதி .

## அப்சல் குருவின் கொலை

நாடாளுமன்றத்தில் ஒரு தாக்குதல் 13 டிசம்பர் 2001 இல் நடந்தது. மொத்தப் பழியையும் கஷ்மீர் மக்கள் மீதே போட்டார்கள். அப்பாவி அப்சல் குருவை இரகசியமாகத் தூக்கில் போட்டு மொத்த விவகாரத்தையும் மூடினார்கள்.



அப்சல் குரு

நமது சமூக ஆர்வலர்கள் அத்தனை பேரும் அப்சல் குருவுக்காகப் போராடினார்கள். (PUDR - People's Union for Democratic Rights - என்ற ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் இயக்கம், ஓர் உண்மை அறியும் குழுவை அமைத்து ஆய்வுகளை மேற்கொண்டது. பல ஆயிரம் பக்கங்களைப் படித்து ஊர் ஊராகச் சென்று தகவல்களைத் திரட்டி 378 பக்கங்களுக்கு ஓர் அறிக்கையை தயார் செய்து தந்தது.

அந்த அறிக்கையில் கஷ்மீரைச் சார்ந்த STF - Special Task Force - சிறப்பு பணி படையும், டெல்லியின் சிறப்புக் காவல் படையும் - SPD - Special Police Delhi இன் துணை ஆணையர் ராஜ்பிர் சிங்கும் இணைந்து தான் நாடாளுமன்ற தாக்குதலை நடத்தினார்கள் என ஆணித்தரமாக வாதித்தது. அதனை தொகுப்பாகவும் வெளியிட்டது.

PUDR - என்ற ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் இயக்கம் உண்மையிலேயே இந்த நாட்டுக்கு ஒரு பெரும் சேவையைச் செய்தது. இந்த நாட்டின் நற்பெயரிலும், நல் வாழ்விலும் அது காட்டிய ஆர்வம் அளவிட இயலாத ஒன்று. அதன் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு நீதி நிலை நாட்டிடப் பட்டிருக்குமேயானால் கஷ்மீரிலிருந்து கன்னியாக்



ஷாந்தி பூஷன் ராம்ஜெட் மாலினி அருந்ததி ராய்

குமரி வரை மட்டுமல்ல உலகெங்கிலும் இந்த நாடும் நீதி நிர்வாகமும் மகோன்னத நிலைகளை அடைந்திருக்கும்.

இந்த நாட்டை உலக அரங்கில் உயர்த்திக் காட்டிட PUDR என்ற அமைப்பின் கீழ் இயங்கிய நல்ல உள்ளங்களை அரசும், நீதி நிர்வாகமும் கண்டு கொள்ளவே இல்லை.

## ஷாந்தி பூஷன் - ராம்ஜெட் மாலினி

இருவரும் உலகம் போற்று மூத்த வழக்கறிஞர்கள். இந்தியாவின் Senior Councils - முதிர்ச்சி பெற்ற வழக்கறிஞர்கள். வயதாலும் மூத்தவர்கள் இருவரும் இந்த நாட்டின் சட்ட அமைச்சர்களாக இருந்தவர்கள். இவர்கள் இருவரும் நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் வாதாடினார்கள்.

அன்றைக்கு உள்துறை அமைச்சராக இருந்த இந்தியப் பாசிசத்தின் தந்தை அத்வானி நாடாளுமன்ற தாக்குதலின் மூளை SAR - எஸ்.ஏ.ஆர். ஜீலானி என அடம் பிடித்தார். அவருடைய ஏவலின் கீழ் கஷ்மீர் சிறப்புக் காவல்படையும், டெல்லி சிறப்பு காவல் பிரிவின் துனை ஆணையர். ACP - Assistant Commissioner of Police அத்வானியின் நெருங்கிய நண்பர் ராஜ்பிர் சிங் - கும் எஸ்.ஏ.ஆர். ஜீலானிதான் மூளையாக செயல் பட்டார் என அடம் பிடித்தனர்.

நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் இலவசமாக வாதாட பெருந்தகைகள், ஷாந்தி பூஷன் அவர்களும் இராம் ஜெட் மாலினியும் வந்தார்கள். அவர்கள் நாடாளுமன்ற தாக்குதல் வழக்கு ஆதாரம், சாட்சியம், அடிப்படைகள் எதுவுமே இல்லாத வழக்கு என வாதாடினார்கள்.(PUDR Report - Page 47)

இன்னும் ஒரு படி மேலே சென்று இந்த வழக்கை விசாரித்த டெல்லி சிறப்புக் காவல் பிரிவின் தலைவர் ராஜ்பிர் சிங் அவர்களையும் கீழ் நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனைகளை வழங்கிய நீதிபதி எஸ்.என். டிங்காரவையும் தண்டிக்காதவரை யாருக்கும் நீதித்துறையின் மீது நம்பிக்கை வராது. என்றார்கள். (December 13 - Terror over Democracy - PUDR Report - Page:50)

## காலிங் கண்சால்வஸ்

அப்சல் குருவுக்கு, மூத்த வழக்கறிஞர் காலிங் கண்சால்வஸ் வாதாடினார். நந்தித்தா காஸ்கர் என்ற மூத்த வழக்கறிஞரும் மனித உரிமை ஆர்வலரும், இந்த வழக்கில் வாதாடினார்கள். இவர்கள் தான் இந்திய நீதித்துறையின் மானத்தைக் காத்திட வாதாடியவர்கள்.

## அருந்ததி ராய்

மனித உரிமை ஆர்வலர் உலக புகழ் பெற்ற எழுத்தாளர் பூக்கர் விருதைப் பெற்றவர். இவர் பல மூத்த வழக்கறிஞர்களை ஒன்று திரட்டினார். ஒரு பெரும் ஆய்வறிக்கையை டெல்லியில் வெளியிட்டார். அதிலும் பல மூத்த வழக்கறிஞர்கள் தங்கள் ஆய்வுகளை வெளியிட்டார்கள். (13 Dec - A Reader) எந்தப் பயனுமில்லை. இவர்கள் தாம் நம் நாட்டின் மானத்தையும் நீதித் துறையின் மானத்தையும் உலக அரங்கில் காப்பாற்றிட முயற்சி செய்தார்கள்.

## அரசே ஏற்பாடு செய்த தாக்குதல்

முடிவில் பொடா என்ற பாசிச பயங்கரவாத சட்டத்தை கொண்டு வந்திடவே நாடாளுமன்ற தாக்குதல் என்ற நாடகத்தை நடத்தினோம் என

மத்திய அரசின் செயலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த RVS மணி, சத்தீஸ் ஷர்மா ஆகியோர் ஒத்துக் கொண்டார்கள். (Times of India - 14.07.2015)

(விரிவான தகவல்களுக்குப் படியுங்கள். நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - மு. குலாம் முஹம்மத் - வேர்கள் வெளியீட்டகம் - பேசி: 8148129887)

அரசாங்கமே தாக்குதல்களை ஏற்பாடு செய்யும் நாடு இது.

**ஏ.ஜி. நூரானி**

இவர் மிகப் பெரிய வழக்கறிஞர். வரலாற்று ஆய்வாளர். பத்திரிகையாளர். இவர் அப்பாவி அப்சல் குருவை தூக்கிலே போடாதீர். அவரை தூக்கிலே போட்டால் அதோர் இமாலயத் தவறாக முடியும். கஷ்மீர் மக்கள் அந்நியப் படுவார்கள் என அறிவித்தார். மனித உரிமை போராளி அருந்ததி ராய் மக்கள் மன்றத்தில் தாக்கல் செய்த மாபெரும் ஆய்வறிக்கையாம் 13 டிசம்பர் என்ற தொகுப்பில் ஒரு கட்டுரையையும் எழுதினார்.

அந்தக் கட்டுரையில் ஒரு பெரும் கூட்டம் மக்கள் குறிப்பாக சிறுபான்மையினர் அவமானப்படும் அளவிலும் அந்நியப்படும் வகையிலும் ஒரு (அநீதி) தீர்ப்பு வழங்குவது தவறு. மக்களின் மனநிலையை பாதுகாக்க அவர்கள் அந்நியப் படுவதைத் தவிர்க்க நாம் அப்சல் குருவின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும். அதற்கு நமது சட்டங்களிலும் உலகில் நடந்த பல்வேறு வழக்குகளில் நடந்த தீர்ப்புகளிலும் இடமிருக்கின்றது என்றார்.

ஆனால் விடாப்பிடியாக அப்போதிருந்த காங்கிரஸ் அரசு பிப்ரவரி 9, 2013 காலை 7 மணிக்கு அப்சல் குருவை தூக்கிலே போட்டது.

இதன் பின்னும் சத்தியமே ஜெய்கோ - வாய்மையே வெல்லும் என்ச் சொல்ல வெட்கமாக இல்லையா?

ஆக இந்தியாவின் பெருமையை நிலைநிறுத்த எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளையும் நமது ஆட்சியாளர்களும், நீதித்துறையும் முறியடித்துவிட்டன.

**எம்.ஜி.எம்.**

# மக்கள் நலனில் ஆர்வம் கொண்டவர்கள் செய்தது என்ன?

இந்தியாவின் நலனில் அக்கறைக் கொண்டவர்கள் இந்தியாவோடு இணைப்பது கீழறுப்பு வேலைகளின் வழியாகவோ அந்த மக்களுக்கு மனித உரிமைகளை மறுப்பதன் மூலமாகவோ நடக்க வேண்டியதல்ல. அது சரியான, நேர்மையான நெறிமுறைகளின் வழி நடக்க வேண்டும். அந்த மக்களை நாம் இதயத்தால் இணைத்திட வேண்டும். அவர்களுக்கு இந்திய ஆட்சியாளர்களை நம்பலாம். இங்குள்ள நீதிமன்றங்களை அணுகலாம். நீதிமன்றங்கள் நீதியின் பக்கம் நிற்கும். அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை பிறக்கும் படி நடந்து கொள்ளுங்கள். மனித உரிமை மீறல்களை மறந்தும் செய்யாதீர்கள் என்றெல்லாம் தொடர்ந்து பல நூறு அல்ல ஆயிரம் கட்டுரைகளை பொதுத்தளத்தில் எழுதி இருந்தார்கள். பேசியும் வந்தார்கள்.

இந்தப் பணிகளை அவர்கள் ஒரிரு நாட்களிலோ, ஆண்டுகளிலோ அல்ல 70 ஆண்டுகளாகச் செய்து வந்தார்கள். ஆனால் ஆட்சியில் இருப்பவர்கள் தொடர்ந்து அநீதிகளையே செய்து வந்தார்கள்.

ஜனநாயகத்தைப் பெரிதாகப் பீற்றினார்கள். ஆனால் அங்கே 1953, 1964, 1975, 1987 ஆகிய ஆண்டுகளில் ஜனநாயகப் படுகொலைகளைச் செய்தார்கள். அதனால் தான் கஷ்மீரில் கொந்தளிப்புகள் தொடங்கியது. அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டார்கள். அமைதி கெட்டது மட்டுமல்ல இந்தியாவிலும், கஷ்மீரில் ஜனநாயகத்தை பேசியவர்களை மக்கள் நம்பவில்லை. இதுவெல்லாம் சரியல்ல எனப் பேசியவர்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள். குண்டர்களை விட்டு ஏவினோம். கஷ்மீரை முஸ்லிம்கள் இல்லாத மாநிலமாக மாற்றிட இளைஞர்களையும் குழந்தைகளையும் காணமலாக்கினார்கள்.

அவர்கள் நமது இந்திய நீதிமன்றங்களில் நீதி தேடினார்கள். நீதியை மறுத்தார்கள்.

“Muslims will not only not get Justice but will be brutalized in the name of Justice.”

இதுதான் மொத்த இந்தியாவிலும் முஸ்லிம்களுக்கு நீதி என அன்று 2003இல் மூத்த வழக்கறிஞர் சொன்னார். அதையே கஷ்மீரிலும் செய்தார்கள். இதையும் நடுவு நிலையாளர்களே அதிகமாக எதிர்த்தார்கள். போராடினார்கள்.

**எம்.ஜி.எம்.**




# 30 ஆண்டுகளாக நாங்கள் இரத்தத்தை தவிர வேறு எதனையும் பார்த்ததில்லை

*காஷ்மீரின் முன்னாள் முதல்வரின் மகள் இல்திஜா முஃப்தி 16 நாட்களுக்கு பிறகு வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார். வெளியில் வந்த பிறகு Huff post ஊடகத்திற்கு அவர் அளித்த பேட்டி. தற்போது காஷ்மீரை விட்டு அவர் வெளியேறி விட்டார். தான் இருக்கும் பகுதியை பற்றி வெளியிட வேண்டாம் என்றும் பத்திரிக்கையிடம் கேட்டுக் கொண்டார்.*

**20 நாட்களாக காஷ்மீரில் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது. இங்கிருந்து செய்திகள் எங்கு செல்கின்றன?**

நாங்கள் எங்கு செல்கிறோம், என்ன செய்கிறோம் என்பது அனைத்தும் இந்திய அரசை சார்ந்தே இருக்கிறது. அவர்கள் எல்லாவற்றையும் நுணுக்கமாக செய்கிறார்கள். ஐக்கிய நாடு சபை இந்தியா நிகழ்த்தி வரும் தகவல் தொடர்பு தடை, ஊரடங்கு உத்தரவு எல்லாவற்றையும் நிறுத்த சொல்லியிருக்கிறது என்று நம்புகிறேன். இது மனிதத்தன்மைக்கு எதிரானது. கொடுமையானது. நான் சத்தமிடுவதாக உங்களுக்கு தெரியலாம். காரணம், நாம் மிக கோபமாக இருக்கிறேன்.

**சட்டரீதியிலானதும், அரசியலமைப்பு என்றால் கூட பிரிவு 370ஐ மறந்துவிடுங்கள். அதைப்பற்றியான விவாதம் பல ஆண்டுகளாகவே தொடர்கிறது. இதனை எதிர்கொள்ள உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் எதற்காக இவ்வளவு நாட்கள் ஊரடங்கு உத்தரவு?**

காஷ்மீர் தற்போது இயல்பு நிலையில் இல்லை, எல்லாமே மாறிப்போயிருக்கிறது. நான் உங்களிடம் பேசிக்கொண்டிருக்கும் போது எங்கிருந்து தொடங்குவது என்பதே கடினம். அவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறோம்.

என்னுடைய தலைமுறையை சார்ந்த காஷ்மீரிகளிடம் கேளுங்கள். கடந்த 30 ஆண்டுகளாக நாங்கள் இரத்தத்தை தவிர வேறு எதனையும் பார்த்ததில்லை. எங்கள் வாழ்க்கை உடைந்து விட்டது. ஆனாலும் காஷ்மீரிகள் தங்கள் வாழ்க்கையை உருவாக்க போராடிக்கொண்டு தான் இருக்கிறார்கள். இங்கே அற்புதமான உணவகங்கள், அழகான காபி கடைகள், புத்தக நிலையங்கள், நூலகங்கள் என ஒவ்வொரு தொழில்முனைவோரின் நிலை இனி என்னவாக போகிறது? என் வாழ்க்கையில் ஒருபோதும் இவ்வளவு அடக்குமுறையை உணர்ந்ததில்லை. நாங்கள் எங்கள் நிலங்களிலேயே வெளியாட்களை போல் உணர்கிறோம். காஷ்மீர் எங்களுக்கு சொந்தமில்லாதது என்பதை போல நாங்கள் உணர்கிறோம். நான் நேற்று பள்ளத்தாக்கிலிருந்து வந்தேன் . இரண்டு நிமிடத்திற்கு ஒருமுறை நிறுத்தி

சோதனை செய்யப்படுகிறது. இது கொடுமையானது. மனிதாபிமானம் அற்றது. கூட்டு தண்டனையை போல் இருக்கிறது இச்செயல்.

**இது தொடர்ந்தால் என்ன நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

மக்களை நீங்கள் பிரசர் குக்கரின் நிலையில் வைத்திருக்கிறீர்கள். மூன்று வாரங்களாக அவர்களை பூட்டி வைத்திருக்கிறீர்கள். அவர்கள் இதனை மறந்து விடுவார்கள் என நினைக்கிறீர்களா?. கண்டிப்பாக இல்லை. இந்தியாவின் மற்ற பகுதிகளில் எதிர்ப்பு தெரிவிக்கும் போது நீங்கள் இப்படித்தான் நடந்து கொண்டீர்களா?

நாகலாந்து மக்கள் தங்கள் சொந்த கொடியுடனும், தங்களது தேசிய கீதத்துடனுமே இந்த சுதந்திர நாளை கொண்டாடினார்கள். ஆனால், நீங்கள் ஏன் காஷ்மீரை மட்டும் தனியாக பறித்தீர்கள்?.. இந்த நாட்டின் பன்முகத்தன்மை தான் இந்நாட்டின் பெரும் பலம். அதையே கெடுக்கிறீர்கள். கூட்டாட்சி முறையை ஒழிக்கிறீர்கள். நாளை உங்கள் மாநிலத்தையும் இதே மிருக பெரும்பான்மை பலம் கொண்டு மூன்றாக, நான்காகவும் பிரிக்கலாம்.



**ஆகஸ்ட் 15க்கு பிறகு இதற்கெல்லாம் முடிவு வரும் என மக்கள் நினைத்தார்கள். ஆனால் இது தற்போதைக்கு முடிவதாக தெரியவில்லை, மக்களின் எதிர்ப்பு குறையும் வரை இதே நிலையில் வைத்திருக்க அரசு விரும்புகிறது என்று நினைக்கிறீர்களா?**

அவர்கள் அனுமானம் பலிக்காது. முதலில் பிரிவு 370ஐ பறித்தீர்கள்.இது எங்களுக்கு பெருநாள் பரிசல்ல. எங்களுக்கு அரசியலமைப்பு கொடுத்த உத்தரவாதத்தை பறித்திருக்கீறீர்கள். காஷ்மீர் பிரச்சனையை பாருங்கள். மக்கள் சோர்வாக இருப்பதாக கருதுகிறீர்களா? அவர்கள் களைந்து போகப்போவதில்லை. காஷ்மீரிகள் இப்போது மிகவும் புத்திசாலிகள், அவர்கள் நங்கு படித்தவர்கள், அவர்கள் தங்கள் போராட்டத்தை அமைதியான முறையில் தொடர்வார்கள். நீங்கள் காஷ்மீர் மக்களை சிறையில் வைக்கலாம். ஆனால் அவர்களின் உணர்வுகளை சிறை வைக்க முடியாது.

**பல அரசியல் தலைவர்கள், ஏன் IASல் முதலிடம் பிடித்த ஷா பைசல் உட்பட பலர் வீட்டுக்காவலில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி?**

ஷா பைசல், அவர் காஷ்மிரில் உள்ளவர்களுக்கு பெரிய முன்மாதிரி. சிவில் சர்விஸ் தேர்வில் முதலிடத்தில் வந்தவர். சிறந்த நிர்வாகி. ஆனால், நீங்கள் அவரை அவமானப்படுத்தியுள்ளர்கள். அவரையும் சிறை வைத்திருக்கிறீர்கள். இது கொடுமையானது.

**நீங்கள் வீட்டுக்காவலில் தடுத்து வைக்கப்பட்டீர்கள். வீட்டுக்காவலில் இருப்பது என்பது என்றால் எப்படி?**

இது சிறையில் இருப்பதை போன்றது. என்னை எதற்காகவும் அனுமதிக்கவில்லை. யாரையும் சந்திக்க முடியவில்லை. வீட்டிற்கு வந்தவர்கள் வாசலிலேயே தடுத்து நிறுத்தி அனுப்பப்பட்டனர். என் வீட்டிற்கு வெளியே பூட்டு போடப்பட்டது. வெளியில் நின்றிருக்கும் அதிகாரிகளிடம் இதையெல்லாம் ஏன் செய்கிறீர்கள் என கேட்டேன். அதற்கு இதெல்லாம் உயரதிகாரிகளின் உத்தரவு என்றார்கள். டெல்லியில் இருக்கும் இருவரிடம் இருந்து தான் உத்தரவு வருகிறது என்றார்கள். வீட்டின் பணியாட்களையும் ஒவ்வொருவராக நிறுத்தினார்கள். அவர்கள் மூலமாக செய்தியை வெளியே சொல்வேன் என்று நினைத்தார்கள்.(பின்னர் தன் தாயின் கைது நடவடிக்கையை பற்றி கூறினார்)

**(இல்திஜா முஃப்தி அளித்த பேட்டியின் சுருக்கம்)**



# கஷ்மீர் குண்டு வெடிப்புகள் யாரால்? யாரால்? குடியரசு தலைவரின் விருது பெற்றவர்!

கஷ்மீரில் நமது பாதுகாப்புப் படையினர், காவல்துறையினர் இவர்களின் அநியாயங்கள் நாடறிந்த ஒன்றே! அதற்கெல்லாம் முன்பாக இந்தியாவின் இதரப் பகுதிகளில் வாழ்ந்திடும் மக்கள் கஷ்மீர் மக்களை, வெறுக்க வேண்டும் என்பதற்காக பல குண்டு வெடிப்புகளை நமது பாசிஸ்ட்டுகள் அரங்கேற்றினார்கள்.

இந்தக் குண்டு வெடிப்புகளின் பழியை கஷ்மீர் முஸ்லிம்கள் மேல் போட்டார்கள். பல நேரங்களில் இவர்கள் கஷ்மீருக்குள் ஊடுருவிய தீவிரவாதிகள் என்றும் கூறி வந்தார்கள். அருந்ததி ராய் போன்றவர் மேற்கொண்ட தொடர் ஆய்வுகளுக்குப் பின் அந்தப் பிதற்றல் நின்றது.

தொடர்ந்து பத்திரிகையாளர்கள், களப்பணியாளர்கள் இவர்கள் மேற்கொண்ட பெரும் பணியில் அங்கே நடந்த குண்டு வெடிப்புகளின் பின்னணி வெளிச்சத்திற்கு வந்தன. அவற்றுள் பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அடிப்படையில் ஒரு தகவலை இங்கே தருகின்றோம்;

*டைம்ஸ் ஆஃப் இந்தியா ஜூன் 5, 2013 இல் சஞ்சேய் கஜ்ஜூரிய்யா என்ற நிருபர் தரும் களச் செய்தி;*

*ஜம்மு: மிகவும் அழகாக சீருடை அணியும் காவலர் (துணை ஆய்வாளர் – Sub Inspectors) ஷரவ் கிருஷ்ணா ஷர்மா காவல் நிலையத்தின் மேல் வெடி குண்டு வீசியமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவர் வெடிகுண்டை வீசியது கஷ்மீரின் "டோதா" மாவட்டத்தில் தந்திரி என்ற காவல் நிலையத்தின் மீது.*

*காவல் நிலையத்தில் வெடிகுண்டை வீசிவிட்டு அந்த பழியை முஸ்லிம்களின் மேல் போட்டார். மிகவும் சாமர்த்தியமாக ஐந்து முஸ்லிம்களையும் கைது செய்தார். கைது செய்யப்பட்டவர்களின் பெயர்கள் முஹம்மத் யாகூப், அப்துல் ரஷீத், அக்தர் ஹூசைன், முஹம்மத் ரஃபீ, அல்தாப் ஹுஸைன், முஹம்மத் யூசுஃப்.*

*இவர்களில் முஹம்மத் என்பவர் சப் இன்ஸ்பெக்டர் ஷவ் கிருஷ்ண ஷர்மா தான் எங்கள் கைகளில் குண்டுகளைத் தந்து காவல் நிலையத்தின் மேல் எறிந்திட செய்தார் என்றார். இதனை ஆழமாக விசாரித்த போது சப் இன்ஸ்பெக்டர் ஷிவ கிருஷ்ண ஷர்மா தான் அந்தக் காவல் நிலையத்தின் மேல் தாக்குதல்*

நடத்திட எல்லா ஏற்பாடுகளையும் செய்தவர் என்ற உண்மைத் தெரிய வந்தது. இதே வாலிபர்களை அவர் கஷ்மீரின் இன்னும் பல இடங்களை வெடி குண்டுகளால் தாக்கிட பயன்படுத்தியுள்ளார் என்ற உண்மை தெரிந்திட வந்தது.

**ஜனாதிபதி விருது**

இப்படி சிறைபிடித்த கைதிகளை ஏவி குண்டு வெடிப்புகளை நடத்தி இவர்களெல்லாம் பாகிஸ்தானில் இருந்து இங்கே வந்து தாக்குதல் நடத்தியவர்கள், கிளர்ச்சியாளர்கள், என்றெல்லாம் சொல்லி, தன்னை கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் ஹீரோவாகக் காட்டிக் கொண்டார். பின்னர் ஜனாதிபதியின் Gallantry Award – என்ற வீர சாதனையாளர் விருதையும் வாங்கியுள்ளார்.

இப்படிப் பல காவல்துறை அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் ஜனாதிபதியின் விருதைப் பெற்றுள்ளார்கள் என்பதை நாம் நிறுவிய விடியல் வெள்ளி மாத இதழ் வழியாகவும், இப்போது வைகறை வெளிச்சம் வழியாகவும் தெளிவுபடுத்தி வந்திருக்கின்றோம்.

**கொலைகாரன் ஷர்மாவுக்கு பதவி உயர்வு**

இந்த ஷிவ் கிருஷ்ணா ஷர்மா இரண்டு முறை தனது சீனியர்களை எல்லாம் விஞ்சி விருதுகளை வாங்கி இருக்கின்றார். Out of Turn Promotions முறைகளை மீறிய விருதுகளை வாங்கி இருக்கின்றார்.

இதற்காக இவர் 68 அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை போலி எதிர் தாக்குதல்களில் – Encounters கொலை செய்திருக்கின்றார். இவரை பெருமையோடு "எதிர்த் தாக்குதல் வல்லவர் – Encounter Specialist" எனக் கூறி வருகின்றார்கள்.

இப்படித்தான் கஷ்மீரில் அப்பாவி முஸ்லிம் இளைஞர் கொலை செய்யப்பட்டார்கள்.

கஷ்மீரில் நித்தம், நித்தம் குண்டு வெடிப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன என நமக்குக் காட்டப்பட்ட செய்திகளின் மறுபக்கமும் இதுதான்.

TOI – Madurai/Trichi – Wednesday, June 5, 2013

**MGM**

# அட்டைப் படம்

ஆகஸ்டு 5, 2019 அன்று உள்துறை அமைச்சர் அமித்ஷா, அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 370வும், 35Aயும் அகற்றப் பட்டதாக அறிவித்தார்.

தொடர்ந்து ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தார். ஆயுதந்தாங்கிய படைகள் தடை செய்யப்பட்ட பெல்லட் துப்பாக்கிகளுடன் வீதிகளில் வந்தார்கள். வீடுகளின் உள்ளே புகுந்தும் மக்கள் மீது சரமாரியாக பெல்லட் குண்டுகளை பாய்ச்சினார்கள்.

இந்த பெல்லட் துப்பாக்கியிலிருந்து பாய்ந்து செல்லும் குண்டுகள் அந்த மக்களின் முகத்தைப் பாழ்படுத்தும், விழிகளில் பாய்ந்தால் பார்வையைப் பறிக்கும்.

ஆகஸ்டு 5க்கு முன் இந்தக் குண்டு களுக்குப் பலியானவர்கள் 1200 என அரசே ஒத்துக் கொண்டது. (விரிவான தகவல்களுக்கு படியுங்கள், வைகறை வெளிச்சம், செப்டம்பர் 2016 - அட்டப்படக் கட்டுரை - கஷ்மீர் மோடி அரசின் இனப்படுகொலை)

இப்போதும் பெல்லட் குண்டுகளைப் பாய்ச்சும் பாசிச பயங்கரவாதம். கஷ்மீரிலுள்ள சவ்ரா எனுமிடத்தில் ஆகஸ்டு 10, 2019இல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முதலில் அமித் ஷா உட்பட அனைவரும் எதுவும் நடக்கவில்லை என்றே அடம் பிடித்தார்கள். பின்னர் அது உண்மைதான் என ஒத்துக் கொண்டார்கள்.

சர்வதேச ஊடகங்கள் இந்தப் பெல்லட் குண்டுகளை உலகெங்கும் காட்டிய பிறகு இன் ஆகஸ்டு 14, 2019 அன்று ஜம்மு கஷ்மீர் (Additional Director General of Police) துணை காவல்துறை இயக்குநர் சில பெல்லட் காயங்கள் உண்டு என ஒத்துக் கொண்டார்.

ஆதாரம்: Aditya Menon - Ouint.com

**MGM**

# சர்வதேச காணாமல் ஆக்கப் பட்டவர்களின் தினம்

காஷ்மீரில் நடந்து கொண்டிருக்கும் கெடுபிடிகளில் ஒரு பெரும் உண்மை மறைக்கப்பட்டு வருகின்றது. அதுதான் காஷ்மீரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள். குறிப்பாக எல்லா வயதையும் சேர்த்த ஆண்கள். இதில் பெரும்பாலோர் இளைஞர்கள். மைனர்களும் உண்டு. ஒரு விசாரணை என்ற பெயரில் பட்டப்பகலிலும், நடுநிசியிலும் நமது பாதுகாப்பு படையினரால் கடத்திச் செல்லப்பட்ட இளைஞர்களே இந்த காணாமல் ஆக்கப்பட்டவர்கள். இதனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடிட ஓர் அமைப்பு 1994–இல் தொடங்கப்பட்டது. அதன் பெயர், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்களின் குழுமம் – **Association of Parents of Disappeared Persons - APDP**. இந்த அமைப்பின் வழி காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடிடும் பெரும் பணியை அவர்களின் பெற்றோர்கள் செய்து வருகின்றார்கள். இவர்களில் 70 ஆயிரம் பேர்களை நமது பாதுகாப்பு படையினர் கொலை செய்திருக்கிறார்கள் என இப்போது பிரண்ட்லைன் ஏடு விரிந்துரைக்கின்றது. (FRONTLINE July 20, 2018)

**படுகொலை செய்பவர்களை பாதுகாக்கும் சட்டம் - அப்சா**

பாதுகாப்பு படையினர், ராணுவத்தினர் செய்யும் எந்த கொலையையும், எந்த கற்பழிப்பையும்

## ஆகஸ்ட் 30 - 31



நீங்கள் தட்டிக் கேட்க முடியாது. காரணம் அங்கே "அப்சா" **Armed Forces Special Powers' Act** - ஆயுதம் தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் என்றொன்று இருக்கின்றது. இந்த "அப்சா" என்கிற சட்டம் அந்த மக்களை கொலை செய்யும் ஆயுதம் தாங்கிய நமது இந்திய படைகளை பாதுகாத்துக் கொண்டு இருக்கின்றது. இதனால் உற்சாகமடைந்த பாதுகாப்புப் படையினர் கொலைகளையும் தாராளமாக செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை, அரசியல் நிர்ணய சட்டம் காஷ்மீர் மக்களுக்கு சிறப்பு சலுகைகளை தருகின்றது என பீற்றிக் கொள்வோர், கண்டு கொள்வதே இல்லை. இதுபோன்ற இதர அள்தூக்கி சட்டங்கள் **Public Safety Act** - பொது பாதுகாப்புச் சட்டம், **Disturbed Areas Act** - பிரச்சனைக்குள்ளான பகுதிகளின் சட்டம் - அகற்றப்பட வேண்டியது இந்த சட்டங்களைத் தானே தவிர. 370ஐ அல்ல. இது மணிப்பூர் மாநிலத்திற்கு என தொடங்கி பின்னர் காஷ்மீரில் மையம் கொண்டு அந்த மக்களை கற்பழிக்கவும், கொலை செய்யவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தச் சட்டத்தை அகற்றிட அந்த மக்கள் போராடினார்கள். அரசியல் கட்சிகள், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தச் சட்டத்தை அகற்றுவோம்" என வாக்குறுதி தந்தார்கள். ஆனால் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததும் மறந்தார்கள். இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டுக் கொண்டே இருந்தார்கள். பெண்கள் கற்பழிப்புகளுக்கு உள்ளாக்கி கொலை செய்யப்பட்டார்கள்.

### குனான் - போஸ்பூரா கற்பழிப்புகள்

இந்த இரண்டு கிராமங்களிலும் அனைத்து பெண்களும் வயது வரம்பின்றி கற்பழிக்கப் பட்டார்கள். 1991இல் ராணுவத்தினர் நிகழ்த்திய இந்த கூட்டுக் கற்பழிப்புகளுக்கு 2019 வரை நீதி கிடைக்கவில்லை. "ஹர்ஸ் மந்திர்" போன்ற மனித உரிமை ஆர்வலர்கள் அதற்காக எடுத்த தொடர் முயற்சிகளில் பயன் ஏதும் இல்லாமல் போனது. (The Hindu - July 30, 2013). இன்றளவும் நீதி கிடைக்கவில்லை.

### எங்கே நீதி தேடினார்கள்?

நமது ராணுவப் பாதுகாப்பு படையினர்களால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள், தங்கள் அமைப்பின் வழி நீண்ட நெடியதொரு காலம் போராடி வருகின்றார்கள். அவர்களுக்கும் எந்த நிலையிலும் நீதி கிடைக்கவில்லை. இப்படி அநியாயத்திற்கு ஆட்பட்டு நிற்கும் அந்த மக்கள் நமது இந்திய நீதிமன்றங்களில் தானே நீதியை தேடினார்கள். ஆனால் நீதியின் வாடை கூட அவர்களை எட்டிப் பார்க்கவில்லையே. அவர்கள் வருடந்தோறும் ஒரு மாநாடு போல் கூடி அரசின் கவனத்தை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பக்கம் திருப்பினார்கள். அங்கேயும் நீதி கிடைக்கவில்லை. பின்னர் மாதம் தோறும் பத்தாம் நாள் கூடி அரசின் கவனத்தை காணாமல் ஆக்கப் பட்டவர்களின் பக்கம் திருப்பி வந்தார்கள். எந்த பயனும் இல்லை. 2019 ஆகஸ்டு 5 முதல் அந்த அவகாசமும் இல்லாமல் போனது. வேதனை என்னவெனில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்களின் குழுமத்தின் தலைவர், "பர்வீன் ஆகாங்கரை" ஐக்கிய நாடுகள் சபை வரை அனுப்பி வைக்கின்ற நமது அரசுகள், அவர் தந்த வழக்குகளில் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இத்தனைக்கும் அவர் சர்வதேச அளவில் பல விருதுகளை பெற்று வருகின்றார். தனது இடை விடா முயற்சிக்காக! இப்படி தொடர்ந்து நீதியை மறுத்து விட்டு அந்த மக்களை ஒட்டு மொத்தமாக சிறைபிடிப்பது என்ன நியாயம்? இப்போதும் நீதிமன்றங்கள் வாளாவிருக்கின்றனவே?

### பாதி விதவைகள்

கணவனை காவலர்களோ, இராணுவத்தினரோ ஒரு விசாரணை என்று பட்டப்பகலிலோ அல்லது நடு இரவிலோ பிடித்துச் சென்று விடுகின்றார்கள். அதன் பின்னர் எந்த தகவலும் தருவதில்லை. பல வருடங்கள் காத்திருக்கும் கணவனைப் பறிகொடுத்தப் பெண்களுக்கு, தாங்கள் விதவைகளா, இல்லையா? என்ற வினாவே வந்துவிடுகின்றது. இவர்களை "பாதி விதவைகள்" என அழைக்கின்றார்கள். **Half Widows** இது ஆங்கில அகராதிக்கு நமது இந்திய பாதுகாப்புப் படையினரால் காஷ்மீரில் அறங்கேற்றப்படும் கெடுபிடிகள் தந்த புதிய சொல்லாட்சி.

### புள்ளி விவரங்கள்

2009 ஆம் ஆண்டு வரை அரசே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என ஒத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை 15000 பேர். அதன் பின் அரசு எந்த புள்ளி விவரத்தையும் வெளியிட இயலாது எனக் கூறிவிட்டது. ஆனால் அனைத்து ஊடகங்களும் ஒத்துக்கொண்டது 70 ஆயிரம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்று. (Frontline - July 20-2018) 2013 ஆம் ஆண்டு வரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில், 700 கூட்டு புதைகுழிகளில் 7000 இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்கள். இந்தக்



கூட்டு புதைகுழிகளில் புதைக்கப்படுவதை கண்டு பிடித்த சமூக ஆர்வலர்கள் ஒரு பெரும் போரை சட்ட ரீதியாகவும், மக்கள் கருத்தை ஒன்று திரட்டுவதன் வழியாகவும் ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இவர்கள், "கூட்டுப் புதைகுழிகளில் இருப்பவர்கள் தான் காணாமல் ஆக்கப்பட்டவர்கள்" என தொடர்ந்து போராடினார்கள். ஆனால் அரசோ, "கூட்டுப் புதைகுழிகளில் இருப்பவர்கள் எல்லை தாண்டிய தீவிரவாதிகள்" என வாதிட்டது. முடிவில் 256 பிணங்களின் மேல் மரபணு சோதனைகள் நடத்தப் பட்டன. அதில் பிணமாக புதைக்கப்பட்டிருந்த அனைவரும் நமது பாதுகாப்புப் படையினரால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தான் என்பது ஆய்வில் நிரூபணமானது. ஆனால் அரசு அதற்கு மேல் "மரபணு சோதனை நடத்திட முன்வரவில்லை. காரணம் 15 சோதனைக் கூடங்கள் தாம் இந்தியாவில் இருக்கின்றதாம். ஆதலால் எல்லா பிணங்களையும் சோதனைக்கு உட்படுத்த இயலாது" எனக் கூறிவிட்டது. இதிலிருந்து காணாமல் ஆக்கப் பட்டவர்கள் கொலை செய்யப்பட்டு இருக்கின்றார்கள் என்பது திண்ணம் என்கின்றது APDP என்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்களின் குழுமம் தாக்கல் செய்த அறிக்கை. (Statement issued by APDP on Enforce Disappearance)

**மார்க்க தீர்ப்பு**

தங்களையும், தங்கள் குடும்பத்தையும் பாதுகாத்திட வேண்டியவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பதாலும், ஆயுதந்தாங்கிய படைகளின் சித்திரவதைகளுக்குள்ளாகும் பெண்கள், "நாங்கள் தற்கொலை செய்து கொள்ள அனுமதிக்கும் மார்க்க தீர்ப்பை வழங்குங்கள்" என இஸ்லாமிய மார்க்க அறிஞர்களிடம் மன்றாடுகிறார்கள். காரணம் இஸ்லாத்தில் தற்கொலை தடுக்கப்பட்டது.

**தீர்வு**

இப்படி அந்த மக்களுக்கு நீதியை தொடர்ந்து மறுத்து கொண்டிருப்பது தான் கஷ்மீரின் உண்மையான பிரச்சனை. அவர்கள் நமது இந்திய நீதிமன்றங்களில் தான் நீதியை தேடினார்கள். "நீதிமன்றங்கள் நிச்சயமாக நமக்கு நீதி வழங்கும்" என்ற நம்பிக்கையை அந்த மக்களிடம் ஏற்படுத்தி இருந்தால், அந்த மக்கள் இதயத்தால் நம்மோடு இணைந்திருந்திருப்பார்கள். அவர்கள் 1947 முதலே, நாங்கள் பாகிஸ்தானோடு இணைவது இல்லை என்பதை தெளிவுபடுத்தியே வந்திருக்கின்றார்கள். ஆனால் நாம் அவர்களை பாகிஸ்தானோடு தொடர்பு படுத்தி குழப்பி வருகின்றோம். கஷ்மீர் மக்களுக்கு இனியாவது நீதி கிடைக்குமா?

**பிரிவு 370 இன் உண்மை நிலை**

இந்தப் பிரிவு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தை வழங்குகின்றது. இந்தியாவின் இதர பகுதிகளுக்கு இயற்றப்படும் சட்டங்கள் அங்கே செல்லாது என்பதெல்லாம் வெறும் பம்மாத்து தான். பிரிவு 370 செயலில் இருக்கும் போதே அதைப் பிடுங்கிக்கொண்டார்கள். இந்தியாவின் அரசியல் நிர்ணய சட்டத்தில் 395 பிரிவுகள் இருக்கின்றன. இதில் 262 பிரிவுகள் காஷ்மீரில் செயல்படுகின்றன. மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ள 97 விவகாரங்களில், 94 விவகாரங்களில் மத்திய அரசு தலையிட்டுவிட்டது. இப்போது பிரிவு 370, 35A ஆகியவற்றினை அகற்றுதல் என்ற பெயரில் அந்த மக்கள் சித்ரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

**இந்தியாவின் சாபக்கேடான பாசிசம் தன் கெடுபிடிகளை அகற்றிட வேண்டும். அந்த மக்களை சுதந்திரமாக வாழ அனுமதிக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைத்திட வேண்டும்.**

# நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்

## பத்திரிகை அறிக்கை!

நாட்டில் நலிந்து கொண்டிருக்கும் பொருளாதாரம். தினமும் மூடப்படும் தொழில் நிறுவனங்கள். இந்த நிறுவனங்களில் வேலை செய்ததால் வேலை வாய்ப்புகளை இழந்து நிற்கும் தொழிலாளர்கள். தொழிலாளர்களாய் மாறிக் கொண்டிருக்கும் முதலாளிகள். இப்படி நாடு பிச்சை புகும் நிலை.

இந்தியா இது வரைக்கும் சந்தித்திருக்காத அளவில் பொருளாதார நெருக்கடிகள் மிகைத்து நிற்கும் போது சும்மா இருந்த கஷ்மீரை சீண்டி கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதற்கிடையே மத்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து 1.76 லட்சம் கோடி மத்திய அரசுக்கு மாற்றிட கட்டாயப்படுத்தி இருக்கின்றது.

2019 தேர்தலுக்கு முன்னரே மத்திய அரசு இப்படி ஒரு முயற்சியை எடுத்தது. ஆனால் அப்போதிருந்த ரிசர்வ் வங்கியின் தலைவர் முடியாது எனக் கூறிவிட்டார். அதனால் தான் இப்போதைய கவரனரை நியமித்தார்கள். வேறு எந்தப் பொருளாதார நிபுணரும் இந்த பொறுப்பை ஏற்றிட முன்வந்திடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

வங்கிகள் தள்ளாடும் போதும் நாட்டின் பொருளாதாரம் அல்லாடும் போதும் சீர் செய்திடவே இதுபோன்ற நிதியைப் பயன்படுத்திட வேண்டும். ஏற்கனவே வங்கிகளைக் கொள்ளையடித்துக் கொண்டு வெளிநாடுகளில் அழகிகளோடு பவனி வருபவர்களை ஒன்றும் செய்திடாத நிலையில் 1.76 லட்சம் கோடி பணத்தை அள்ளிக் கொடுப்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் என்பதை ரிசர்வ் வங்கியின் தலைவர் கவனிக்க வேண்டும்.

நாட்டின் நலனில், பொருளாதார நலனில் அக்கறையுள்ள முந்தைய பொருளாதார நிபுணர்கள் பணமதிப்பீட்டை செயல்படுத்திட மாட்டேன் எனக் கூறியதால் பதவி நீக்கப்பட்ட உலக அளவில் பிரசித்திப் பெற்ற பொருளாதார மேதை ரகுராம் ராஜன் ஆகியோர் இந்தியாவின் பொருளாதாரம் குறித்து தெரிவித்துள்ள கருத்துக்கள் - கவலைகள் - இவற்றை ரிசர்வ் வங்கியின் தலைவர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதில் மத்திய ரிசர்வ் வங்கியின் இலாபத்தில் 99% சதவிகிதத்தை மத்தியரசு ஒட்டுமொத்தமாக ஏற்கனவே கையகப்படுத்திக் கொண்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**இவண்**

**மு.குலாம் முஹம்மத்**

**நீதி, அமைதிக்கான மக்கள் இயக்கம்**

# அன்றும், இன்றும் தொடரும்

# தீண்டாமை!

வேதாரண்யம் பகுதியை சேர்ந்தவர் பாண்டி என்கிற பாண்டியன், இவர் முக்குலத்து புலிகள் அமைப்பில் இளைஞரணி மாவட்ட செயலாளராக இருக்கிறார். இவருக்கும் வேதாரண்யம் அருகே உள்ள ராமகிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்களுக்கும் கடந்த சில மாதங்களாக பிரச்சினையாகியிருக்கிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு ராமகிருஷ்ணாபுரத்தை சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரின் காலை பாண்டியனின் தரப்பு வெட்டி வன்மத்தை மூட்டியிருக்கிறது.

இந்த நிலையில் பிரச்சனை அமைதியாகியிருந்த நிலையில் 25.08.2019 மாலை 5 மணிக்கு பாண்டியன் தனது காரில் வந்து வேதாரண்யம் காவல் நிலையத்தின் வாசலில் நிறுத்திவிட்டு காவல் நிலையத்திற்குள் சென்றிருக்கிறார். ஏற்கனவே வெட்டுபட்ட கோபத்தில் இருந்த ராமச்சந்திரன் தரப்பினர் பாண்டியனின் காரை காவல் நிலையத்திற்கு முன்பே தீவைத்து கொளுத்தினர். அதனை கண்டு ஆத்திரம் அடைந்த பாண்டியனின் சமூகத்தினரும், அவரது ஆதரவாளர்களும் ஒன்று திரண்டு வேதாரண்யம் பேருந்து நிலையத்தின் வாயிலில் இருந்த டாக்டர் அம்பேத்கரின் சிலையை உடைத்து தலையை துண்டாக்கியதோடு, தலையை கீழே உருட்டினர்.

அதோடு ஆத்திரம் குறையாத பாண்டியன் தரப்பு வேதாரண்யத்தில் இருந்த தாழ்த்தப்பட்டவர்களின் கடைகளை அடித்து நொறுக்கி தரைமட்டமாக்கினர். இவ்வளவும் காவலர்களின் கண் பார்வையிலேயே அறங்கேறியதாக கூறி தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், ஒன்றுகூடி சிலை உடைப்பை கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

- நக்கீரன் இணையதளம் - 26.08.2019

வேதாரண்யம் அண்ணல் அம்பேத்கர் சிலை உடைப்பு சம்பவமும் அதனைத் தொடர்ந்து எழுந்த கண்டன நடவடிக்கைகளும் ஒரு விடயத்தை தெளிவாக உணர்த்துகிறது. அது;

இருபதாயிரம் ஆண்டுகள் பழைமையான நாகரிகம் என பீற்றிக் கொள்ளும் இந்த (செந்)தமிழ் நாட்டின் கலாச்சாரத்தை, நாகரிகத்தை ஆரியவர்த் மனுதர்ம சிந்தனைகள் வரலாறு தொட்டு ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன. அவை அப்படியே அடி மாறாமல் இன்றும் இருக்கின்றன. அவைகளை இரு கோணங்களில் இருந்து அணுகலாம்.

**ஒன்று;**

ஆதிக்க வர்க்கத்தின் அடிமைகளாக, ஏவல்களாக உள்ள "ஜாதி இந்துக்கள்" வரலாறு நெடுகிலும் "தாழ்த்தப்பட்ட மக்களின்" வாழ்விடத்தை, அடையாளங்களை அடித்து ஒடுக்குவதில் தீவிரமாக செயல்பட்டு கொண்டிருக்கின்றனர். அவை டிஜிட்டல் இந்தியாவான இன்றைய இந்தியாவிலும் தொடருகின்றது.

**இரண்டு;**

பாதிப்புக்குள்ளாகும் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது எதிர்நடவடிக்கையாக மேற்கொள்ளும்



செயல்கள், "திமிரி எழுவது. ஆதிக்க சாதியினர் எதை எதிர்த்தார்களோ, அடித்து உடைத்தார்களோ அதை மீள் உருவாக்கம் செய்து தங்களது வாழ்வில் பிரதிபலிப்பது. இவைகளே பாதிக்கப்பட்ட நசுக்கப் பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்வினையாற்றும் செயல்களாக இருக்கின்றன.

வேதாரண்யம் அம்பேத்கர் சிலை உடைப்பு சம்பவத்திலும் இதையே காண முடிந்தது. உடைத்த சிலைக்கு பதிலாக 12 மணி நேரத்தில் புதிய சிலையை நிறுவி தங்களது ஆளுமையை நிலை நாட்டியுள்ளனர் பாதிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள். பாராட்டத்தக்க விடயம் தான் அது. ஆனால்..........

## இத்தோடு இது முடிந்து விடுமா?

உயிரற்ற ஜடமாக இருக்கும் போதும் கூட அந்த மனிதரை அழிக்க வேண்டும் என்று அவர்களுக்கு எண்ணம் வருவதற்கு காரணம் என்ன? அவர் வாழ்ந்த காலங்களில் அவர் வாழ்ந்து காட்டிய முன்மாதிரிதான் அதற்கு காரணம். அந்த முன்மாதிரி தான் இவர்களை கோபமூட்டுகின்றன. எரிச்சலடைய செய்கின்றன. அந்த முன்மாதிரியை இன்றைய அம்பேத்கரியவாதிகள் தங்களது அடுத்த தலைமுறைக்கு போதிக்க முன்வருவதில்லை.

தன்னை சாதியின் சனாதான கொள்கைகளால் அவமானப்படுத்தும் ஒவ்வொரு செயல் பாடுகளையும் கவனித்த அண்ணல் அம்பேத்கரின் எதிர்வினையாற்றும் செயல்கள் எப்படி இருந்தது?

## அண்ணல் அம்பேத்கரும் - இந்து மதமும்

பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்த அண்ணல் அம்பேத்கர் தனது சமூகமும், அந்த சமூக மக்களும் ஆண்டாண்டு காலமாக அடிமைகளாக வாழ்ந்து வருவதை கவனித்த அவர் தனக்கும் தனக்குப் பின் வரும் தலைமுறையினருக்கும் இந்த இழிநிலை தொடரக் கூடாது என்று களம் கண்டார்.

தன்னை அடிமைப்படுத்தி அவமானப்படுத்திய இந்து மதத்தின் சாதிய வரணாசிரமக் தத்துவத்திற்கு எதிராகவும், அதை தூக்கிப் பிடித்தவர்களுக்கு எதிராகவும் வெகுண்டெழுந்தார். அவற்றிற்கு எதிராக ஒரு பண்பாட்டுப் புரட்சியை ஏற்படுத்தினார். இங்குதான் அம்பேத்கரியவாதிகள் சற்று நிதானமாக சிந்திக்க வேண்டும். தன்னை அடிமைப்படுத்தியவர்களுக்கு எதிராக அண்ணல் அம்பேத்கரின் புரட்சி என்பது திடீரென தோன்றும் உணர்ச்சிகளை மையமாக கொண்டதல்ல. அறிவுப் பூர்வமான, நிரந்தரத் தீர்வை, விடுதலையை மையமாக கொண்டது.

சமூக அளவில் ஏற்றத் தாழ்வுகளின்றி அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் என்று அண்ணல் அம்பேத்கர் இப்படிச் சொல்லுகின்றார்;

"இந்து மதம் சாதியையும், தீண்டாமையையும் ஒவ்வொரு இந்துவையும் கடைபிடித்து வாழச் சொல்லுகின்றது. கட்டாயப்படுத்துகின்றது. இதன் காரணமாகவே சமூகத்தில் பிரிவினைகள் உண்டாகின்றன. பொதுவாகவே இந்து மதம் சமூக ஒற்றுமைக்கு எதிரான மதம். இந்து மதத்திலிருந்து சமூக ஒற்றுமையை எதிர்ப்பார்க்க முடியாது. அது மக்களை பிரிப்பதற்கான ஆவலைத்தான் அதிகரிக்கச் செய்கிறது. ஆதலால் மக்கள் சமூக ஒற்றுமையோடு அமைதியாக வாழ வேண்டும் என்றால் இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள்"

*(அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? - டி.எம். உமர் ஃபாரூக் - பக்கம் . 1)*

ஆக இந்து மதம் இருக்கும் வரை இதுபோன்ற இன்னல்கள் ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து கொண்டே தான் இருக்கும். ஏனென்றால் தீண்டப்படாத மக்கள் இந்துக்கள் விதித்த எல்லைகளை மீறும் போது இதுபோன்ற கலவரங்கள், படுகொலைகளை சந்திப்பார்கள். இதனை நன்கு உணர்ந்த அண்ணல் அம்பேத்கர் அவர்கள் "இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள். இந்து மதம் சமூக ஒற்றுமைக்கு எதிரான மதம்" என்று வெளிப்படையாகவே அறிவித்திருந்தார்.

இன்னும் 1931 மே 31 அன்று தாழ்த்தப்பட்ட மக்களை இப்படி எச்சரித்தார்;

"தற்போதைய மதத்தை விட்டு வெளியேறி வேறொரு மதத்தினரோடு ஒன்றாய்க் கலந்திடாமல் வேறு எவ்வழியிலும் தாழ்த்தப்பட்டவர்கள் பலம் உடையவர்களாக ஆக முடியாது. அப்படி நீங்கள் செய்யா விட்டால் எதிர்கால சந்ததியினரும் உங்களைப் போலவே பரிதாபகரமான வாழ்வைத்தான் வாழ முடியும்"

இந்த எச்சரிக்கையை தாழ்த்தப்பட்ட சமூகத்தை வழி நடத்தும் இக்கால தலைவர்கள், சிந்தனையாளர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

வேதாரண்யம் அண்ணல் அம்பேத்கர் சிலை உடைப்பு சம்பவத்தில் அடுத்த 12 மணி நேரத்தில் புதிய சிலையை நிறுவி தங்களுடைய ஆளுமையை வெளிக்காட்டியவர்கள் அம்பேத்கரின் மேற்கொண்ட எச்சரிக்கையை மறந்து விட்டனர். அந்த மக்களுக்கு இந்த போதனையை எச்சரிக்கையை, அம்பேத்கர் அவர்களின் விருப்பத்தை போதிப்பதில் பொடுபோக்காக உள்ளனர். இது அண்ணல் அம்பேத்கர் பயந்ததை போல் தாழ்த்தப்பட்ட



மக்களுக்கு இன்னும் பின்னடைவை ஏற்படுத்துகிறது. அப்படி பின்னடைவை சந்தித்த அந்த மக்கள் மேலும் மேலும் கீழ் நிலைக்குத்தான் செல்கிறார்களே தவிர! எந்த முன்னேற்றமும் இல்லை.

ஆக தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப் பட்ட அந்த மக்கள் தங்களது சமூக வாழ்வில் பலம் பெற்றவர்களாக ஆக வேண்டும் என்றால் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் முன் வைத்த மதமாற்ற சிந்தனையை, அறிவுப் பூர்வமான புரட்சியை அந்த மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். இது மட்டுமே ஒரே தீர்வு. அண்ணல் அம்பேத்கரின் விருப்பமும் இதுவாகவே இருந்தது. ஆம்;

"நீங்கள் மதம் மாறுவதாக இருந்தால் இஸ்லாம் மதத்திற்கு மாறிவிடுங்கள்" என்று தான் நடத்தி வந்த "பகீஷ்கரித் பாரத்" எனும் பத்திரிகையில் வெளிப்படையாக அறிவித்தார்.

இப்போது உங்களுக்கு ஒரு சந்தேகம் எழலாம். அம்பேத்கர் பவுத்த மதத்திற்கு மாறினார். ஆனால் அவர், "எங்களை மட்டும் இஸ்லாம் மதத்திற்கு போகச் சொல்கிறாரே" என்று.

அண்ணல் அம்பேத்கர் ஏன் பவுத்தம் மதத்திற்கு சென்றார் என்பதை, மறைந்த மர்ஹூம் டி.எம். உமர் ஃபாரூக் (முன்னாள் டி.எம். மணி - பார்க்க அடிக்குறிப்பு - 1) அவர்கள் தனது "அம்பேத்கரின் மதமாற்றம்




பின்னணி என்ன?" எனும் நூலில் விளக்கியுள்ளார். அதன் சுருக்கத்தை இங்கே தருகின்றோம்;

"1930களில் அம்பேத்கர் இந்து மதத்தை விட்டு வெளியேறப்போவதாக முடிவெடுத்த போது பவுத்த மதம் அவரது தேர்வாக இருக்கவில்லை. இஸ்லாம், கிருஸ்தவம், சீக்கியம் ஆகிய மூன்று மதங்களில் ஏதேனும் ஒன்று என்பது தான் அவரது முடிவாக இருந்தது. இதையறிந்த டாக்டர் மூஞ்சே பம்பாய் சென்று அண்ணல் அம்பேத்கரிடம் மூன்று நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தினார். இறுதியில் நீங்களும் உங்களைப் பின்பற்றுபவர்களும் இஸ்லாத்திற்கோ, கிருஸ்தவத்திற்கோ செல்லாமல் சீக்கிய மதத்திற்கு செல்லுங்கள் என்று வற்புறுத்தினார். அம்பேத்கரும் அதை ஏற்க வேண்டியதாயிற்று. பின்னர் தர்மானந்தா கோசாம்பி போன்றோர்கள் அண்ணல் அம்பேத்கரை சந்தித்து "பவுத்த" மதத்தை பரிந்துரைத்தனர். (பார்க்க: குறிப்பு - 2)

(ஆதாரம்: அண்ணல் அம்பேத்கர் மதமாற்றம் பின்னணி என்ன? - டி.எம். மணி - வேர்கள் வெளியீட்டகம்)

இப்படி அண்ணல் அம்பேத்கர் பவுத்த மதத்திற்கு மாறியதை குறித்து அதே நூலின் ஆசிரியர் டி.எம். மணி (எ) உமர் ஃபாரூக் அவர்கள் தனது இன்னொரு நூலான சாதி ஒழிந்தது நூலில் குறிப்பிடும் போது இப்படிக் குறிப்பிடுகிறார்;

"அம்பேத்கரின் அறிவுரையைக் கேட்டு பவுத்த மதத்திற்கு மாறியவர்கள் மிகவும் சிறுபான்மையாக ஆகிப்போனார்கள். "மதமாற்றத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக அந்தஸ்து ரீதியில் கூடுதல் பலம் பெற முடியும்" என்ற அம்பேத்கரின் அசைக்க முடியா நம்பிக்கைக்கு மாறாக மதம் மாறிய பவுத்தர்கள் செயலற்று போனார்கள்.

உதாரணமாக டாக்டர் சேப்பன், சக்திதாசன் போன்றோர்களை சொல்லலாம். பவுத்த மதத்தை தழுவியதன் மூலம் தனி மனிதனாக தங்களை இவர்கள் "இந்து அல்ல" என்று சொல்லிக் கொள்ள முடியும். ஆனால் இவர்களை ஆதரிக்க, அரவணைக்க, ஒன்றிணைந்து குரல் கொடுக்க, போராட, பெண் எடுக்க, பெண் கொடுக்க, ஒன்றிணைந்த சமூக ரீதியான கூட்டு வாழ்க்கைக்கு யாரோடு கைகோர்த்து நிற்பார்கள்? தன்னை "இந்து அல்ல" என்று அறிவித்துக் கொண்டால் மட்டும் போதுமா? சமூக வாழ்வில் எல்லா மனிதர்களோடும் இணைந்திட வேண்டாமா? அண்ணல் அம்பேத்கரின் மதமாற்ற நம்பிக்கை என்பது வெறும் பெயரை மாற்றிக் கொள்ளும் விஷயம் அல்ல. மதமாற்றம் என்பது சமூகத்தின் கூட்டு வாழ்க்கைக்கு உதவுவதாக இருக்க வேண்டுமே தவிர மேலும் மேலும் தன்னைத் தனிமைப் படுத்துவதாக இருக்கக் கூடாது.

- சாதி ஒழிந்தது - பக்கம் : 74 - வேர்கள் வெளியீட்டகம்

இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள் அது மட்டுமே உங்களை மேம்படுத்தும் என்பது தாழ்த்தப் பட்ட சமூகத்து மக்களுக்கு அம்பேத்கர் சொல்லிய மிக முக்கியமான அறிவுரை. ஆனால் அப்படிப் போகும் மதம் ஒருவரை மேலும் தனிமையாக்கி விடக்கூடாது. முழுமையான, அமைதியான சமூக வாழ்க்கைக்கு, சமத்துவத்திற்கு அது இடமளிக்க வேண்டும். பவுத்தம் அதை சாதிப்பதில் தோற்றுவிட்டது என்பது தான் டி.எம். மணி (எ) உமர் ஃபாரூக் அவர்களின் வாதம்.

அதனால் தான் அவர் தனது மதமாற்றத்தின் போது இஸ்லாம் மதத்தைத் தேர்ந்தெடுத்தார். இஸ்லாம் அவரது வாழ்வை சமூக அந்தஸ்தை முழுமையாக மாற்றியது. தன்னுடைய இஸ்லாமிய

ஏற்பு நிகழ்வின் மூலம் தீண்டாமை ஒழிப்புக் குறித்த பார்வையை தலைகீழாக மாற்றிக் காட்டினார்.

"ஒன்று திரண்டு போராடு, வெகுண்டெழு, ஆவேசம் கொள், புரட்சி செய்" என்பதையெல்லாம் அவர் தற்காலிகமான பயனற்ற செயல்களாக பார்த்தார்.

"தீண்டப்படாத மக்களின் தாழ்வு நிலை என்பது வணங்குகின்ற கடவுளால் ஏற்படுகின்றது. வணங்குகின்ற கடவுளை மாற்றாதவரை தீண்டப்படாத மக்களின் வாழ்வில் எவ்வித மாற்றத்தையும் உருவாக்கி விட முடியாது. சமூக விடுதலை வேண்டும் என்றால் வணங்குகின்ற கடவுளை மாற்றுங்கள்" என்று சூளுரைத்தார். (தீண்டாமையைக் கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம் - பக்கம் 27 - வேர்கள் வெளியீடு)

ஆக தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான இதுபோன்ற அராஜகங்களுக்குண்டான ஒரே தீர்வு மதமாற்றம் மட்டும் தான். இதுதான் ஒரே தீர்வு. அண்ணல் அம்பேத்கர் கண்ட கனவும் கூட. இப்போது அம்பேத்கர் இருந்திருந்தால் அதைத்தான் செய்திருப்பார். செய்ய சொல்லியிருப்பார். இதை அந்த மக்களும் அவர்களை வழி நடத்தும் தலைவர்களும் பரிசீலிக்க வேண்டும்.

## வேதாரண்யம் அம்பேத்கர் சிலை உடைப்பு சம்பவமும் - மீனாட்சிபுரம் ரஹ்மத் நகர் ஆன கதையும் - புதிய தலைமுறை

வேதாரண்யம் அம்பேத்கர் சிலை உடைப்பு சம்பவத்திற்கு தமிழ் கூறும் நல்லுலகில் கடும் கண்டனங்கள் எழுந்தன. எல்லோரும் கண்டன உரைகளை மட்டுமே எழுப்பிக் கொண்டிருந்த நிலையில் புதிய தலைமுறை செய்தி நிறுவனம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, "மீனாட்சிபுரம் ரஹ்மத் நகர் ஆன கதையை" தீர்வாக சொல்லியது. அதை அப்படியே இங்கே தருகின்றோம்;

"ஒரு முறை சாதி பெரியதா? மதம் பெரியதா? என்று வைரமுத்துவிடம் கேட்ட போது, "சாதி" தான் பெரியது. ஏனென்றால் நமது இந்த இந்திய நாட்டில் மதம் மாற உரிமை உண்டு. சாதி மாற உரிமை இல்லை என்று கூறினார். அந்த அளவிற்கு சாதி எனும் வேண்டாத குப்பையை மனித மூளை சுமந்து திரிகிறது.

உண்மையில் சாதி என்பது ஒரு விதமான மனநிலைதான். மனிதர்கள் அனைவரும் சமம் என்பதை ஏற்றுக் கொள்வதில் நமக்கு இருக்கும் உளவியல் சிக்கல் தான் என்ன என்பது புரியவில்லை. சில நாட்களுக்கு முன் வேதாரண்யத்தில் ஏற்படுத்தப்பட்ட கலவரத்தில் அண்ணல் அம்பேத்கரின் சிலை உடைக்கப்பட்டது. இது நாம் இன்னும் வெகு தொலைவில் பயணிக்க வேண்டியிருக்கிறது என்பதை நமக்கு சொல்லும் துயர செய்தி. நமது எதிர்காலம் பற்றிய அச்சத்தை உருவாக்கியிருக்கும் செய்தி. இந்த நேரத்தில் "மீனாட்சிபுரம் ரஹ்மத் நகர் ஆன கதையைக்" கேளுங்கள்;

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை அருகே உள்ள ஒரு சிற்றூர் ரஹ்மத் நகர். 1981 வரை அதன் பெயர் மீனாட்சிபுரம். ஆம் 37 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவையே திடுக்கிட வைத்தது அந்த சம்பவம். மொத்த இந்தியாவின் கவனமும் அந்த சிற்றூரின் மீது தான் குவிந்திருந்தது. வாஜ்பாய். அத்வானி போன்ற தலைவர்களெல்லாம் மீனாட்சிபுரம் சென்று அவ்வூர் மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர்.

அப்படி என்னதான் நடந்தது மீனாட்சிபுரத்தில்?

அன்றைய மீனாட்சிபுரத்தில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வந்தன. மக்கள் தொகையாக கணக்கிட்டால் 1300 பேர். அனைவரும் பட்டியல் இனத்தைச் சார்ந்த இந்துக்கள். ஒருவருக்கொருவர் உறவினர்கள். அனைவரும் சொந்த நிலம் வைத்திருந்தனர். விவசாயம் தான் பிரதான தொழில். பொருளாதாரத்தில் கூட நல்ல நிலைமையில் தான் இருந்தார்கள். தினக்கூலியாக வாழ்க்கை நடத்தியவர்கள் வெகு சிலர் தான்.

இப்படி பொருளாதாரத்திலும், கல்வியிலும் தாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என பட்டியலின இளைஞர்கள் நெஞ்சு நிமிர்த்தி நடந்தாலும் அவர்களின் சாதியைக் காரணம் காட்டி அப்பகுதியைச் சார்ந்த உயர் சாதியினர் அவர்களை இழிவாகவே நடத்தினர். (பார்க்க: குறிப்பு - 3)


அறுபது வயது முதியவரை பத்து வயது சிறுவன் "டேய்" என ஒருமையில் கூப்பிடுவான்.

டீக்கடையில் "தனி டம்ளர்".

"வெள்ளை வேட்டி" அணிந்தாலோ கிண்டல்.

"பட்டப்படிப்பு" படித்தவரையும் சாதிப் பெயரை சொல்லி அழைத்து அவமரியாதை செய்வது என அந்த ஊர் பட்டியல் இன மக்கள் பட்ட பாடுகள் கொஞ்சம் நஞ்சமல்ல.

அடிப்படை மனித உரிமைகள், சமூக நீதி இவையெல்லாம் தங்களுக்கு மறுக்கப்படுவதோடு தலைமுறை




தலைமுறையாக இழைக்கப்பட்டு வருகின்ற தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுதலையாவது எப்படி? தாங்களும் தன்மானத்தோடு வாழ்வது எப்போது? என அடிக்கடி கூடி யோசித்து, விவாதித்த மீனாட்சிபுர மக்கள் ஒரு மனதுடன் உறுதியாக ஒரு முடிவை எடுத்தனர்.

பட்டியலின மக்களாகிய தாங்களும், தங்களது வருங்கால தலைமுறையினரும் மதிக்கப்பட, தன்மானத்தோடு தலை நிமிர்ந்து நடைபோட, சாதிக் கொடுமையிலிருந்து விடுபட, எல்லோருக்கும் சமமானவர்களாக வாழ, "இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறுகின்றோம்" என்று அழுத்தம் திருத்தமாக முடிவெடுத்தனர்.

அதை அவர்கள் அறிவித்த நாள் **19.02.1981.** இதன் தொடர்ச்சியாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனாட்சிபுர மக்கள் இஸ்லாம் மதத்திற்கு மாறினர். வெகு சிலர் மட்டுமே மதம் மாறாமல் இந்து மதத்திலேயே இருந்தனர்.

மதம் மாறிய பட்டியல் இன மக்களுக்கு எந்த அரசுச் சலுகைகளும் இனி கிடைக்காது எனத் தெரியும். சலுகைக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. "தாழ்த்தப்பட்ட சாதிக்காரன் என்ற முத்திரை இல்லாமல் வாழ்ந்தாலே போதுமானது" என்று மதம் மாறியவர்கள் சொன்ன வார்த்தையிலிருந்து அவர்களை இத்துணை காலம் ஆட்டிப்படைத்த சாதிக் கொடுமைகளின் வலியை உணர்ந்து கொள்ளலாம்.

மீனாட்சிபுரம் மக்கள் மதம் மாறிய செய்தி எட்டுத் திக்கிலும் எட்டித் தெறிக்க நாடே அதிர்ந்தது. மத்திய, மாநில அரசுகள் திகைத்தன. அதிகாரிகள் பட்டாளம் மீனாட்சிபுரத்தில் குவிந்தது.

பலதரப்பினர், "இஸ்லாம் மதத்திற்கு சென்ற அந்த ஊர் மக்களை "தாய் மதத்திற்கு" திரும்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் இஸ்லாம் மதத்திற்கு மாறிய அந்த மக்கள் தங்களது முடிவில் உறுதியாகவே இருந்தனர்.

உண்மையில் மீனாட்சிபுரம் மக்கள் மீது வெகு காலமாக நிகழ்த்தப்பட்ட சாதிக் கொடுமைகளின் வினை தான் அந்த மதமாற்ற முடிவே அன்றி அவர்கள் மதம் மாறியது பிரச்சனையே அல்ல.

அன்று கவிஞர் வாலி;

"ஆறுமுகம் என்றிருந்தோம். அப்துல்லாஹ் ஆனதுவும்

அய்யனார் என்றிருந்தோம். அந்தோனி ஆனதுவும்

வேறு முகம் நாம் காட்டி, வித்தியாசம் பல பேசி

உடன் பிறந்தோரை எல்லாம் ஒதுக்கியதால்

வந்த வினை" என்று கவிதை எழுதினார்.

**21**ஆம் நூற்றாண்டில் நாம் அனுப்பிய "சந்திரயான்" புகைப்படங்கள் நமக்கு வந்துக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் தான், உடைக்கப்பட்ட அம்பேத்கரின் சிலையின் புகைப்படங்களும் நமக்கு கிடைக்கிறது என்பது எத்துனை பெரிய துயரம்!

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது. இளைஞர்கள் சிலர் ஒன்றாக கூடி சிலை உடைப்பை கண்டித்து பேசிய காணொளிகளும் வைரலாகியிருக்கிறது.

அந்த காணொளிகளில்; "தாங்கள் வெவ்வேறு சமுதாயத்தில் இருந்து வந்தாலும்

ஒற்றுமையுடன் பழகி, வாழ்ந்து வருகின்ற இந்தக் காலத்தில் சாதிப் பார்க்காதீர்கள்" எனப் பேசியிருந்ததையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

**புதிய தலைமுறை தொலைக்காட்சி**
**27 ஆக்ஸ்டு 2019**

சென்ற மாதம் நாம் "ரஹ்மத் (எ) மீனாட்சிபுரம் மதமாற்றமா? மனமாற்றமா?" என்றொரு கள ஆய்வை மேற்கொண்டு அதை வீடியோவாகவும், எழுத்து வடிவிலும் வெளியிட்டிருந்தோம். அவை மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றிருந்தது. மேலும், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் மத்தியிலும் சமூக வலைதலங்களிலும் மீண்டும் மீனாட்சிபுரம் மதமாற்றம் பேசு பொருளானது. (பார்க்க: குறிப்பு - 4) அதன் பலனாக இப்போது, "வேதாரண்யம் சிலை உடைப்பு" சம்பவத்திற்கு புதிய தலைமுறை தொலைக்காட்சி, "மீனாட்சிபுரம் ரஹ்மத் நகராக ஆன கதையை" தீர்வாக சொல்லியது வரவேற்கத்தக்க செயலாகும். புதிய தலைமுறை தொலைக்காட்சி செய்தி நிறுவனத்திற்கு எங்களது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

## இறுதியாக

அண்ணல் அம்பேத்கரின் கனவான "இந்து மதத்தை விட்டு வெளியேறியே ஆக வேண்டும். எந்த மதம் உங்களை அரவணைக்கிறதோ அந்த மதத்திற்கு செல்லுங்கள்" எனும் அறிவுரையை செயல்படுத்துவதில் அமுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பது எனக்கு புரியவில்லை. உங்களை அரவணைக்க, கட்டியணைக்க, உங்களது தலைமைத்துவத்தை ஏற்று நடக்கக் கூட தயாராக இருக்கும் ஒரு சமூகத்தையும், அவர்களின் மார்க்கமான இஸ்லாத்தையும் அந்த மக்களிடத்தில் அறிமுகப்படுத்துவதை வெறுக்கும் சில தலைவர்கள், உண்மையில் அம்தேத்கர் அவர்களை முன்மாதிரியாக கொண்டவர்கள் தானா? என்ற சந்தேகம் எழுகிறது!

அண்ணல் அம்பேத்கர் கூறினார்; "என் விலா எலும்பு நோக நான் உங்களுக்கு எழுதி வைத்திருக்கின்றேன். எனக்குப் பின் வரக்கூடிய தளபதிகளாகிய உங்களால் முடிந்தால் இதனை ஓர் அடியாவது முன்னுக்கு கொண்டு வாருங்கள். இல்லையெனில் அதே இடத்திலாவது விட்டு விடுங்கள். தயவு செய்து பின்னுக்கு தள்ளி விடாதீர்கள்."

வாருங்கள்! உங்களுடைய ஆயிரமாயிரம் ஆண்டுகால போராட்டத்திற்கும், இழிவுகளுக்கும் பரிபூரண விடுதலையளிக்க "இஸ்லாம்" அழைக்கின்றது. முடிவு உங்கள் கையில்!

**த. அஷ்ரஃப் இஸ்லாம்**

## குறிப்பு 01

டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் நிலவுடைமை, பண்ணை அடிமை முறை போன்ற சாதிக் கொடுமைகள் தாண்டவமாடிய தஞ்சை பகுதியில் பிறந்து தன் வாழ்நாள் முழுவதும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடியவர். இறுதியில் இஸ்லாம் தான் ஒரே தீர்வு என்பதை புரிந்து 2007ஆம் ஆண்டு இஸ்லாத்தை தன் வாழ்வியலாக ஏற்றுக் கொண்டார். விரிவான தகவல்களுக்கு வாங்கிப் படியுங்கள்: சாதி ஒழிந்தது, செந்தமிழ் நாட்டுச் சேரிகள், ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும் - வேர்கள் வெளியீட்டகம் - *8148129887.*

## குறிப்பு: 02

மதமாற்றம் தான் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்குண்டான ஒரே தீர்வு என ஆணித்தரமாக நம்பிய அண்ணல் அம்பேத்கர் தன்னைப் பின்பற்றுபவர்களை இஸ்லாம் மதத்திற்கு மாறச் சொல்லி அறிவித்து விட்டு ஏன் அவர் மட்டும் பவுத்த மதத்திற்கு போனார் என்பதை டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் மிகவும் தெளிவாகவும், ஆதாரங்களுடனும் தனது "அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?" - (வேர்கள் வெளியீட்டகம் - *8148129887*) எனும் நூலில் விரிவாக சொல்லியிருக்கின்றார். வாசகர்கள் அதைப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## குறிப்பு 03

இப்போது அந்த மக்கள் இஸ்லாம் மதத்தின் வாழ்வியலோடு ஒன்றிணைந்து வாழ்ந்து வருகின்றனர். அந்த ஊர் மக்களின் ஒவ்வொரு வீட்டிலும் ஒருவர் வெளி நாடுகளில் வேலை பார்க்கின்றனர். அவர்களின் பிள்ளைகளில் பெரும்பாலோனோர் CBSC பள்ளிகளில் படிக்கின்றன. அனைவரும் சொந்தமாக தொழில் செய்துவருகின்றனர். பலருக்கும் வேலை தரும் எஜமானர்களாக இருக்கின்றனர். இதை நாங்கள்(வைகறை குழு) மேற்கொண்ட கள ஆய்வில் காண முடிந்தது. ஆருயிர் அண்ணன் தொல். திருமா அவர்கள் நடத்திய கள ஆய்விலும் இதை நீங்கள் காணலாம்.

## குறிப்பு 04

மீனாட்சிபுரம் குறித்த நாங்கள்(வைகறை குழு) நடத்திய கள ஆய்வு காணொளி இதுவரை 2 லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்களை கடந்து சென்று கொண்டிருக்கின்றது. அதை வீடியோ கேசட்டாகவும் வெளியிட்டிருக்கின்றோம். வாசகர்கள் அதைப் பெற்றுக் கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.போன்: *8248208144*



# 40 லட்சம் முஸ்லிம்கள் இந்தியாவை விட்டு வெளியேற்றம்

பன்மைத்துவமும், அமைதியும் மிகுந்திருந்த நாட்டில் இந்த மாதத்துடன் 40லட்சம் முஸ்லிம்களை கட்டாயமாக வெளியேற்ற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இதுவரை அவர்களுக்கிருந்த வாக்குரிமை பிடுங்கப்படப் போகிறது. அஸ்ஸாமில் இருக்கும் 40 லட்சம் பேர், முக்கியமாக அஸ்ஸாமில் வசிக்கும் முஸ்லிம்கள் வெளிநாட்டவர்கள் என்று கூறி வெளியேற்றபட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதனை இந்தியா முழுக்க எடுத்து செல்லவே மோடி திட்டமிட்டிருக்கிறார்.

இது அதிர்ச்சியானதாக இருந்தாலும், ஆச்சர்யப் படுவதற்கு ஒன்றுமில்லை. இந்து தேசியவாதியாக தன்னை அடையாளப்படுத்தும் மோடி உலகம் முழுக்க தன் ஆன்மிக சுத்திகரிப்பு திட்டத்தை கொண்டு சேர்க்கும் பணியை செய்து வந்தார் .

அஸ்ஸாமில் தற்போது நடக்கும் பிரச்சனையை அறிய 1971ன் காலக்கட்டத்திற்கு செல்ல வேண்டும். கிழக்கு பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் இந்தியாவின் உதவியுடன் பிரிந்து தனி நாடாக மாறியது. அப்போது பாகிஸ்தானின் அத்துமீறலில் ஒரு கோடிக்கும் அதிகமான பங்களாதேசி மக்கள் இந்தியாவின் எல்லைக்குள் தஞ்சம் புகுந்தனர். பிறகு, பாகிஸ்தான் பின்வாங்கியதும் 70 லட்சத்திற்கும் அதிகமான பங்களாதேசி மக்கள் தங்கள் நாட்டிற்கு திரும்பினர். மீதியிருந்தவர்கள் இந்தியாவிலேயே தங்கி விட்டனர்.

மதத்தை கடந்து பங்களாதேஷ் மக்களின் இனம்,கலாச்சார, மொழியியல் பண்புகள் முற்றிலும் அஸ்ஸாம் மக்களுக்கு அந்நியமானதாக இருந்ததால் அங்கே இரு பிரிவினருக்கும் இடையே பிரச்சனை உருவாகியது. இந்த பிரச்சனை அப்போதைய இந்திரா காந்தி அரசு எடுத்த நடவடிக்கையினால் பெரும் பூதாகரகமான விளைவை உருவாக்கியது. முஸ்லிம் ஓட்டு வங்கிக்காக இந்திரா காந்தி அரசு பங்களாதேசிலிருந்து வந்த மக்களுக்கு வாக்களிக்கும் அதிகாரத்தையும் அளித்து பாதி குடியுரிமையும் வழங்குவதற்கான வழிவகை செய்ததாக கூறப்பட்டது. இது 1983ல் அஸ்ஸாமில் இருந்த மாணவர்களுக்கு கொலைவெறியை தூண்டியது. இதன் விளைவு, ஆறு மணி நேரத்தில் 2000 முஸ்லிம் அகதிகள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். நவீன இந்தியாவில் நிகழ்த்தப்பட்ட மோசமான படுகொலைகளில் ஒன்றாக இருந்தது.

இதற்கு பிறகு 1985ல் அஸ்ஸாம் மாணவர் அமைப்புகள் எல்லாம் ஒருங்கிணைத்து அப்போதைய காங்கிரஸ் அரசு 1951ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட செய லில் இல்லாமல் இருந்த தேசிய குடியுரிமை பதிவு சட்டத்தை தீவிரமாக அமல்படுத்தப்படும் என சட்டம் இயற்றியது. அதாவது, மூன்று கோடிக்கும் அதிகமாக உள்ள அஸ்ஸாம் மக்கள் தாங்கள் இந்த நாட்டின் குடிமகன்கள் என்பதை நிரூபித்தாக வேண்டும் என்ற சூழல் உருவாக்கப்பட்டது. அஸ்ஸாமில் பிறந்திருந்தால் கூட 1971க்கு முன் தங்கள் வம்சாவளிகள் அஸ்ஸாமில் வாழ்ந்ததற்கான ஆவணத்தை சமர்பிக்க வேண்டும். அப்போதே அவர்கள் இந்திய குடிமக்கள்.

போதிய கல்விறியவில்லாத மாநிலத்தில், தங்களின் பிறந்த தேதி ஆவணத்தையே கையில் வைத்திருக்காத அஸ்ஸாமிய மக்கள், எப்படி தங்கள் வம்சாவளிகள் வாழ்ந்த ஆவணத்தை தந்திட முடியும்? இந்த நடவடிக்கை காங்கிரஸ் அரசுக்கு எந்த அரசியல் லாபத்தையும் தந்துவிடவில்லை. அதனால், உச்சநீதிமன்ற தலையீடு இதில் வரும் வரை இந்த திட்டம் பெரிதாக எடுத்து செல்லப் படவுமில்லை.

இந்த தேசிய குடியுரிமை பதிவு(ழிஸிசி) சட்டத்திற்கு தொந்தரவாக இருந்த காரணிகள் அனைத்தும் நீக்கப்பட்டன. இந்த திட்டத்தின் சாராம்சம் குடியுரிமைக்குள் வராதவர்களின் வாக்குரிமையை பறிப்பது மட்டுமல்ல. அவர்களை இந்தியாவை விட்டு வெளியேற்றுவதும் தான். இந்த திட்டத்தின் செயல்பாடுகள் மந்தமாக நடந்து வந்த நிலையில் அஸ்ஸாமை சேர்ந்த தலைமை நீதிபதி வழக்கின் தீர்ப்பை கொடுக்கிறார், பங்களா தேசிகளுக்கு எதிரான சூழலில் வளர்ந்த அவர், இந்த நடைமுறையை முடிக்க ஒரு தற்காலிக காலக் கெடுவையும், ஒரு சிக்கலான நடைமுறையையும் உருவாக்கினார்.

இதில் பெரும் வருத்தத்திற்குரிய விடயம் என்னவென்றால், இந்த நாட்டின் குடிமக்கள் என்று நிரூபிக்க அரசை விட தனி மனிதர்கள் தான் போராட வேண்டும் என்று இருந்தது. இது மக்களை நடு வீதியில் நிறுத்தியது. மரணத்தை விடவும் கொடியதாக இருந்தது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த காலக்கெடு அப்போது தான் பிரதமராக பொறுப்பேற்ற மோடிக்கு பெரும் பரிசு கிடைத்ததை போல் இருந்தது. இதனை தேர்தல் பிரச்சாரமாக பயன்படுத்தினார் மோடி. பங்களாதேசி முஸ்லிம்களை அஸ்ஸாமை விட்டு வெளியேற்றுவோம் என்றும் பேசினார். இந்துக்கள் கூட்டமாக கூடியிருந்த கூட்டத்தில் பேசிய மோடி, "அவர்கள் தங்கள் பெட்டி படுக்கைகளை தயார் செய்து கொள்ளட்டும். வெளியேறுவதற்கான நேரம் வந்துவிட்டது" என்று பேசினார். பாஜக தலைவர் அமித்ஷாவும் அவர்கள், "கரையான்கள் மற்றும் ஊடுருவல்காரர்கள்" என்றும் தொடர்ந்து பேசினார்.

அஸ்ஸாம் அரசு மோடி அரசால் கட்டுப்படுத்தப்படுகிறது. கடந்த வருடம் ழிஸிசி பட்டியல் இறுதியாக கொண்டுவரப்பட்டது. இது பெரிய பீதி அலையை அஸ்ஸாமில் உருவாக்கியது. 40 லட்சம் மக்களுக்கு மேல் அதில் வெளிநாட்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அஸ்ஸாம் மக்கள் தொகையில் 13% பேரை வெளிநாட்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள். ஆனால், எதிர்பார்த்ததை விட அதிகமான இந்துக்களும் அடங்கியிருந்தார்கள். தயாரிக்கப்பட்ட இந்த NRC பட்டியலில் பல முரண்பாடுகளும், குழப்பங்களும் இருந்தது. பல திறன்குறைவுள்ள இந்திய அதிகாரிகள் இந்த பட்டியலை தயாரித்திருப்பதை தெரிந்து கொள்ள முடிந்தது. அதனால் பல்வேறு முரண்கள் இந்த பட்டியலில் இடம்பெற்றிருக்கிறது. எதுவாயினும் இந்த மாத இறுதிக்குள் இந்த பட்டியலை நிறைவு செய்து சமர்ப்பிக்க வேண்டும் என்பது உச்சநீதிமன்ற உத்தரவு.

இதற்கிடையில், மோடி அரசு தற்போது ஒரு சட்டத்தை நிறைவேற்ற முயற்சித்து வருகிறது. அதாவது, அண்டை நாட்டிலிருந்து தஞ்சம் புகுந்திருக்கிற வெளிநாட்டவர்களில் முஸ்லிம்களை தவிர மற்ற அனைவருக்கும் குடியுரிமை வழங்க வேண்டும் என்பதே இச்சட்டம். ஆம், இந்தியா மதச்சார்பற்ற நாடு என்று நாம் நம்ப வேண்டும்.

அஸ்ஸாமில் Vice news என்ற ஊடகம் ஒரு ஆய்வு ஒன்றை நிகழ்த்தியது. அதில் பல்வேறு முரண்கள் வெளிக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த கட்டப்பஞ்சாயத்து நீதிமன்றங்கள், மனுதாரர்களின் கோரிக்கையை நிறைவேற்ற

எந்தவித ஒருங்கிணைந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என தெரிய வந்தது. அதிலும் இந்த தீர்ப்பாயம் பின்பற்றுகிற தெளிவான விதிகள் மனுதாரர்களுக்கு புரிந்து கொள்வதற்கே பெரிதும் கஷ்டத்தை கொடுக்கிறது.

வழக்குரைஞர்களை வைத்து தான் NRC பட்டியலில் இருந்து விடுவித்துக்கொள்ள முடியும். ஆனால் ஏழ்மை நிலையில் உள்ள பலர் வழக்குரைஞர்களை வைத்துக்கொள்ள முடியாது என்பதே நிதர்சனம். அதிலும் பட்டியலில் உள்ள 10ல் 9 பேர் இந்நிலையில் இருப்பவர்கள் தான்.

இந்திய ராணுவத்தில் 30 ஆண்டுகள் பணிபுரிந்து, அஸ்ஸாமில் நீண்ட காலம் பூர்விகம் கொண்ட இராணுவ அதிகாரி ஒருவர் முஸ்லிம் என்ற காரணத்திற்காக இந்த பட்டியலில் சேர்க்கப்பட்டு தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டார். பின்னர் நாடு முழுக்க எழுந்த குரலின் காரணத்தால் விடுதலை செய்யப்பட்டார். ஆனால், இதைபோல நிறைய பேரின் நிலையும் இதுவாகவே இருக்கிறது. பங்களாதேஷ் இவர்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதால் வெளிநாட்டவர்கள் என NRC பட்டியலில் இருப்பவர்கள் தடுப்பு காவலில் எடுக்கப்பட்டு சிறைப்படுத்தப்படுகின்றனர்.

இந்த மண்ணில் பிறந்தும் நாட்டின் குடிமக்கள் என்று பட்டியலில் இடம்பெறாத மக்கள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆனால் மோடி இதையெல்லாம் தடுத்துவிடப் போவதில்லை. அதற்கு மாறாக இந்த எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வழிவகைகளை செய்கிறார். இந்த மக்களை தடுப்புக் காவலில் சிறைப்படுத்த 10 பெரிய தடுப்பு முகாம்கள் உருவாக்கும் பணியும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை எடுத்து செல்வதற்கு ஏற்கனவே கையொப்பமிடப்பட்டிருக்கிறது. "சந்கேத்திற்குள்ளான வாக்காளர்கள்" மற்றும் "சட்ட விரோதமாக குடியேறியுள்ள ஊடுருவல்காரர்கள்" என்ற பெயரில் அஸ்ஸாமைப் போல் நாட்டிலுள்ள 130 கோடி மக்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்று தங்களை நிரூபிப்பதற்கான தேவை உருவாகலாம்.

**- அபூ சித்திக்.**

**(தகவல் - The week 26.08.2019)**


இறைவனின் அழகியத் திருப்பெயரால்



நியூ **மலேஷியா** டிராவல் சர்வீஸ்

பதிவு எண் : 2015/33/018/10098/ANSP

அரசு அங்கீகாரம் பெற்றது

உரிமை: S.B.S. பஷீர்

•பாஸ்போர்ட் ஆன்லைன்
•விமான டிக்கெட்
•விசா சர்வீஸ்
•ECNR & PCC
•எம்பஸி அட்டெஸ்டட்
•GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:

12, களைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைப்பேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789



# வாக்கு இயந்திரத்தில் நம்பகத்தன்மை 0% சதவீதம் அமெரிக்க முன்னணி நிறுவனம்

அமெரிக்காவில் உள்ள முன்னணி வாக்கு இயந்திரம் தயாரிப்பு நிறுவனம் இ.எஸ். அண்ட் எஸ். (எலக்சன் சிஸ்டம் அண்ட் சாஃப்ட்வேர்). தற்போது தனது வாக்கு எந்திர உற்பத்தியை முற்றிலுமாக நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளது. அதற்கு அதன் தலைவர் டாம் பர்ட் கூறிய காரணம் அவரது நேர்மையை பாராட்டும் விதமாக உள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்பாக அவரது தயாரிப்பு இயந்திரங்களை வைத்து ஒரு ஹேக்கர் பத்திரிக்கையாளர் சந்திப்பில் முன்பு வாக்கு இயந்திரத்தில் ஊடுருவ முடியும் என்று நிரூபித்தார். அன்று வேறு வழி தெரியாமல் சாக்கு போக்கு சொல்லி சமாளித்தாலும் மேலும் அவர்கள் கூறியது அனைத்தும் சாத்தியம் என்பது அப்போதே உணர்ந்து விட்டதாக டாம் பர்ட் கூறுகிறார். இப்போது கால தாமதமாகிவிட்டது என்று மன்னிப்பு தெரிவித்துள்ளார். இனிமேல் அவர்களது நிறுவனம் இந்த தயாரிப்புகளில் எப்போதும் ஈடுபடாது மேலும் வாக்குச்சீட்டு முறையே சிறந்தது மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்தது என்று வலியுறுத்தி உள்ளார்.

இந்தியாவில் தயாரிக்கும் வாக்கு இயந்திரங்கள் அனைத்தும் வெளிநாடுகளில் இருந்துதான் அதன் (chip)சிப்புகளை வாங்குகின்றனர். அந்த நிறுவனம் வெளிநாட்டு நிறுவனமாக இருந்தாலும் அதை நடத்துவதே இந்தியர்கள்தான் microchip inc.

இதை மேலும் ஆழமாக ஆய்வு செய்தால் குஜராத்தில் 20 ஆயிரம் கோடி மோசடி செய்த நிறுவனம் GEO. அதன் நிர்வாகத்தின் கீழ் தான் இந்த microchip நிறுவனமும் வருகின்றது. நமது சந்தேகம் என்னவென்றால் ஏன் இந்த வாக்கு இயந்திரம் மோசடிக்காக மோடியே 20,000 கோடியை அந்த நிறுவனத்திற்கு வழங்கி இருக்கக் கூடாது. மேலும் சிப் தயாரிக்கும் அதை எப்படி வேண்டுமானாலும் புரோகிராம் செய்யலாம். 3600 வாக்குகளை சேமிக்கும் திறன் இருந்தும் நாம் ஏன் 1200 உடன் நிறுத்திக் கொள்கிறோம் என்பதே ஒரு பெரிய கேள்வி.

தொடர்ந்து கண்மூடித்தனமாக மறுக்கும் தேர்தல் ஆணையம் நமது வாக்கு இயந்திரங்கள் எல்லாம் எதனோடும் தொடர்புகள் இணைக்க முடியாதவை என்பதே அவர்களது ஒற்றை பதில். 370 தொகுதிகளில் பதிவான வாக்குகளுக்கும், ஒப்புகை சீட்டுகளுக்கும் எப்படி வித்தியாசம் என்று கேட்டால் அந்த தகவலை நீக்கி விடுகிறார்கள்.

**தொடர்பு கொள்ள இயலாத இயந்திரங்களை ஊடுருவ முடியாதா?**

நிச்சயமாக முடியும். வீட்டில் சிறுவர்கள் வீடியோ கேம் விளையாடும் போது ஒருசில cheat code படுத்துவார்கள். உதாரணமாக வீடியோ கேமில் நாயகன் மற்றவர்களை சுட்டு வைத்துக் கொண்டு போயிருக்கும் போது ஒருசில நம்பர்களை அழுத்தினால் நாயகனை யாரும் வீழ்த்த முடியாது. இப்போது ஏன் இவர்கள் தனியார் பொறியாளர்களை பயன்படுத்தினார்கள் என்றும் வாக்கு இயந்திரம் எடுத்துச் செல்வதும் பாதுகாத்து வைப்பது பெரும் கேள்விக்குறியாகவே இருந்தது. இவர்கள் ஏன் ஒரு சில கோடுகளை செய்து வாக்காளர்களின் வெற்றி தோல்வி நிர்ணயிக்க முடியாது. ஏற்கனவே இயந்திரத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக உள்ளது என்றால் தேர்தல் ஆணையம் முழுக்க ஒரு கட்சியாகவே செயல்பட்டது என்று பல சமூக ஆர்வலர்கள் முன்னாள் ஐ.ஏ.எஸ் ஐ.பி.எஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். சில நாட்களுக்கு முன்பு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள் தேர்தல் ஆணையத்திற்கு அதில் இந்த தேர்தலில் எப்போதும் இல்லாத அளவுக்கு மோசடி நடந்திருப்பதாகவும் ஏன் பாஜக ஆளும் மாநிலங்களில் பின்னால் தேர்தல் நடத்தப்பட்டது என்றும் தமிழகம் கேரளம் ஆந்திரம் ஆகியவற்றில் ஏன் முன்னால் நடத்தப்பட்டது என்றும் கேள்வி எழுப்பினர். மேலும் காணாமல் போன முஸ்லிம் தலித் வாக்குகள் பற்றிய தேர்தல் ஆணையத்தின் பதில்கள் நம்பும் விதமாக இல்லை என்றும் கூறியுள்ளனர். வழக்கம்போல் தேர்தல்ஆணையம் இதற்கும் மௌனத்தையே பதிலாக தந்தது.

ஏற்கனவே முன்னாள் நீதிபதி கோல்சே பாட்டில் தலைமையில் இனிவரும் காலங்களில் வாக்கு இயந்திரம் பயன்படுத்த கூடாது என்று பிரச்சாரம் நாடு முழுக்க தொடங்கிவிட்டனர். இவர்கள் நடத்தும் போராட்டங்களை மீடியாக்கள் மக்களிடம் எடுத்துச் செல்வதில்லை. வட இந்தியாவிலும் மோடி வெற்றியை யாரும் கொண்டாடியதாக தெரியவில்லை. தேர்தல் வெற்றியின் மூலம் கிடைத்த அசுர பலத்தை அதன் ஆணி வேரிலிருந்து கேள்வியை எழுப்புவது அரசை பலவீனப்படுத்தும் என்பதை எதிர்க்கட்சிகள் உணர்ந்ததாக தெரியவில்லை.

- *சாதாரண கேள்விகளைக் கூட மக்கள் மத்தியில் கொண்டு செல்ல அஞ்சுகின்றனர்*
- *உதாரணமாக 20 லட்சம் இயந்திரங்கள் எங்கே சென்றன?*
- *ஏன் பதிவான வாக்குகளுக்கும் எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் வித்தியாசம் அதிக அளவில் இந்த முறை இருக்கிறது?*
- *எதற்காக தனியார் பொறியாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்?*
- *ஏன் தேர்தல் ஆணையம் 100% விவிபாட் வெரிஃபிகேஷன் செய்ய ஆரம்பத்திலிருந்தே மறுத்தது?*

**காலை இடைவேளை ஆபத்து**

நாளிதழ்களில் அவ்வப்போது இயந்திரங்கள் காணாமல் போகின்றன என்று சாதாரணமாக செய்தி வருகின்றன. மத்தியபிரதேசத்தில் 2000 இயந்திரங்கள் பாதுகாக்கப்பட்ட அறையில் காணவில்லை. உச்ச நீதிமன்றம் இதனை அவசர வழக்காக எடுக்க மறுத்துள்ளது அவர்கள் செய்யும் தவறுகளை சரி செய்வதற்கு வாய்ப்பு வழங்கியுள்ளது.

**அச்சத்திலேயே ஆழ்த்தி இருக்கும் யுக்தி:**

தொடர்ந்து பாஜக முத்தலாக் காஷ்மீர் பிரச்சனைகள் உடனுக்குடன் செயல்படுத்துவது எதிர்க்கட்சிகள் இயந்திரத்தின் மீது உள்ள கவலை முற்றிலுமாக மறந்து போகும். சில மாதங்களுக்குப் பின்பு வாக்கு இயந்திரத்தில் மோசடி நடந்துள்ளது என்று மக்கள் மன்றத்தில் எடுத்து சொன்னால் மக்கள் எந்தத் தேர்தலை கேட்கிறீர்கள் என்பர்.

மகாராஷ்டிரா அரசியல் தலைவர் ராஜ் தாக்கரே கூறும் கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகிறது. "வாக்கு இயந்திரங்கள் சென்று விட்டால் பாஜக தானாக சென்று விடும்" என்பது அவரது கருத்து. அவர் ஆகஸ்ட் 31 மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்துவதாக அறிவித்து இருந்தார். ஆனால் ஊடகத்தில் தேடி பார்த்தபோது அது பற்றி எந்த செய்தியும் வரவில்லை. மேலும் மேற்கு வங்க முதல்வர் மம்தாவை அழைப்பு விடுத்தார். ஆனால் அவர் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த குரலில் வாக்கு இயந்திரத்தை மக்கள் முன்பு அம்பலப்படுத்தினார் பிஜேபி பலவீனம் அடைவதை யாராலும் காப்பாற்ற முடியாது.

**அபுதாஹிர்**

# வாக்குறுதிகளும் நமது ஆட்சியாளர்களும்

தலையங்கம்

இன்று உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் மிகப்பெரிய பிரச்சனை கஷ்மீர் பிரச்சனை. இந்த மக்களுக்கு நமது ஆட்சியாளர்கள் வழங்காத வாக்குறுதிகளே இல்லை எனலாம்.

1947இல் இந்தியாவோடு கஷ்மீரை இணைத்திடும் போது உங்கள் கருத்துக்களைக் கேட்டுத்தான் முடிவெடுப்போம் என்றொரு வாக்குறுதி. இது மஹாராஜா ஹரிசிங் அந்த மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி.

அங்கு பிரச்சனைகள் வந்த போதெல்லாம் அந்த மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி.

ஏன் ஐக்கிய நாடுகள் சபையிலும் இதே வாக்குறுதியை வழங்கினோம். 1948இல் இந்தப் பிரச்சனை - கஷ்மீர் பிரச்சனையை - ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டு சென்றதே நாம் தான். அதாவது இந்தியா தான்.

அங்கே வாக்குறுதிகளை வழங்கியது பின்னாட்களில் “ஆசியாவின் ஜோதி” எனப் பெயர் வாங்கிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தாம்.

அடுத்து அன்றைய இரும்பு மனிதர் என்றும், இன்று மூவாயிரம் கோடி ரூபாயில் சைனாவால் செதுக்கப்பட்டு சிலை வைக்கப்பட்டவருமான சர்தார் வல்லபாய் பட்டேல், 1948இல் பண்டித நேருவுக்கு கொடுத்த கெடுபிடிகளின் வழி இந்தியாவின் துணை பிரதமரானார். அவர் தனது உரையில் இப்படி வாக்களித்தார்.

“சிலர் கூறுகின்றார்கள், முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்ட கஷ்மீர் பாகிஸ்தானோடு தான் இருந்திட வேண்டும் என்று அவர்களுக்கு நாம் சொல்வோம். நாங்கள் கஷ்மீரில் இருக்கின்றோம். காரணம் கஷ்மீர் மக்கள் நாம் அங்கே இருக்க வேண்டும் என விரும்புவதால். கஷ்மீர் மக்கள் நாம் அங்கே இருப்பதை விரும்பவில்லை என்றால் ஒரு நொடி கூட அங்கே இருக்க மாட்டோம்.” (Source: Hindustan Times Oct 31, 1948)

கஷ்மீரை இந்தியாவோடு இணைத்திட பயன்பட்ட அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370 ஐ அந்த மக்களின் ஒப்புதல் இல்லாமல் அகற்றிட மாட்டோம் என்றொரு வாக்குறுதியை வழங்கினோம்.

இப்படி கஷ்மீர் மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகளைப் பட்டியல் போட்டால் மாளாது. ஆனால் இன்று அந்த மக்களை மொத்தமாக பூட்டி வைத்து, கொன்று குவித்து அதன் சிறப்பு அந்தஸ்தை அகற்றி விட்டோம் என்கின்றோம்.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பல்வேறு ஆட்சியாளர்களையும், அரசுகளையும் வரலாறு சந்தித்திருக்கின்றது. அவற்றுள் இஸ்லாமிய ஆட்சியாளர்களையும், ஆட்சியையும் விஞ்சுவார் யாருமில்லை.

இஸ்லாத்தின் வரலாற்றை எழுதுபவர்கள் எல்லாம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், இஸ்லாமிய ஆட்சியாளர்களை விஞ்சுயோர் யாருமில்லை என்கிறார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் இஸ்மாயில்(அலை) அவர்கள் தன் தந்தையிடம் வாக்குறுதி வழங்குகின்றார்கள். அதில் தன் தந்தையிடம் என்னை அறுத்து பலியிட வேண்டும் என்றால் தயங்காமல் அதை செய்யுங்கள். நான் என் வாக்குறுதியில் சற்றும் பின் வாங்க மாட்டேன் என்றார்கள்.

இறைவன் கூறினான்;

“நபியே! இவ்வேதத்தில் இஸ்மாயிலைப் பற்றியும் நினைவு கூருவீராக. நிச்சயமாக அவர் வாக்குறுதியில் உண்மையாளராக இருந்தார்.” (அல்குர்ஆன்: 19:54)

தன் உயிரே போகும் என்ற நிலையிலும் வாக்குறுதிகளை நிறைவேற்றிய நபி இஸ்மாயில்(அலை) அவர்களின் வாரிசுதான் மனித குலத்திற்கும், ஆட்சியாளர்களுக்கும் அழகிய முன்மாதிரியாகவும், அருட்கொடையாகவும் வந்தவர்கள் தாம் முஹம்மத்(ஸல்) அவர்கள்.

அவர்கள் வாக்குறுதிகளை தன் ஆட்சியின் எல்லைக்குள் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களுக்கும், கிருஸ்தவர்களுக்கும் கொடுத்தார்கள். நிறைவேற்றினார்கள்.

அவர்களின் பின் இஸ்லாமிய ஆட்சியைத் தொடர்ந்து கொண்டிருந்த கலிஃபா உமர்(ரழி) அவர்களின் ஆட்சி காலத்தில் டமாஸ்கஸ், ஹம்ஸ், சிரியா ஆகிய பகுதிகள் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தன. அந்த மக்களிடம் இருந்தது பாதுகாப்பு வரிகள் வசூலிக்கப்பட்டன. ஆனால் ரோம் நாட்டுப் படை ஒன்று முஸ்லிம்களைத் தாக்கிடவும், ஆட்சிகளைப் பிடுங்கிக் கொள்ளவும் வருகின்றது என்ற செய்தி இஸ்லாமிய ஆட்சியாளர்களை வந்தடைந்தது.

இதனால் இந்தப் பகுதியிலிருந்து அதாவது வெற்றி கொண்டு வரியும் வசூலித்துக் கொண்டிருந்த பகுதிகளிலிருந்து வெளியேறி ஹிராக்கிளியஸ் – இன் ரோம் நாட்டுப் படைகளைச் சந்திப்பது என முடிவு செய்தார்கள்.

அந்த மக்களை அழைத்து நிலைமையைச் சொல்லி பாதுகாப்பு வரிகளை திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்கள். அந்த மக்களோ கண்ணீர் மல்க இப்படிக் குறிப்பிட்டார்கள்;

“இறைவன் உங்களோடு இருக்கட்டும்! வெற்றி பெற்றவர்களாக நீங்களே இங்கே திரும்பி வந்திட வேண்டும். நீங்கள் நீதி செலுத்துபவர்கள்.”

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் பாதுகாப்பு வரியை வசூலிப்பது என்பதில் மக்களிடம் எழுத்தால் வடிக்காத ஒப்பந்தம். ஏனென்றால் பாதுகாத்திட இயலாத போது அந்த வரியை திருப்பித் தந்திட வேண்டும் என்பது.

அதை தவறாமல் செய்தார்கள் முஸ்லிம் ஆட்சியாளர்கள். இந்த வரலாறு இஸ்லாத்திற்கு மட்டுமே சொந்தம். கஷ்மீர் விவகாரத்தில் வாக்குறுதி மீறல்களை கூர்ந்து கவனிப்பவர்கள் இங்கே எந்த தத்துவம் ஆட்சி செய்திட வேண்டும் என்பதை எளிதில் புரிந்திடலாம்.

பெருமானார்(ஸல்) அவர்கள் கூறினார்கள்;

> “ஏமாற்றுவதில் ஈடுபட்ட ஒவ்வொருவரின் தலையின் அருகிலும் ஒரு கொடி இருக்கும். இதை ஒவ்வொருவருக்கும் அவர்கள் எந்த அளவுக்கு எமாற்றினார்களோ அந்தளவுக்கு உயர்த்துவார்கள். கவனியுங்கள்! மக்களை ஏமாற்றும் தலைவனை விட மோசமான ஏமாற்றுக்காரன் எவனுமில்லை”(முஸ்லிம்)

அல்லாஹ் கூறுகின்றான்;

> “மேற்கிலோ, கிழக்கிலோ உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது (மட்டும்) நன்மை (செய்ததாக ஆகிவிடமாட்டாது. எனினும் (உங்களில்) எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும், மலக்குகளையும், வேதத்தையும், நபிமார்களையும் மெய்யாகவே விசுவாசித்து, பொருளை அவனுடைய விருப்பைப் பெறுவதற்காகப் பந்துக்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசகர்களுக்கும் விடுதலையை விரும்பிய அடிமைகளுக்கும் கொடுத்து, தொழுகையையும் கடைபிடித்து ஜகாத்தும் கொடுத்து வருகின்றாரோ அவரும், வாக்குறுதி செய்த சமயத்தில் தங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களும், நஷ்டத்திலும், கஷ்டத்திலும் கடுமையான யுத்த நேரத்திலும் பொறுமையைக் கைக்கொண்டவர்களும் ஆகிய இவர்கள் தாம் நல்லோர்கள். அன்றி இவர்கள் தாம் உண்மையானவர்கள். பயபக்தியுடையவர்கள்.”(அல்குர்ஆன்: 2:177)




மோடியின் முதல் ஐந்தாண்டு காலத்தில் அவராலும், அவரை சார்ந்தவர்களாலும், இந்துத்துவ சித்தாந்தத்தை பின்பற்று பவர்களாலும் முன்பொழியப்பட்ட தவறான அறிவியல் கூற்றுகளின் சில தொகுப்பு.

2014முதல் 2019 வரை பண்டைய இந்தியாவின் மகிமை எனும் பெயரில் நம் பிரதமர் மோடியும், அவர் சகாக்களும் சொன்னவை சாதாரணமானவை அல்ல. மோடி சொன்ன, 2000 வருடத்திற்கு முன்பே பிளாஸ்டிக் சர்ஜரி இருந்ததால் தான் பிள்ளையாருக்கு யானை தலை வைக்கப்பட்டது என்பதில் தொடங்கி அவர் சகாவான பிரக்யா தாகூர், மாட்டு சிறுநீர் புற்றுநோயை குணப்படுத்தும் என்பது வரை அறிவியலை துவம்சம் செய்த பட்டியல் வரிசைகள்

**மாட்டு சிறுநீர் புற்றுநோயை குணப்படுத்தும்**

தற்போது எம்.பி ஆக இருக்கும் பிரக்யா தாகூர் இந்தியா டுடே பத்திரிக்கைக்கு அளித்த பேட்டி ஒன்றில், மாட்டு சிறுநீர் தனது மார்பக புற்றுநோயை குணமாக்கிவிட்டதாக கூறினார். மாட்டு சிறுநீர், மாட்டுச்சாணி, பால் மூன்றையும் கலந்து குடித்து வந்தால் மார்பக புற்றுநோய் வராது என்றார். இதனை புற்றுநோய் மருத்துவ நிபுணர்கள் கடுமையாக மறுத்து அறிக்கையும் வெளியிட்டார்கள். அதனை விட வெயிட்டாக மற்றொன்றையும் கூறினார், மாட்டை உரசிக்கொண்டே இருந்தால் ரத்த அழுத்தம் குறையும் என்றார்

**இந்துக்கள் தான் மரபணு ஆராய்ச்சிக்கு முன்னோடி**

ஜனவரி 2019ல் நடைபெற்ற 106வது இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாட்டில் பேசிய ஆந்திர பல்கலைக்கழக துணைவேந்தர் நாகேஷ்வர ராவ், மகாபாராதத்தை மேற்கோள் காட்டி 100 கௌரவர்கள் ஒரே தாயிலிருந்து உருவானவர்கள். இவர்கள் டெஸ்ட் டியூப் மூலமாக உருவாக்கப் பட்டார்கள். அதனால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்துக்கள் தான் மரபணு ஆராய்ச்சிக்கு முன்னோடியாக இருந்தார்கள் என்று பேசினார்.

**ஏவுகனைகள் மற்றும் விமானங்கள் பண்டைய இந்தியாவிலேயே இருந்தன**

நாகேஷ்வர ராவ் இந்திய அறிவியல் காங்கிரஸ் கூட்டத்தில் பேசும் போது, பண்டைய காலத்திலேயே தற்போது இருப்பதை விட அதிக தொழிற்நுட்பத்துடன் ஏவுகனைகள் இருந்திருக்கிறது. கடவுள் விஷ்னு பயன்படுத்திய விஷ்னு சக்ரா என்ற ஏவுகனை எதிரிகளை தாக்குவதோடு மட்டு மில்லாமல் மீண்டும் அவர் கைக்கே வந்து விடும். அதுமட்டுமல்ல கடவுள் ராமர் காலத்தில் 24 வகையான ஏவுகனைகளும், பல விமான தளங்களும் இருந்திருக்கிறது என்றார்.

**டைனோசோர்களை கடவுள் பிரம்மா தான் கண்டுபிடித்தார்**

ஜனவரி 2019ல் இந்திய அறிவியல் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்ட பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் புவியியலாளர் மற்றும் இணை பேராசிரியரான அஷூ கோஷ்லா பேசும் போது,

முதன் முதலில் கடவுள் பிரம்மா தான் டைனோசோர்களை கண்டுபிடித்தார். டைனோசோர்களுக்கு அப்போது ராஜசௌராஸ் என்ற பெயர் இருந்தது. இதெல்லாம் இந்து புனித நூல்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார்.

### இண்டர்நெட்டை கண்டுபிடித்தவர்கள் இந்துக்கள்

ஏப்ரல் 2018ல் திரிபுரா முதலமைச்சர் பிப்லாப் தெப் மஹாபாரதத்திலிருந்து, சஞ்சயா என்ற கதாபாத்திரம் குர்சேத்திர போரில் அரசர் திர்ரஷ்திரா அவர்களுக்கு பல மைல்களுக்கு தொலைவில் இருந்த போதும் கூட உடனடியாக தகவல் கொடுக்க முடிந்தது எண்ற உதாரணத்தை கூறி இந்துக்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இண்டெர் நெட்டை பயன்படுத்தப்பட்டிருப்பது தெரிய வருகிறது என்றார்.

### ஐன்ஸ்டினின் சார்பியல் தத்துவத்தை விட மேலானது வேத தத்துவம்

மார்ச் 2018ல் 105வது இந்திய அறிவியல் காங்கிரஸ் கூட்டத்தில், தற்போதைய அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப துறையின் அமைச்சர் ஹர்ஷ் வர்தன் கூறியது, ஸ்டீபன் ஹாக்கிங் ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவத்தை விட இந்து வேதங்கள் தான் பலமான தத்துவத்தை கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார் என்றார். ஆனால், ஸ்டீபன் ஹாக்கிங் அமைச்சரிடம் எப்போது சொன்னார் என அறிவியல் ஆய்வாளர்கள் தற்போது வரை தேடி வருவது குறிப்பிடத்தக்கது.

### கண்ணீரை விழுங்குவதன் மூலம் தான் மயில் உற்பத்தி ஆகிறது

2017 மே மாதம் ராஜஸ்தான் நீதிபதி மஹேஷ் சந்திர சர்மா மாடு தான் இந்த நாட்டின் தேசிய விலங்காக இருக்க வேண்டும் என பரிந்துரை செய்கிறேன் என்று தீர்ப்பளித்து விட்டு சொன்னார், மயில்கள் ஒன்றுக்கொன்று இணைவதில்லை. பெண் மயில் கண்ணீரை விழுங்குவதன் மூலம் கருத்தரிக்கிறது. ஆண் மயில் எப்போதுமே பிரம்மச்சாரியாகவே இருக்கிறது. அதனால் தான் கிருஷ்ணர் மயில் இறக்கையை தலையில் வைத்திருக்கிறார் என்றார்.

### யோகத்தின் மூலமாக சுற்றுச்சூழலை சுத்திகரித்தல்

2018ல் உத்திரபிரதேச மீரட் நகரில் 350 இந்து பண்டிதர்கள் ஒன்றிணைந்து சுற்றுச்சூழலை பாதுகாக்க யோகம் நடத்தினார்கள். அதில் 50 மெட்ரிக் டன் மாமரக் கட்டைகளை எரித்து யோகம் வளர்த்து சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்க யோகம் நடத்தினார்கள்.

### மாட்டு சிறுநீரில் தங்கம் இருக்கிறது.

ஜூன் 2016ல் ஜுனகத் வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மாட்டு சிறுநீரில் தங்கம் இருப்பதை கண்டுபிடித்திருப்பதாக கூறினார்கள். 400 பசுக்களின் சிறுநீரை சேமித்து ஆய்வு செய்ததில் ஒவ்வொரு லிட்டர் சிறுநீரிலும் 3லிருந்து 5 மில்லிகிராம் வரை தங்கம் கிடைக்கிறது என்றார்கள். ஆராய்ச்சியாளர் டாக்டர் பிகி கோலாக்கியா நியூஸ்18 பத்திரிக்கைக்கு கொடுத்த பேட்டியில், ஒவ்வொரு பசு வகைக்கும் ஏற்றவாறு தங்கம் சிறுநீரில் கிடைக்கிறது. அதிலும் காலையில் பசு கொடுக்கும் சிறுநீரில் தான் அதிகம் தங்கம் கிடைக்கிறது என்றார்.

### 7000 வருடத்திற்கு முன்னதாகவே விமானம் கண்டுபிடிக்கப்பட்டது

ஜனவரி 2015ல் இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாட்டில் ஓய்வு பெற்ற விமான பைலட் ஆனந்த் போடாஸ் பேசுகையில், 7000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இந்துமுனிவர் பரத்வாஜா விமானம் செய்வதற்கான வழிமுறைகளை கொடுத்திருக்கிறார். விமானத்தை ஓட்டுபவர்கள் என்ன உணவு உண்ண வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கிறார். பண்டைய இந்தியாவில் இப்போதுள்ள நடைமுறையை விட ரேடார் தொழிற்நுட்பத்துடன் அதி நவீன விமானங்கள் இருந்திருக்கிறது என்றும் கூறினார்.

### ஒரு லட்சம் வருடத்திற்கு முன்பே நியூக்ளியர் சோதனை

டிசம்பர் 2014ல் ரமேஷ் போக்ரியால் நிஷாங் மனித வள மேம்பாட்டு அமைச்சராக இருந்த போது பாராளுமன்றத்தில் பேசுகையில், ஜோதிடம் மிகப்பெரிய அறிவியல். உண்மையை சொன்ன போனால் அறிவியலை விட மேலானது. அதை நாம் உலகம் முழுக்க எடுத்து செல்ல வேண்டும். இந்து முனிவர்கள் ஒரு லட்சம் வருடத்திற்கு முன்னதாகவே நியூக்ளியர் சோதனைகள் நடத்தியிருக்கிறார்கள் என்றார்.

### பண்டைய இந்தியாவில் பிளாஸ்டிக் சர்ஜரி

அக்டோபர் 2014ல் மருத்துவர்கள் குழுமியிருக்கும் ஒரு அரங்கில் பேசிய மோடி, நாம் நமது நாட்டின் மருத்துவத்தன்மையை நினைத்து பெருமைப்பட வேண்டும். நாம் கடவுள் கணேசாவை வணங்குகிறோம். எப்படி ஒரு மனிதனுக்கு யானை தலை வந்திருக்க முடியும். பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை அப்போதே இருந்திருக்கிறது என்றார்.

**– அபூ சித்திக்.**

**(data from caravan daily: 26.08.2019)**




# வைகறை உண்மை கண்டறியும் குழுவுக்கு மறுப்பு

## மறுப்பு கடிதம்

அஸ்ஸலாமு அலைக்கும். வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்களே! நாகை NIA கைது நடவடிக்கையின் உண்மை கண்டறியும் குழு, அசன் அலி கைது சம்பந்தமாக என் மீது அவதூறான செய்தியை அச்சடிக்கப்பட்டு உள்ளது. முதலில் உங்கள் உண்மை கண்டறியும் குழு உண்மையைத் தான் உங்களுக்கு தகவலாக கொடுத்தார்களா அல்லது தனி நபரை பழிவாங்க செய்த சதியா?

உங்கள் மாத இதழில் உளவுத்துறையின் கையால் என்று என் மீது குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. நான் உளவுத்துறையின் கையால் என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது? எந்த ஆதாரமும் இல்லாமல் ஒரு தனிநபரை முன்பகை காரணமாக கொடுக்கும் தகவலை நீங்கள் முழுமையாக ஆராயாமல் உங்கள் மாத இதழில் அச்சடித்து பரவச் செய்து இருப்பது ஞயாயமா?

நான் தனியார் துப்பறியும் நிறுவனம் நடத்திவருவதாக அச்சடிக்கப்பட்டு உள்ளது. அது உண்மையா? ஒரு தனிநபர், தனியார் துப்பறியும் நிறுவனம் நடத்த அரசு அனுமதி கொடுக்குமா? இரண்டு வருடங்களுக்கு முன்பாக நான் அதில் பணிபுரிந்தது உண்மை. ஆனால் நான் என்ன வேலை செய்தேன் அந்த நிறுவனத்தில் என்பதை நீங்கள் குறிப்பிடவில்லை.

நாகை மாவட்டம் பொய் வழக்கு சம்மந்தமாக எனது தலையீடு இருப்பதாக ஒரு தனிநபர் கொடுத்த தகவலின் அடிப்படையில் உங்கள் மாத இதழில் அச்சிடப்பட்டு இருப்பது உண்மைக்கு புறம்பான தகவல்கள் இருப்பதால் சட்டரீதியாக சந்திக்கவும் நான் தயார். உங்கள் மாத இதழில் வரும் செய்திகள் உண்மைதானா? என்கிற ரீதியில் எனக்குள் சந்தேகம் எழுந்து உள்ளது. உங்கள் மாத இதழின் உண்மை கண்டறியும் குழு கொடுக்கும் தகவல் அனைத்தும் உண்மை தானா? நாகையில் கைது செய்யப்பட்டவர்கள் எனது விரோதியும் கிடையாது. நண்பர்களும் கிடையாது. அவர்களை நான் கைது செய்யச் சொன்னால் எப்படி காவல் துறை கைது செய்யும்?

எனது கேள்வி: நான் தான் உளவுத் துறையை ஏவிவிட்டு கைது செய்ய வைத்ததாக அச்சிடப்பட்டு உள்ளது. உங்கள் மாத இதழில் ஒரு தனிநபர் கொடுத்த தகவலின் அடிப்படையில் அதில் கைது செய்யப்பட்டவர்கள் உடைய பெயர் விபரங்களே தெரியாத என்னால் எப்படி அவர்களை கைது செய்ய வலியுறுத்த முடியும். அது போக நான் இருக்கும் இடங்களிலெல்லாம் பிரச்சனை வருகிறது என்று குறிப்பிட்டு உள்ளது. அதில் நான் இருந்த எந்த இடத்தில் பிரச்சினை கிளம்பியது என்னால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகள் என்ன என்ன?

தற்சமயம் நான் கத்தார் நாட்டில் இருக்கிறேன்.

அப்படி என்றால் கத்தார் நாட்டில் என்ன பிரச்சினை என்னால் ஏற்படுத்தப்பட்டது? அதுபோக நான் ஹேக்கிங் தொழில்நுட்பம் தெரிந்தவர் என்று குறிப்பிட்டு உள்ளீர்கள். அதை உங்களால் ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க முடியுமா? முதலில் எனது படிப்பு தகுதி என்னவென்று உங்களால் சொல்ல முடியுமா?

இலங்கை தீவிரவாதி பயங்கரவாதி நாசகாரன் சதிகாரன் ஷக்ரான் ஹசீம் அவனது முகநூல் பக்கத்தில் என்னை பற்றிய தகவலும் எனது புகைப்படத்தையும் பதிவேற்றம் செய்து உளவுத்துறையின் கையால் என்று அடையாள படுத்தியதாக கூறப்பட்டு உள்ளது. உங்கள் மாத இதழில் அது உண்மையா என்றால், உண்மையே. நான் தீவிரவாதத்தை ஆதரித்து இருந்தால் அவன் ஏன் என்னை அவதூறாக அவனது முகநூல் பக்கத்தில் பதிவேற்றம் செய்கிறான்? இலங்கை தீவிரவாதியிடம் கடுமையான முறையில் கேள்விகள் கேட்டேன். அவன் கொடுத்த பதில் என்னை உளவுத்துறையின் கையால் என்று பதிவேற்றம் செய்து இருந்தான். இந்த பதிவேற்றம் எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனது புகைப்படம் அவனது கையில் எப்படி கிடைத்தது? என்னைப் பற்றிய தகவல் அவனது கையில் எப்படி கிடைத்தது? அவன் இருந்தது இலங்கையில் மாண்டதும் இலங்கையில் இதுவே மிகப்பெரிய ஒரு சந்தேகத்தை எழுப்புகிறது. அப்படி என்றால் எனது புகைப்படத்தையும் என்னைப் பற்றிய தகவலையும் கொடுத்தது யார்? இலங்கை சதிகாரன் உடன் முகநூல் வாயிலாக ஏற்பட்ட பிரச்சனையின் எதிரொலியாக எனக்கு முகநூல் இன்பாக்ஸ் மூலம் மிரட்டல் விடப்பட்ட நபர்கள் யார்? என்னை மிரட்டிய முகநூல் கணக்கின் பெயர் அன்சருல் கிலாஃபா. இது உண்மையான முகநூல் கணக்கா? அல்லது போலியான முகநூல் கணக்கா என்பது எனக்கு தெரியாது. அதன்பின்னர் இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் திருச்சி திருவாரூர் SIU அதிகாரிகளால் சென்னை காவல்துறை தலைமை அலுவலகத்துக்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். 48 மணி நேரம் டெல்லியில் இருந்து வந்த அதிகாரிகள் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடமிருந்து அனைத்து ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டது. கணினி, கைபேசி உள்ளிட்ட அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டது. உளவுத்துறையின் கையால் என்றால் எனது ஆவணங்களை எதற்காக பறிமுதல் செய்ய வேண்டும். எனது கணினி மற்றும் கைபேசி மூன்று மாதங்களுக்குப் பின்னரே என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

உளவுத்துறைக்கு உளவு வேலை பார்த்ததாக உங்கள் உண்மை கண்டறியும் குழு தனிநபர் கொடுத்த தகவலின் பேரில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது. உங்கள் மாத இதழில் அது போக நான் ஒரு மர்ம மனிதன் என்று வேறு அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது. மர்ம மனிதன் என்றால் என்ன அர்த்தம்? இது சம்பந்தமாக உங்கள் கைபேசி எண்ணிற்கு நான் போன் செய்து இருந்தேன் அதற்கு விபரமாக எழுத்து வடிவத்தில் தகவல் கொடுக்கும்படி சொன்னீர்கள். அந்தத் தகவலை எதில் கொடுக்க வேண்டும் என்பதை சொல்ல வில்லை அதனால் இந்த வைகறை வெளிச்சம் முகநூல் கணக்கு வாயிலாக எனது பகிரங்கமான மறுப்பை தெரிவிக்கிறேன். தயவுசெய்து உங்கள் உண்மை கண்டறியும் குழு நடத்திய விசாரணை தகவல் உண்மையா? என்பதை சோதித்துப் பார்த்து இதற்குத் தகுந்த மறுப்பு பதிவு செய்யவும். அல்லது சட்டரீதியாக வழக்கு மன்றத்தில் சந்திக்கவும் நான் தயார். காலதாமதம் ஏற்படுத்த வேண்டாம் தயவுசெய்து!

---

தமிழகத்தில் தொடரும் NIA கைதுகள் கள ஆய்வு ,என்ற கட்டுரையில் நாகையில் பாதிக்கப்பட்ட வாழ்விழந்த சிலரின் குமுறல்களை கள ஆய்வு செய்து பொது மீடியாவில் இருட்டடிப்பு செய்யப்பட்ட அவர்களின் தரப்பு செய்திகளை ஆகஸ்ட்-2019 மாத இதழில் வெளியிட்டிருந்தோம்.

இப்பிரச்சனையில் சந்தேகிக்கப்படும் அவ்வூர்காரரின் செயல்பாடு குறித்து நமக்கு கிடைத்த செய்தியை வெளியிட்டிருந்தோம். சந்தேகிக்கப்படும் நபர் நமது வைகறை வெளிச்சம் face book பகுதிக்கு மறுப்புக் கடிதம் வெளியிட்டுள்ளார். அதில் கைது சம்பவத்துக்கும் தனக்கும் தொடர்பில்லை என்றும், வைகறை வெளிச்சம் தன் மீது குற்றம் சுமத்துவதாக கூறியுள்ளார். NIA வின் நடவடிக்கையில் இருக்கும் முரண்பாட்டை கேட்டு எழுப்பும் 4வது கேள்வியில் ,ஏப்ரல் 2019 இல் இலங்கை குண்டு வெடிப்பில் சந்தேகிக்கும் நபருடன் தொடர்பில் இருந்தவர்களை கைது செய்ததாக சொல்லும் NIA, அது விஷயத்தில் நீதமாக நடக்கவில்லை என்பதை நமது குழு சுட்டிக்காட்டியது. அவ்வளவே. சந்தேகிக்கப்படும் நபர் குறித்து வெளியிடப்பட்டிருக்கும் செய்தி நம்மால் இட்டுக் கட்டப்பட்டவை அல்ல. நமக்கு கிடைத்த செய்தியும் சந்தேகப்படும் நபராக தான் இருந்ததேயன்றி வேறொன்றுமில்லை. கட்டுரையில் வந்த தகவல்களை கூறியோர் கண்ணீர் மல்க பேட்டி அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ந.நி.,





# பெஹ்லு கான் படுகொலை குற்றவாளிகள் விடுதலை

எந்த கோசத்துடன் பெஹ்லு கான் அடித்து கொல்லப்பட்டாரோ அதே கோசத்துடன் அவரை கொலை செய்தவர்கள் விடுதலையும் செய்யப் பட்டார்கள்.

பெஹ்லுகான் எனும் 55 வயது முதியவர் இந்நாட்டில், பகலில் நடு ரோட்டில் வைத்து பசு குண்டர்கள் எனும் கும்பலால் கொலை செய்யப்படுகிறார். அதனை வீடியோவாகவும் எடுத்து நாடு முழுக்க பரப்பினார்கள். ஆனாலும் நீதிமன்றம் சாட்சியங்கள் போதவில்லை என குற்றம் சாட்டப்பட்ட ஆறு பேரையும் விடுதலை செய்தது. நீதிமன்ற வளாகத்தில் 6 பேர் விடுவிக்கப்பட்டதும் பாரத் மாதா கி ஜே கோசத்தை எழுப்பினர் சிலர். இது நீதிக்கான கோசம் இல்லை. இந்துத்துவ சக்திகள் கட்டியெழுப்பிருக்கும் இந்துராஷ்டிராவுக்கான வெற்றி கோசம்.

எந்த கோசத்துடன் பெஹ்லு கான் அடித்து கொல்லப்பட்டாரோ அதே கோசத்துடன் அவரை கொலை செய்தவர்கள் விடுதலையும் செய்யப் பட்டார்கள்.

**பெஹ்லுகான் கொலை**

ஏபரல் 1,2017ல் 55 வயதான பெஹ்லு கான் சந்தையில் இருந்து பால் வியாபாரத்துக்காக மாடு வாங்கி வரும் போது விஷ்வ ஹிந்து பரிஷத் மற்றும் பஜ்ரங் தள் அமைப்பை சார்ந்தவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்டு சிகிச்சை பலனில்லாமல் உயிரிழந்தார். தனது மரண வாக்குமூலத்தில் கும்பலில் இருந்த ஆறு பெயரின் பெயரையும் கூறியிருந்தார் பெஹ்லு கான்.

பெஹ்லு கான் அடித்து சித்ரவதை செய்யப்பட்ட வீடியோ, மரண வாக்குமூலம், வன்முறையில் ஈடுபட்டவரின் வாக்குமூலம் என பல ஆதாரங்கள் இருந்தும் கீழ் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்தது.

**காவல்துறையின் திட்டமிட்ட அலட்சிய போக்கு**

பெஹ்லுகான் இறந்த போது இரண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஒன்று பெஹ்லுகானை தாக்கியவர்கள் மீது. மற்றொன்று, பெஹ்லுகான் மீதும் அவர் பையன்கள் மீதும் போடப்பட்டது.

**காவல்துறையின் கருணை கொலையாளிகளுக்கு இருந்திருக்கிறது**

குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளை காப்பாற்றும் விதமாக சட்ட வழிவகைகளில் குற்றம் நிரூபிக்கப்படாத வகையில் ஆதாரங்களை திரட்டாமல் கைவிட்டது காவல்துறை. முக்கியமான சாட்சியான வீடியோவை தடயவியல் துறைக்கு

அனுப்பி உறுதி சான்றிதழ் வாங்க தவறியது. இந்த வழக்கின் முக்கிய சாட்சியாக இருந்தது குற்றம் நிகழ்ந்த இடத்தில் எடுக்கப்பட்ட வீடியோவும், போட்டோவும் தான். செல்போனில் வீடியோவை எடுத்த ரவிக்குமார் நீதிமன்றத்தில் இந்த வீடியோவை எடுத்தது தான் என்று ஒத்துக்கொண்ட பிறகும் கூட பிந்நாளில் பிறழ் சாட்சியாக மாறி விட்டார். அதே போல் படத்தை எடுத்த புகைப்படக்காரர் நவால் கிஷோரும் அது தனக்கு ஞாபகம் இல்லையென்று நீதிமன்றத்தில் கூறிவிட்டார்.

மிக முக்கியமாக கருதப்பட்ட சாட்சியம் பெஹ்லு கானின் மரண வாக்குமூலம், பெஹ்லுகான் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டு 5 மணி நேரத்திற்கு பின்னால் மரண வாக்குமூலம் காவல்துறையால் பெறப்பட்டிருக்கிறது. ஆனால் வாக்குமூலம் பெறும் முன் மருத்துவரிடம், அவர் வாக்குமூலம் தருவதற்கான உடல் தகுதியுடன் இருக்கிறாரா என்று அனுமதி கையொப்பம் பெற வேண்டும். இதனையும் காவல்துறை செய்யவில்லை.

இப்படி சட்டவழிவகைகளில் சிக்காமல் குற்றவாளிகளுக்கு ஏதுவாக திட்டமிட்டு செயல்பட்டிருக்கிறது காவல்துறை. இதனை சரி செய்ய வேண்டிய நீதித்துறையும் கூட்டாளியாக இணைந்து தீர்ப்பை நிறைவேற்றியிருக்கிறது.

### வீடியோ சாட்சிகள் போதாது

பெஹ்லு கான் அடித்து கொல்லப்பட்ட வீடியோ நாடு முழுக்க பரப்பப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட ஆறு பேரும் அந்த வீடியோவில் பெஹ்லு கானை தாக்குவது இடம்பெற்றிருக்கிறது. அதிலும் ஒருவர் பெஹ்லுகானின் கழுத்தை நெறித்து தரையில் தள்ளி மீண்டும் மீண்டும் மிதிக்கிறார். ஆனால், இந்த வீடியோவின் தரம் தீர்ப்பளித்த நீதிபதிகளுக்கு போதவில்லை. அந்த வீடியோ தெளிவாக இல்லை. அதனால் ஆறு பேரும் வீடியோவில் இருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை என்று சொல்லி விடுவித்திருக்கிறார்கள்.

### நெஞ்சு வலியில் இறந்தார்

பெஹ்லு கான் நடு ரோட்டில் கொடூரமாக அடிக்கப்பட்டதை உலகமே பார்த்திருந்தாலும் பெஹ்லு கானின் பிரேத பரிசோதனையில் அவர் இறந்ததற்கு காரணம் மாரடைப்பு என்று அரசு மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அடித்ததனால் உண்டான காயங்களில் இருந்து ரத்தம் அதிகமாக வெளியேறியதால் இறந்திருக்கிறார் என்றும் ஒரு மருத்துவர் அறிக்கை சமர்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நீதிபதி இதை நம்பவில்லை. அதனால், மாரடைப்பு வந்தால் உடல் முழுக்க காயம் ஏற்பட்டு ரத்தம் தோய்ந்து இறந்து விடும் உலகின் முதல் நபர் பெஹ்லு கானாகவே இருக்கக் கூடும்.

### அப்பாவி என விடுதலை செய்யப்பட்ட நபரின் வாக்கு மூலம்

விபின் யாதவ், பெஹ்லுகான் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நபர். NDTVக்கு கொடுத்த பேட்டியில் சொல்கிறார், "நாங்கள் ஒன்றரை மணி நேரம் பெஹ்லுகானை அடித்து கொண்டிருந்தோம். முதலில் 10 பேர் வந்தார்கள். பிறகு 20 பேர், பிறகு 500க்கும் அதிகமான நபர்கள் வந்தார்கள்"

நாங்கள் தான் அடித்தோம் என்று சொன்னால் கூட அது நீங்களில்லை என்று விடுதலை செய்யும் நீதிமன்றங்களை உருவாக்கி கொடுக்கும் அளவுக்கு இந்த ஆட்சியின் வளர்ச்சி அமைந்திருக்கிறது.

### அரசு இயந்திரங்களின் கூட்டு

2015லிருந்து இதுவரை அதிகாரப்பூர்வமாக பசு பாதுகாவலர் எனும் கும்பலால் தாக்கப்பட்டதாக காவல்துறையில் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை 110. இதில் 43 பேர் கொல்லப் பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற தாக்குதல் சம்பவங்களில் அரசு அதிகார அமைப்புகள் எப்படி செயல்படுகிறது என்பதற்கு பெஹ்லுகானின் வழக்கு முன்னுதாரணமாக இருக்கிறது.

கொலை நடந்ததில் தொடங்கி அதில் கொலையாளிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், காவல்துறையினர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், இறுதியாக நீதிபதிகள் என எல்லாம் குற்றவாளிகளை காப்பாற்றுவதற்கு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுவதை போல கச்சிதமாக ஒவ்வொன்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

காவல்துறை அதிகாரிகள், மருத்துவர்கள் என அரசின் கீழ் இயங்குபவர்கள் தவறு செய்தாலும் இறுதி நம்பிக்கையை கொடுக்கும் இடம் நீதிமன்றங்கள் தான். ஆனால் அதுவும் இவர்களுடன் இணைந்து கூட்டாளிகளாக சட்டம் இயற்றும் அவலம் தொடங்கியிருப்பதே இந்தியாவின் அழிவின் தொடக்கம்.


பெஹ்லு கானுக்கான நீதி மறுக்கப்பட்டதை விட இந்தியாவின் நீதிமன்றங்கள் பாசிசத்திற்கு ஆதரவானது என்ற வேதனையும் பயமும் தான் இந்தியாவிற்கு மிக ஆபத்தை தரக்கூடியது

**– அபூ சித்திக்.**

# சிலுவைப் போர் 2.0

## ✍CRUSADE 2.0 BY JOHN FEFFER





✍தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,

இன்றைய நாள்களில் மேலை நாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095இல் தொடங்கி 1274இல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது. சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991இல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

# ஜான் பெஃபர் தொடருகின்றார்




**நான் இந்த நூலின் வழி, இதன் வழி நடத்தும் விவாதங்களின் வழி மேலைநாட்டவர்களுக்கு ஒன்றை தெளிவுபடுத்திட விரும்புகின்றேன். அது பொய்யையும், புனைந்துரைகளையும் கூறி நீங்கள் இஸ்லாத்தின் மீது போர் தொடுத்துக் கொண்டிருக்க வேண்டாம் என்பதே! அதில் வெல்ல முடியாது. – நூலின் பக்கம்:31**

இனி நாங்கள் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் சொன்ன பொய்களின் பக்கம் வருவோம். இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் வெறுப்பை வளர்ப்பது என்பது எங்களுக்குப் பிறவி குணம்.

"இஸ்லாம் வாளின் மார்க்கம்" என்பது நாங்கள் எங்கள் இலக்கியங்களில் ஆழமாக ஊன்றிய விதை. எங்களது கலைகளிலும் இதையே நாங்கள் பரப்பினோம். முதல் சிலுவைப் போரை தொடங்கிய போப் அர்பன் ||. இப்படி வெறுப்பூட்டினார். "முஸ்லிம்கள் யாரையாவது சித்திரவதைச் செய்ய வேண்டும் என விரும்பினால், அவர்கள் அவனுடைய தொப்புளிலிருந்து மர்ம உறுப்பு வரை துளை போடுவார்கள். அவரை அப்படியே குருடாக்கு வார்கள். பின்னர் அவரை வட்டம் போட செய்வார்கள். அவர் தானாக மயங்கி மண்ணிலே விழும் வரை இது நடக்கும்." (ஆதாரம்: Robert the Mank in Dana C. Munru "Urban and Crusaders)

இப்படி வெறியூட்டித்தான் மக்களை முதல் சிலுவைப் போரில் கலந்திட செய்தார் போப் அர்பன் ||.

சிலுவைப் போரின் இறுதியிலும் ஒன்றும் பெரிதாக மாறிடவில்லை. (இந்த முதல் சிலுவைப் போர் 152 வருடங்கள் நடந்தன என்பதை வாசகர்களுக்கு ஏற்கனவே தெளிவு படுத்தி இருக்கின்றோம்) அதன் பின்னர் நாங்கள் பிரயோகித்த சொற்கள் எந்த நேர்மையும் அற்றவையாக இருந்தன.

(பதிநான்காம் நூற்றாண்டில்) 14ஆம் நூற்றாண்டில் பேரரசன் இம்மானுவேல் || இப்படி கூறினான்;

"முஹம்மத் புதிதாக என்ன கொண்டு வந்தார் என்பதை என்னிடம் சொல்லுங்கள். அதில் தீமையும் மனிதாபிமானம் அற்றவையுமே இருக்கும். வாளால் பரப்புங்கள் என்பன போன்றவை அதில் இருக்கும்"

(ஆதாரம்: Quoted from Karen Armstrong, "We cannot Afford to Maintain these Ancient Prejudices Against Islam" – The Guardian, Sep 18, 2006)

இவை இடைக்கால வரலாற்றிலிருந்து இன்று வரையும் நடந்து கொண்டே இருக்கின்றது. அதாவது திருக்குர்ஆன் வன்முறைகளையே தூண்டி விட்டுக் கொண்டிருக்கும் என்பதே! வேறு சொற்களால் சொன்னால், "திருக்குர்ஆன் வன்முறையை விதைப்பது" என்ற கருத்துக்களையே பரப்பி வந்தோம்.

நாங்கள் அடிக்கடி பயன்படுத்தும் ஒரு திருக்குர்ஆன் வசனம், "இணை வைப்பவர்களை

கொல்லுங்கள் அவர்களை எங்கே கண்டாலும் சரியே. அவர்களைக் கைது செய்யுங்கள் முற்றுகை இடுங்கள் அவர்களுக்காக காத்துக் கிடவுங்கள்." (ஆதாரம்: The Quran Penguin – New york 1981(321) (Reference : 9-5)

இந்தத் திருக்குர்ஆன் வசனத்திற்கு நாங்கள் வைத்த பெயர் "Sword Verse" வாள் வசனம்.

இங்கே இணை வைப்பவர்கள் என்ற சொல் அன்று ஏழாம் நூற்றாண்டில் முஹம்மத் அவர்களுக்கு எதிராக படை திரட்டி நின்ற அரபுக்கள். அல்லாமல் 10ஆம், 13ஆம் ஆண்டில் வாழ்ந்த கிருஸ்தவர்களும், யூதர்களுமல்ல. இவர்களை முஸ்லிம்கள் வேதம் அருளப்பட்ட மக்கள் என்று தான் அழைக்கின்றார்கள். "People of the Book" வேதம் வழங்கப்பட்ட மக்கள் என்ற சொற்றொடரில் ஒலிக்கும் சகோதர உணர்வைக் கொன்றோம். அன்று முஹம்மத் - ஐ எதிர்த்து நின்ற அரபுக்கள் இடத்தில் கிருஸ்தவர்களையும், யூதர்களையும் வைத்தோம். கிருஸ்தவர்களையும், யூதர்களையும் இஸ்லாத்திற்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் அணி திரட்டினோம்.

மேலே நாம் குறிப்பிட்ட வசனங்களுக்குப் பின்னால் வரும் வசனங்களை நாங்கள் மக்கள் மன்றத்தில் மிகக் குறைவாகக் கூடக் காட்டு வதில்லை. அந்த வசனங்கள் பாவமன்னிப்புக் கேட்பவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்பவர்கள் அவர்கள், அவர்களுடைய வழிபாட்டு முறைகளை பின்பற்றுவார்கள். உடன் படிக்கைகள் செய்து கொண்டவர்கள், வாக்குறுதிகளை மீறாதவர்கள் இவர்களோடு ஒத்து வாருங்கள். அவர்கள் உங்களை நம்பும் வரை நீங்கள் அவர்களையும் நம்புங்கள் என்ற வசனங்கள்.

(அல்குர்ஆன்: 361. அல்பகரா: 2:226)

நாங்கள் கூறும், "வாள் வசனம்" வன்முறையைத் தான் தூண்டுகிறது என அடித்துக் கூறுவோம். (அது இஸ்லாத்தை அழிக்க போர்க்களம் வரும் எதிரிகளோடு சம்மந்தப்பட்டது) ஆனால் இந்த வசனத்தை விட அதிகமான திருக்குர்ஆன் வசனங்கள் இஸ்லாம் அமைதியின் மார்க்கம் என்பதை நிலை நாட்டிடும் வசனங்கள் அப்பாவி மக்களை கொலை செய்யக் கூடாது என்ற வசனங்கள். வரலாற்று ஆய்வாளர் ஆயிஷா ஜலால் அவர்கள் ஒர் உண்மையைத் திரும்பத் திரும்பக் குறிப்பிடுவார்கள். அது;

"திருக்குர்ஆனில் போர் செய்ய தடுக்கும் வசனங்களே, போர் செய்ய சொல்லும் வசனங்களை விட அதிகம்" ஹாலித் அபுல் ஃபாதில் அவர்கள் போர் செய்யச் சொல்லும் வசனங்கள் எப்போதும் பல ஒழுக்க நிபந்தனைகளையும் வரம்பு மீறாமையையும் பற்றிக் குறிப்பிடும் வசனங்கள்.

(ஆதாரம்: Ayesha Jalal, Partition of Allah Cambridge M.A. Harvard University) (Khaled Abou El Fadl etal, Place of Tolerance is Islam, Boston, Beacon 2002)102.)

திருக்குர்ஆன் இதர வேதங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றல்ல, யூதர்களின் வேதங்களிலும் போர் செய்யும் வசனங்கள் உண்டு உண்மையைச் சொன்னால் கூட்டுப் படுகொலை, இனப்படுகொலைகள் இவற்றைப் பற்றிய வசனங்களும் உண்டு.

எடுத்துக்கட்டாக யஹ்வா, சுயில் இடம் அம்லிகட் என்ற இனத்தை ஒருவித தடையின் கீழ் இருக்க வேண்டும் என ஆணை இட்டார். பின்னர் அந்த இனத்தைச் சார்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள், காலநடைகள் இன்னும் சில விலங்குகள் அனைவரையும் கொலை செய்திட வேண்டும் என ஆணையிட்டார்.

(ஆதாரம்: Jerusalem Bible)

அன்றைய யூத சாம்ராஜ்யமும் வாளால் தான் நிலைநாட்டப்பட்டது, விரிவாக்கப்பட்டது. ஆனால் யூத மதத்தைப் பற்றிப் பேசிடும் போது வாளால் பரப்பப்பட்ட மார்க்கம் எனப் பேசுவதில்லை. அதே போல் ஹெபோனில் 1994இல் புரூச் கோல்டுஸ்டின் 29 அப்பாவி முஸ்லிம்களைக் கொலை செய்ததைப் பற்றியும் யாரும் பேசிடவில்லை. அத்தனை பேரும் ஒரே மதத்தைச் சார்ந்தவர்கள்.

**இன்ஷா அல்லாஹ் தொடரும்.**

# சமூக ஒற்றுமையை வலியூறுத்தி நடைபெற்ற "மாரத்தான் போட்டி"



கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டையில் ஜாதி, மத வேறுபாடின்றி அனைத்து சமூகத்தவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் இவ்வூரில், கடந்த சில மாதங்களாக தேச ஒருமைப்பாட்டிற்கு வேட்டு வைப்பவர்கள் சமூக ஒற்றுமைக்கு எதிராக வேலை செய்து வந்துள்ளார்கள். இதுப் போன்ற வெறுப்பு பிரச்சாரம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. இதனை கவனித்த இந்து மதத்தை சார்ந்த சகோதரர் ஒருவர், அவரின் நண்பரான முஸ்லிம் சகோதரரிடம் ஊரின் நிலைமையினை அவரிடம் எடுத்துச் சொல்லி கவலைப்பட்டுள்ளார். அதனால் சமூக ஒற்றுமையை வலியூறுத்தி 18.08.2019 அன்று "மாரத்தான் போட்டி" நடைபெற்றது.

**நமது நிருபர் எஸ்.யாசர் அரஃபாத்**





**கடந்த 7.07.2019 அன்று மேட்டுப் பாளையத்தில் தாருல் இஸ்லாம் அறக்கட்டளை சார்பாக ஈத் மிலன் – பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் வெளியீட்டகத்தின் "சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை" நூலும் வெளியிடப்பட்டது.**

**நமது நிருபர்**



தொடர் 15

# இஸ்லாம்

## அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி

முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் (MBH) கவனம் எல்லாம் அதிகாரத்தை அடைவதிலேயே குறியாக இருந்தது. அவர்களின் ஆன்மீக குருவான பதியின் கட்டளைக்கு கீழ்படிவோம் என்பதே அவர்களின் முழக்கமாக இருந்ததே தவிர அந்த நேரத்தில் மக்களுக்கு என்ன தேவைப்படுகின்றது என்பதில் கவனம் செலுத்த தவறிவிட்டனர்.

முந்தைய அரசாங்கத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்டது தற்போது வீற்றிருக்கும் அரசு. எனவே அதை நம்பலாம் எனும் நம்பிக்கையை மக்களிடத்திலிருந்து சம்பாதிப்பதில் தோற்றுபோய் விட்டது விஙிபி. சர்வாதிகாரத்தை மையப்படுத்தும் எந்த சட்டங்களையும் நீக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. காவல்துறையில் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்பதும் மக்களின் கோரிக்கையாக இருந்தது. அதிலும் எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

Freedom and Justice கட்சி (FJP) அதிகாரத்திற்கு வந்த பின்பு அதன் அரசியல் கூட்டாளியான அல் நூர் கட்சியோடு இணங்கி செயல்படுவதில் பிரச்சனை ஏற்பட்டது. சலபுக்கள் நாடாளுமன்றம் நுழைந்ததை மேற்குலக ஊடகங்களால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. எகிப்து அரசியலில் குழப்பத்திற்க்கான ஆரம்பம் என்றே நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகை தலையங்கத்தில் எழுதியது.

### மோதல்கள்:

இஸ்லாமிய அரசியல் களத்தை யார் கைப்பற்றுவது எனும் புதிய சண்டை FJP க்கும் அல் நூர் கட்சிக்கும் இடையே உருவானது. ஷரியாவை மீறுவதாக இருக்கும் எந்த சட்டத்திற்கும் நான் கட்டுப்பட மாட்டேன் என நாடாளுமன்றத்தில் உறுதி பிரமாணம் எடுக்கும்போது கூறினார் சலபு கொள்கை உடைய ஒருவர். ஏற்கெனவே, அல் அஸ்கர் உலமாக்களை புண்படுத்தும் கருத்துகளை கூறவும் ஆரம்பித்திருந்தனர் சலபுக்கள்.

முர்சி அரசாங்கத்தை ஆதரித்து செயல்பட்டாலும், எதிர்தரப்பில் இருந்துவரும் குரல்களை இஸ்லாம் அல்லாதவர்களின் குரல்கள் என முத்திரை குத்தி ஒதுக்கினர் சலபுக்கள். அரசியல் களத்தில் வரும்

சண்டைகளை முஸ்லிம்களுக்கு நிராகரிப்பாளர்களுக்கும் இடையே உள்ள சண்டை என எப்பொழுதும் முத்திரை குத்தும் போக்கையே மேற்கொண்டனர் சலபுக்கள்.

முன்கூட்டியே தேர்தல் நடத்தி அதன் பின் அறிவியல் பின்புலம் உள்ள, துறை சார்ந்த அறிஞர்களை கொண்டு செயல்படும் அரசை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரித்தனர் சலபுக்கள். அதேவேளையில் நான்கு வருட ஆட்சியை முழுமையாக நடத்தும் கொள்கையை கடைபிடித்தது முர்சி அரசு. இதிலிருந்து இவர்களுக்கிடையே விரிசல் இன்னும் ஆழமாகியது, வெட்ட வெளிச்சமாகியது. இந்த போட்டிகள், சண்டைகள் வெறும் உள்நாட்டு பிரச்னைகளோடு முடிந்துவிடும் என்றும் நினைத்துவிடக் கூடாது. இந்த நிலையில் சர்வதேச பின்புலத்திலிருந்து இஸ்லாமியவாதிகளுக்கு எதிராக மக்கள் தூண்டி விடப்பட்டனர்.

## சுரங்கப்பாதை பிரச்சனை

அரசின் புதிய வெளிநாட்டுக் கொள்கை ராணுவத்திற்கும் அரசிற்கும் இடையே விரிசலை ஏற்படுத்தியது. காசா மட்டும் சினாய் வழியாக செல்லும் சுரங்கப்பாதை ஒன்று ராணுவத்திற்கு நீண்ட நாள்களாகவேபிரச்சினைக்குரிய விஷயமாக இருந்தது. பாதுகாப்பு நலனின் முக்கியத்துவத்தைக் கருதி இதை அழித்திட இராணுவம் விரும்பியது. ஆனால் அதிபர் இதை விரும்பவில்லை.

ஏப்ரல் 2013 இல் சூடானுக்கு முர்சி சென்றிருந்தபோது முக்கோண பகுதிகளை சூடானுக்கு கொடுத்து விடுவதாக வாக்குறுதி அளித்ததாக சில தகவல்கள் கூறின. முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் ஒன்று இந்த பகுதியை சூடானின் ஒரு பகுதியாக காட்டியது. இந்த ஒன்றே இராணுவத்திற்கும் அரசுக்கும் இடையேயான உறவை சீர்குலைக்க போதுமானதாக இருந்தது.

இந்த அன்பளிப்பானது எகிப்தை பாதிக்காது என்றும் இந்த நடவடிக்கையானது பெரிய ஒருங்கிணைந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு பயன்படும் என்றும் நிலப்பரப்புக்காக முஸ்லிம்கள் சண்டையிட்டுக் கொள்ளக் கூடாது மேலும் காலனிய சக்திகளே தேசிய எல்லைகளை உருவாக்கின என்றும் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர் கூறியதாக சொல்லப்பட்டது.

இந்த பிரச்னையால் பிராந்தியங்களின் ஒருங்கிணைப்பு, நாட்டின் இறையாண்மை குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டன. இராணுவத்தின் அதிகாரத்திற்கும் சவால் விட்டது இப்பிரச்னை. முர்சியும் சூடானும் அன்பு பாராட்டுவதற்கு பயன்படும் பகுதி அல்ல இது என பதிலடி கொடுத்தது இராணுவம். ஈரானுடனும் துருக்கியுடனும் நெருக்கமாக எகிப்து பழகுவதும் இராணுவத்தில் நல்ல கண்ணோட்டத்தில் பார்க்கப்படவில்லை. சிரியாவின் விவகாரங்களில் தலையிடுவதும் இதுவரை நீடித்துவந்த வெளிநாட்டு கொள்கைக்கு மாற்றமானதாகும். சிரியாவில் வசிக்கும் சன்னி முஸ்லிம்களுடன் என்றுமே முர்சி அரசு துணை நிற்கும் என்றும் நமக்குள் இனப்பாகுபாடுகள், பிரிவுகள் இல்லை என்றும் கூறியது முர்சி அரசு.

## அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் இராணுவம்:

முபாரக் ஆட்சியை உதறித் தள்ளி எகிப்தில் புரட்சி ஏற்படுவதற்கு பல சமூக அரசியல் காரணங்கள் உண்டு. எனினும் நாட்டில் அதுவரை நிலவி வந்த மேல்மட்ட நடைமுறைகள் பேணப்பட வேண்டும் என்றே இராணுவம் நம்பியது. ஆயுத படைகளின் சுப்ரீம் கவுன்சில் (SCAF) தற்காலிகமாக நாட்டை நிர்வகித்த போது பழைய நடைமுறைகளை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும் எனக் கூறியது போதுதான் அவர்கள் மீது சந்தேகமும் அவநம்பிக்கையும் அரசியல் கட்சிகளிடம் ஏற்பட்டது.

பல காலமாக பொருளாதார சலுகைகள் அனைத்தையும் அனுபவித்து வந்தது இராணுவம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கீழ் பணிபுரிய வேண்டும் என்பதை அவர்களால் நினைத்து கூட பார்க்க முடியவில்லை. நாடாளுமன்ற மற்றும் அதிபர் தேர்தலுக்கு பின்பு, அரசை விட உயர்ந்த அதிகாரம் படைத்தவர்களாக செயல்பட முயற்சி செய்தது. அரசிடம் கட்டுபாட்டை ஒப்படைப்பதில் அவர்களுக்கு எந்தவித ஆர்வமும் இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்ற காரணத்திற்காக இதுவரை அனுபவித்து வந்த சிறப்புரிமைகள் சலுகைகள் இவற்றை தியாகம் செய்ய இராணுவம் தயாராக இல்லை. எல்லா நிறுவனத்திற்கும் மேல் அதிகாரம் படைத்ததாக இருக்க விரும்பியது. தொலைகாட்சியின் முன் தோன்றி, நாடாளுமன்றத்தை கலைக்கின்றேன், அதிபரை பதவி நீக்கம் செய்கின்றேன், அரசியலமைப்பை தற்காலிகமாக ரத்து செய்கின்றேன் என பாதுகாப்பு அமைச்சராக இருந்த சிசி கூறும்போதுதான் அதன் அதிகார விருப்பம் தெள்ளத் தெளிவாக தெரிந்தது.

**இன்ஷா அல்லாஹ் தொடரும்**

**அபூஹாசின்**

14

# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?




# கணேஷ் (எ) முல்லா உமர்

சகோதரர் முல்லா உமர் 2013 ஆண்டின் ஒரு நாள் அரசு பதிவேட்டில் தன்னுடைய பெயரை மாற்றும் பணிக்காக சென்னை வந்திருந்த போது அவரும் நானும் அறிமுகமானோம். ஏறத்தாழ அதே சமயத்தில் தான் நானும்(அஷ்ரஃப் இஸ்லாம்) இஸ்லாத்தைத் தன் வாழ்வியலாக ஏற்றுக் கொண்டிருந்தேன். அன்று முதல் இன்று வரை நாங்கள் இருவரும் நல்ல நண்பர்களாக இருந்து வருகின்றோம். இருவரும் ஒன்றிணைந்து அல்லாஹ்விற்காக நிறைய சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

அழைப்புப் பணி, இஸ்லாத்திற்கெதிரான பொய் பிரச்சாரங்களை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது, இஸ்லாத்தை தன் வாழ்வியலாக ஏற்றுக் கொண்ட தமிழகத்தின் கிராமங்கள் குறித்து கள ஆய்வுகள் மேற்கொள்வது என அல்லாஹ்வின் உதவியால் எங்களது பணிகள் நீண்டுக் கொண்டே செல்கிறது.

மாக்கத்திற்காக களப்பணியாற்றுவதில் சோர்வடையாதவர். அதற்காக எந்த சோதனைகளையும் தாங்கிக் கொள்ளக் கூடிய மனநிலையைக் கொண்டவர் நண்பர் முல்லா உமர். இந்த தொடரில் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அனுபவங்களை பார்ப்போம். வாருங்கள்........

### கணேஷ் (எ) முல்லா உமர்

என்னுடைய பெயர் முல்லா உமர். என்னுடைய பழைய பெயர் கணேஷ். நான் இந்து மதத்தில் பிறந்தவன். நான் கோயம்புத்தூர் சுற்று வட்டாரப் பின்னணியைச் சார்ந்த நபர். அதனால் யாராக இருந்தாலும் "வாங்க, போங்க" என்று மரியாதையாகத்தான் பேசுவேன். சிறுவனாக இருந்தாலும் மரியாதையாகத்தான் பேச வேண்டும். ஆனால் இதுவே ஒரு கீழ் சாதிக்காரரர் என்றால் அவர் எவ்வளவு பெரியவர் என்றாலும் "போடா, வாடா" என்று தான் அழைக்க வேண்டும். இரண்டையும் எனக்கு கற்பித்தது என்னுடைய தாய் தான்.

எங்கள் வீட்டில் எப்போதும் கீழ் சாதிக்காரர்களுக்கு என்று தனி டம்ளர், தனி தட்டு இருக்கும். அது மிகவும் கேவலமாக இருக்கும். ஆனால் அதில் தான் அவர்களுக்கு உணவு, தண்ணீர் எல்லாம் கொடுப்பார்கள். அதுவும் அவர்களை தொட்டு விடக்கூடாது என்று தூரத்தில் நின்று கொடுப்பார்கள். இப்படி ஏன் அவர்களை நடத்துகிறீர்கள் என்ற கேள்வி எனக்கு எழுந்தது. என் அம்மாவிடம் கேட்டேன். அப்போது என் அம்மா கூறினார்; இவர்களெல்லாம் அடிமைகள் என்றும் இந்து மதத்தின் சாதியக் கட்டமைப்பு களையும் விளக்கிக் கூறினார்.

அப்போது நான் சிந்திக்கின்றேன். மீண்டும் கேள்வி எழுப்புகின்றேன். "மனிதன் எனும் ஓர் இனத்தில் ஏன் இப்படியெல்லாம் சாதிப் பாகுபாடுகள் வருகிறது?" என்று. அதற்கு என் அம்மா பதில் சொல்கிறார், "கடவுள் தான் சொல்கிறார்" என்று. எனக்கு இங்கு சந்தேகம் எழுந்தது. கடவுள் எப்படி இப்படியெல்லாம் சொல்லுவார் என்று.

எங்கள் வீட்டு வழக்கப்படி தினமும் நான் கோவிலுக்கு செல்ல வேண்டும். சாமி கும்பிட வேண்டும். குளித்துவிட்டு வந்தவுடன் பட்டை போட வேண்டும். இதையெல்லாம் செய்ய சொல்லி என்னை வர்புறுத்திக் கொண்டே இருப்பார்கள். கோவிலுக்கு சென்றால் அங்கே நேர்த்திக் கடன் என்ற பெயரில் மொட்டை போடுதல் போன்ற செயல்கள் எல்லாம் அறங்கேறும். அதையெல்லாம் பார்த்த நான் இப்படிக் கேட்பேன்; "ஏன் மொட்டை போடுகிறீர்கள். கையிலிருந்து சிறிது சதையை அறுத்துக் கொள்ளலாமே" என்று. உடனே என்னை அடிப்பார்கள். இப்படியே என் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது.

பத்தாம் வகுப்பு படிக்கும் போது எனக்கு ஒரு முஸ்லிம் அறிமுகமானார். அவர் ஆலிம் என்று நினைக்கின்றேன். அவர் எனக்கு இஸ்லாத்தை பற்றி எடுத்துரைத்தார். "நான் நடுநிலையான மனிதனாகவும், இந்து மதத்தின் வணக்கங்கள் குறித்து கேள்வி எழுப்பக் கூடியவனாகவும் இருந்ததால் அவருடன் இலகுவாக ஒன்றினைய முடிந்தது. ஆனாலும் அவர் சொல்லிய விஷயங்களில் எனக்கு பிடிப்பில்லாமல் போனது.

அதன் பின் நான் பத்தாம் வகுப்பு முடித்து உயர் கல்விக்கு சென்றேன். வரலாறு பாடத்தை தேர்ந்தெடுத்தேன். இது எனது சிந்தனையை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவியது. நிறைய படிக்க ஆரம்பித்தேன். எனக்கு சிறு வயது முதல் இருந்த சந்தேகமான "இந்து மதம் உண்மையா? பொய்யா?" என்பதற்கான விடையை தேட ஆரம்பித்தேன்.

அப்போது எனக்கு புரிந்தது. இறைவன் மனிதனாக வர முடியாது(அவதாரம்). வந்தால் மனிதனுக்கு இறைவனுக்கும் உண்டான வித்தியாசம் இல்லாமல் போய் விடும். இந்து மதம் மனிதனால் உருவாக்கப்பட்டது தான். இறைவனின் மார்க்கம் அல்ல என்பது புரிந்தது. மற்ற மதங்கள் என்ன சொல்கிறது என்பதை அறிய முற்பட்டேன்.

## கிருஸ்தவம்

இந்து மதம் போலவே இங்கேயும் கடவுள் மனித வடிவில் வந்து "காப்பாற்றுவது" போல் கிருஸ்தவ மதத்தின் கொள்கைகள் இருந்தது. ஆரம்பத்திலேயே என்னால் இதை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அதனால் அதை புறக்கனித்தேன்.

## புத்த மதம்

புத்த மதம் அருமையான மதம். அதன் வழிமுறைகள் எல்லாம் அருமையாக இருக்கும். ஆனால் அதிலும் கடவுள் கொள்கை என்று வரும் போது ஒரு மனிதர் கடவுள் ஆகிறார் என்று தான் இருந்தது. அதையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த ஆய்வுகளுக்கு பின் நான் கடவுளே இல்லை என்ற பெரியாரிய கொள்கைக்கு போகின்றேன்.

## நாத்திகமும் அதன் விளைவுகளும்

அதன் பின் நான் பள்ளிப்படிப்பை முடித்து கல்லூரிக்கு செல்கிறேன். அதுவரை நான் ஒழுக்கமாக வாழ்ந்து வந்தேன். எப்போது கடவுளே இல்லை என்ற கொள்கைக்கு சென்றேனோ, கட்டுப் பாடில்லாமல் ஒழுக்கக் கேடான பழக்கங்கள் எனக்குள் வர ஆரம்பித்தது. புகைப்பிடிக்க ஆரம்பித்தேன். குடிக்க ஆரம்பித்தேன். அப்போது எனக்குள் ஒரு சிந்தனை; "மரணம் என்பது எல்லா மனிதனுக்கும் உறுதியானது. அப்படி என்றால்

மரணத்திற்கு பின் மனிதன் எங்கு செல்கிறான்?" என்று சிந்திக்க ஆரம்பித்தேன். நிறைய சிந்திக்க ஆரம்பித்தேன்.

வானம் எந்த பிடிமானமும் இல்லாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றது. எப்படி?

தாமஸ் ஆல்வா எடிசன் போன்றோர் தனது கடின உழைப்பால் வெளிச்சத்திற்கான சக்தியை கண்டுபிடித்தார்கள். ஆனால் வானத்தில் என்னேரமும் ஒளித் தரக்கூடிய ஒரு சக்தி(சூரியன்) ஒளிர்ந்துக் கொண்டே இருக்கின்றது. அது எப்படி?

பகலுக்கு, இரவுக்கு என தனித்தனியான வெளிச்சம் வருகிறது! இதெல்லாம் எப்படி?

மனிதனுடைய குரோமோசம்ஸ் துள்ளியமாக படைக்கப்பட்டுள்ளது. மனித மூளைக்கு நிகரான ஒரு மெமரி எங்கும் இல்லை. படைப்புகளில் சிறந்த படைப்பாக மனிதன் இருக்கின்றான். அதை விஞ்ஞானிகள் கூட ஒப்புக் கொண்டார்கள். இவ்வளவு துள்ளியமாக இவைகளை படைத்த அந்த படைப்பாளன் யார்? மரணத்திற்கு பின்னால் எல்லோரும் எங்கோ செல்கிறார்கள் அது எங்கே? கண்டிப்பாக ஒரு சூப்பர் பவர் இருக்கிறது என்று எனக்கு புரிந்தது. அதன் பின் எனக்கு பயம் வர ஆரம்பித்தது.

## இஸ்லாம்

இந்த நிலையில் இஸ்லாம் மதத்தை நாம் இன்னும் ஆய்வு செய்யவில்லையே என்ற எண்ணம் எனக்குள் ஓடிக் கொண்டே இருந்தது. சரி அதையும் பார்த்து விடுவோம் என்று இஸ்லாம் குறித்து தேட ஆரம்பித்தேன்.

இஸ்லாத்தில் நான் முதலில் பார்த்தது ஓரிறைக் கொள்கை தான். நான் இதற்கு முன் ஆய்வு செய்த மதங்களில் ஓரிறைக் கொள்கை இல்லை. அதனால் அது கடவுளின் மார்க்கமாக இருக்காது என்று முடிவு செய்தேன். ஆனால் இஸ்லாம் தெளிவாக சொல்கிறது, "அல்லாஹ் அவன் ஒருவனே" என்று.

அடுத்து மரணத்திற்கு பிந்தைய வாழ்க்கையைப் பற்றி இஸ்லாம் என்ன சொல்கிறது என்று பார்த்தேன். மரணம், மண்ணரை வாழ்க்கை, கேள்விக் கணக்கு, அவரவர் செயல்களுக்கு ஏற்றார் போல் சொர்க்கம் அல்லது நரகம். என்று அறிவுக்கு பொருத்தமான ஒரு விளக்கத்தை இஸ்லாத்தில் பார்க்க முடிந்தது. ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இருந்தது. ஆனால் இஸ்லாத்தில் நிறைய கட்டுப்பாடுகள் இருந்தது. அது எனக்கு தயக்கத்தை ஏற்படுத்தியது. சரி கொஞ்ச நாட்கள் கழித்து இஸ்லாத்திற்கு மாறிவிடுவோம், அதுவரை ஜாலியாக இருக்கலாம் என்று முடிவெடுத்தேன்.

இந்த நிலையில் 2013ஆம் ஆண்டு நியூ இயர் அன்று, இரவு முழுவதும் குடித்து கொண்டாடினோம். அதன் விளைவாக அடுத்த நாள் முழுவதும் வாந்தி எடுத்து உடல் நலமற்று போனது. அப்போது எனக்கு பயம் வந்து விட்டது. மரணத்திற்கு பின்னாலான வாழ்க்கையில் இதற்கெல்லாம் தண்டனை இருக்குமே என்று.

அன்றைக்கு முடிவெடுத்தேன். இதையெல்லாம் விட்டுவிட்டு ஒரு கட்டுப்பாடான வாழ்க்கைக்கு செல்ல வேண்டும் என்று. என் முஸ்லிம் நண்பர்களிடம் சென்று "நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளப் போகின்றேன். எனக்கு உதவி செய்யுங்கள்" என்று கூறினேன். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. என்னைப் பார்த்து பயந்தார்கள். அதனால் யாரும் உதவவில்லை.

அப்போது ஒரு நாள் "கல்லூரியை இன்று கட் அடிக்கலாம்" என்று என்னுடைய சீனியர் ஒருவர் என்னிடம் கூறினார். அதற்கு நான், "இல்லை முடியாது. பிராக்டிகல் இருக்கிறது" என்று கூறுகிறேன். அதற்கவர், "இன்று ஜும்ஆ. அதனால் கல்லூரியை கட் அடித்தால் தான் செல்ல முடியும்" என்று கூறுகிறார். இதுதான் நல்ல வாய்ப்பு. இதை நழுவ விடக்கூடாது என்று, "நீங்கள் என்னை உங்களுடன் தொழுகைக்கு அழைத்து செல்வதாக இருந்தால்" வருகிறேன் என்று கூறினேன். அவர் என்னை அப்படியே ஆச்சரியத்தோடு பார்க்கிறார். "சரி வா" என்று என்னையும் ஜும்ஆ தொழுகைக்கு அழைத்து சென்றார்.

முதல் முறையாக என்னுடைய ஜும்ஆ தொழுகையை தொழுதேன். என்னுடைய பல சந்தேகங்களுக்கு அன்று அந்த ஜும்ஆ தொழுகையின் போது நடந்த உரை பதிலாக அமைந்தது.

## ஜாகிர் நாயக்

அதன் பின் ஜாகிர் நாயக் அவர்களின் வீடியோக்களை எல்லாம் பார்க்க ஆரம்பித்தேன். எப்படி அஹ்மத் தீதாத், ஜாகிர் நாயக் அவர்களுக்கு முன்னோடியோ, அதேப்போல ஜாகிர் நாயக் எனக்கு முன்னோடி. என்னால் முடிந்தளவு இந்த இஸ்லாமிய மார்க்கத்தை அனைவரிடத்திலும் எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றேன்.

## பிரச்சனைகள் - சோதனைகள்

அதன் பின் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தகவல் அறிந்து எல்லா திசைகளிலிருந்தும் பள்ளத்தை நோக்கி வரும் தண்ணீரைப் போல, என்னை நோக்கி பிரச்சனைகள் வர ஆரம்பித்தது.

என்னுடைய கல்லூரியில் தேர்வு நுழைவுச் சீட்டை தடுத்து விட்டார்கள். நண்பர்கள்

புறக்கணிக்க ஆரம்பித்தார்கள். என் தாய், தந்தையர் என்னை வீட்டை விட்டு துரத்தி விட்டார்கள். இப்படி நிறைய பிரச்சனைகள் என்னை நோக்கி வந்தன. ஆனால் அல்லாஹ்வின் உதவியால் அதையெல்லாம் கடந்து இப்போதும் இந்த மார்க்கத்தில் நிலைத்து நிற்கிறேன்.

## இஸ்லாம் தீவிரவாத மார்க்கமா?

இஸ்லாமிய தீவிரவாதம் சம்மந்தமான நிறைய கேள்விகள் என்னை நோக்கி எழுப்பப்பட்டன. நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அந்த நேரத்தில் "விஸ்வரூபம்" திரைப்படம் சம்மந்தமான பிரச்சனை வேறு. தொடுத்து என்னிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். உளவியல் ரீதியாக தாக்கி என்னை எப்படியாவது இஸ்லாத்தை விட்டு வெளியேற்றிவிட வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டே இருந்தார்கள். இதில் கிருஸ்தவர்களும் தங்கள் பங்கிற்கு சில முயற்சிகளை செய்தார்கள்.

அதனால் அதைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் எனக்கு இருந்தது. "ஒரு எறும்புக்கு கூட தேவையில்லாமல் தொல்லைக் கொடுக்கக் கூடாது" என்று போதிக்கும் மார்க்கம் எப்படி தீவிரவாதத்தை போதிக்கும் என்று தேட ஆரம்பித்தேன்.

## தாலிபான் பிடியில்

அப்போது தான் "தாலிபான் பிடியில்" என்ற புத்தகம் எனக்கு கிடைத்தது. யுவான்னி ரிட்லி என்ற மேற்கத்திய ஊடகவியலாளர் எழுதிய புத்தகம் அது. தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளர் மு.குலாம் முஹம்மத் அவர்கள் மொழி பெயர்த்துள்ளார். அதை படித்தேன். படித்த போது எனக்கு வியப்பாக இருந்தது. நான் படித்த ஸஹாபாக்களோட வரலாறுகளை, அந்த தாலிபான்களின் செயல்முறைகளில் என்னால் காண முடிந்தது.

அப்போது தான் எனக்கு புரிந்தது. இஸ்லாமிய தீவிரவாதம் என்று ஒன்று இல்லவே இல்லை. சித்தாந்த ரீதியாக அவர்களை வெல்ல முடியாததால் இப்படி ஒரு பொய்யான பரப்புரையை பரப்புகின்றார்கள் மேற்கத்திய வாதிகள். இஸ்லாம் ஓர் அமைதியைப் போதிக்க கூடிய மார்க்கம் என்று.

அதன் பின் என்னுடைய பெயரை நான் மாற்றிக் கொண்டேன். முஹம்மத் முல்லா உமர் என்று வைத்தேன். இந்த பெயர் வைக்க வேண்டாம் என்று நிறைய முஸ்லிம்களே எதிர்த்தார்கள். ஆனாலும் வைத்தேன். இன்று வரையில் தாவா, குறித்தும் இஸ்லாமிய பயங்கரவாதம் என்ற பொய் பிரச்சாரம் குறித்தும் அல்லாஹ்வின் உதவியோடு தைரியமாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றேன். நிறைய பிரச்சனைகள் அதனால் எனக்கு வருகிறது. "உன்னை கொல்வதற்கு எங்கள் பட்டியலில் வைத்திருக்கின்றோம்" என்று கூட அச்சுருத்துகிறார்கள். ஆனாலும் உறுதியோடு நிற்கிறேன்.

உலகம் முழுவதும் முஸ்லிம்கள் துண்புருத்தப் படுகிறார்கள். சீனாவில் நோன்பு வைக்க தடை, பல முஸ்லிம்களை குவாண்டானோமா சிறைச் சாலைகள் போல சித்திரவதை படுத்துகின்றார்கள். பர்மா, இலங்கை என்று உலகம் முழுவதும் முஸ்லிம்கள் கொல்லப்படுகிறார்கள். ஆனால் இவைகளைப் பற்றியெல்லாம் எந்த கவலையும் இல்லாமல் முஸ்லிம்கள் இருக்கின்றார்கள்.

அறிவார்ந்த ரீதியாக, எந்த நேரத்தில் எதை செயல்படுத்த வேண்டுமென்று முஸ்லிம்கள் விளங்கவில்லை என்றால் நிச்சயமாக அல்லாஹ் விரும்ப மாட்டான்.

இந்து பத்திரிகையில் நடுப்பக்கத்தில் ஒரு கட்டுரை வருகிறது. "ஹிஜாப் என்பது அடிமைத்தனம். அது அரபு நாட்டு கலாச்சாரம்" என்று. அந்த கட்டுரைக்கு பதில் கட்டுரை எழுத ஒரு முஸ்லிம் பெண் கூட நமது சமூகத்தில் இல்லை. எவ்வளவு கேவலமான விஷயம் இது.

அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு ஒரு பிரச்சனை வரும் போது அல்லாஹ்வின் அடிமைகளாகிய நீங்கள் வேலை செய்யவில்லை என்றால், அல்லாஹ் உங்களை குப்பையில் தூக்கி வீசிவிடுவான். உங்களுக்கு பதிலாக வேறு ஒரு சமூகத்தை கொண்டு வருவான். அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் உறுதியாக நிற்பார்கள். தன்னுடைய ஆயுளை, செல்வத்தை, உயிரை எல்லாவற்றையும் அல்லாஹ்விற்காக தியாகம் செய்வார்கள். அத்தகைய ஒரு சமூகமாக நாம் இருக்க வேண்டும். அல்ஹம்துலில்லாஹ்.

ஆதாரம்:

https://www.youtube.com/watch?v=KbtmB33Ft1g

**த. அஷ்ரஃப் இஸ்லாம்**


**தங்களது கருத்துகளை**
**+91 9092723753**
**என்ற கைபேசிக்கு**
**வாட்ஸ்ஆப்-இல் பகிரவும்**



# அகில உலக இஸ்லாமிய மாநாட்டில் வீர கேசரியின் முழக்கம்

1926ஆம் ஆண்டு மக்காவில் அகில உலக இஸ்லாமிய மாநாடு நடைபெற்ற போது இந்திய முஸ்லிம் தூதுக்குழுவினர் கலந்து கொண்டனர். அவ்வமயம் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் குறித்து மௌலானா முகம்மதலி அம்மாநாட்டில் ஆற்றிய உரையின் தொகுப்பே இது.

“உஸ்கா கஃபாஜிஸ்கி ஜானிப்நோப்படு(ஹ்)தே(ஹ்) நமாஸ்”

க்யா கஹேன்கே உஸ்ஸே க்யவ்(ன்) கப்ஸயேதுஷ்மன்மே(தாஹ்?)

எந்தக் கஃபா பக்கம் முகம் திரும்பி, தினசரி தொழுகையை நிறைவேற்றி வருகின்றோமோ அந்த கஃபா விரோதியின் ஆதிக்கத்திலிருப்பதேன்? அதைப் பற்றி சொல்வது என்பதே ஜௌஹரின் உள்ளக்கிடக்கை.

மக்காவை, மதீனாவை தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு பரிசுத்த ஹிஜாஸ்-ஐ பிரிட்டீஷாரே ஆட்சி செய்தனர் எனலாம். உலக யுத்தம் முடிந்ததும் அந்தப் புனித பூமியை விடுவிக்க இந்தியாவில் “குந்தாமே கஃபா” “கஃபா விடுவிப்பு தொண்டர் படையை” நிறுவி முகம்மதலி அயராது பாடுபட்டார். இந்த நிகழ்வு இப்னு சஊத் படையெடுக்க அவருக்கு உற்சாகத்தை உண்டு பண்ணியது. ஹிஜாஸ் விடுவிக்கப்பட்டது.

இப்னு சஊத் அச்சமயம் அகில உலக முஸ்லிம்களுக்கு அறிக்கை மூலம் வாக்குறுதி நல்கினார். அதாவது, “தூய்மையான அல்லாஹ்வின் மீது நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன. ஹிஜாஸை கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்பது என் நோக்கமல்ல. அதில் எனது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதும் என் நோக்கமல்ல. நஜ்த் எல்லையை விரிவு படுத்துவது என் நோக்கமுமல்ல.” (ஹரமைன் ஷரிபைனை) மக்கா, மதீனாவை என் நிர்வாகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பது என் எண்ணமுமல்ல. நான் அச்சமயத்திலும் இத்தகைய நோக்கம் கொண்டவனல்ல இதற்காக நான் ஹிஜாஸின் மீது படையெடுக்கவில்லை. அந்நிய ஆதிக்கத்திலிருந்து அந்தப் பரிசுத்த பூமியை மீட்கவே படையெடுக்கிறேன். “ஆண்டவனருளால் அதை வென்ற பின் இந்திய முஸ்லிம்களைப் போன்ற மனிதாபிமானம் உள்ளோரும், இஸ்லாமிய சமூகங்களுக்கும் கட்டுப்பட்டு முஸ்லிம் உலகின் நோக்கங்களுக்கு, தலை சாய்க்கும் ஓர் அதிகாரியை தேர்ந்தெடுக்கும் வரை “ஹிஜாஸ்” என்னிடம் அமானிதமகவேயிருக்கும் என உறுதி கூறுகிறேன்.

“ஹிஜாஸின் தலைவர் பதவியை முஸ்லிம் உலகம் எவருக்கு அளிக்கவிரும்புகிறதோ அவரிடம் ஒப்படைக்க தயங்கமாட்டேன் என்று வாக்குறுதி அளிக்கிறேன். இந்த வாக்குறுதி முஸ்லிம் உலகிற்கு ஆறுதலை அளிக்கும் என்பதோடு அல்லாஹ் விடத்திலும், முஸ்லிம்களிடத்திலும் நாம் செய்திருக்கின்ற உறுதி மொழியை விட்டு பிறழாமல் உறுதியாக இருப்போமென்பதை இந்திய முஸ்லிம்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இது சத்தியம்.



**ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்**
**குளச்சல்**

*இப்னு சஊத் அரசரின் வேண்டுகோளைக் கேட்டு உலக முஸ்லிம்கள் குறிப்பாக இந்திய முஸ்லிம்கள் பணம் மற்றும் பல ஒத்தாசைகள் செய்தனர். அன்றைய சவூதி அரசு இக்காலத்திலுள்ளது போன்று பொருளாதாரம் மேம்பாடுடைய நாடல்ல. இப்னு சஊத் உலக முஸ்ஸிம்களின் ஆதரவோடு ஹிஜாஸை படையெடுத்து வென்றார்.*

*ஹிஜாஸை வென்றதும் மக்கா, மதீனாவிலுள்ள நபித்தோழர்கள், நபியின் குடும்பத்தார்கள், சுகதாக்கள், இமாம்கள் இறை நேசர்கள் ஆகியோரின் கபுறுகளை இடித்து தரைமட்டமாக்கினார். நாம் மக்காவிலுள்ள ஜன்னத்தேமு அல்லாவிலும், மதீனாவில் ஜன்னத்துல் பக்கீஃபிலும் இந்த நிகழ்வை அங்கு செல்வோர் இன்று காணலாம். மேலும் ஹிஜாஸின் அரசர் என தானே இப்னு சவூத் முடிசூட்டிக் கொண்டார். இவ்வாறு அறிவித்ததும் உலக முஸ்லிம்கள் கண்டனம் தெரிவித்தனர்.*

*இந்தியாவில் மௌலான முகம்மதலி ஜௌஹர் சவூதி அரசரின் பெரியார்களின் கபுறுகளை இடிப்பையும், தனக்குத் தானே அரசர் என அறிவித்ததையும் பொது கூட்டங்களின் மூலம் கண்டித்தும் இந்திய முஸ்லிம்களின் சார்பாக எதிர்ப்பை சவூதி அரசரின் காதில் விழச் செய்தார்.*

***1926**ஆம் ஆண்டு அகில உலக இஸ்லாமிய மாநாடு மக்காவில் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு இப்னு சவூத் தலைமைத் தாங்கினார். கூட்டம் ஒரு முற்றவெளியில் ஒரு கொட்டகையில் கூட்டப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் அரசருக்கு பெரும் மரியாதை செய்யப்படுவதையும், உலக முஸ்லிம் தலைவர்களின் பார்வையை கவரும் வகையில் மாநாட்டில் வைக்கப்பட்டிருந்த யானை, ஒட்டகை, குதிரை, மீன் போன்ற உருவங்களையும் பார்த்து மௌலான முகம்மதலி அதிர்ச்சியடைந்தார்.*

*மௌலானா மாநாட்டில் பேச அழைக்கப் பட்டதும் தூய அரபியில் இப்னு சஊத் அரசரை முன்னோக்கி*

**"அரசரே! நீங்கள் குலபாயே ராஷிதாவை ஏற்படுத்துவதாக சொல்லி வாக்குறுதி தந்தீர்களே! அது என்ன ஆனது? நீங்கள் மறைவழி, நபிவழி நடத்தப்பட்டதாகச் சொல்லி கைசரை, கிஸ்ராவை முன் மாதிரியாக கொள்வதேன்? தனிப்பட்ட அதிகாரம் செலுத்துவதை கண்டிக்கும் இஸ்லாம் கலந்தாலோசிப்பதை வலியுறுத்துகிறது. இவ்வாறு இஸ்லாம் குடியரசு முறை ஆட்சியை போதிக்கும் போது நீங்கள் தனக்கு தானே அரசர் என பட்டம் சூட்டியது தவறு. உலக முஸ்லிம்கள் உங்களுக்குப் பட்டம் சூட்டியிருந்தால் எப்படி இருந்திருக்கும். அதுவன்றோ இஸ்லாம் போதிக்கும் ஆட்சி முறை. வஹ்ஹாபி இயக்க ஸ்தாபகர் முகம்ம திபினு அப்துல் வகப் நாதாக்களுடைய, சுகதாக்களுடைய, பெரியோர்களுடைய கபுறுகளை உடைப்பதின் மூலம் தவ்ஹீத்-ஐ நிலைனிறுத்தலாம் என நினைக்கின்றார் போலும், இஸ்லாம் கபுறுகளை இடிப்பதற்காக வந்த மார்க்கமல்ல. உலகில் ஃபிர்அவ்ன் தன்மையும், மன்னராட்சியையும் ஒழிப்பதற்கே இஸ்லாம் வந்தது. சீர்த்திருத்தம் பேசுவோர் இந்த மாநாட்டில் வந்துள்ள பிரதிநிதிகளின் கண்ணைக் கவர ஒட்டகம், குதிரை, யானை போன்ற உருவங்களை வைத்துள்ளனரே இது எந்தளவுக்கு மார்க்கம் அனுமதித்துள்ளது."**

*என வினா எழுப்பி தன் பேச்சை முடித்தார். இதைக் கேட்ட இப்னு சுஊத் தலை குனிந்து மாநாட்டிலிருந்து வெளியேறினார்.*

*நானும் குடும்பமும் **2008**ஆம் ஆண்டு நவம்பர் **26**ஆம் தேதி புதன் கிழமை புனித ஹஜ்ஜை நிறைவேற்ற புனித மக்காவுக்குச் சென்றிருந்தோம். நாங்கள் மக்கமா நகரில் ஹறமுக்கு அருகாமையில் கடை வீதிகளில் இன்றைய ஆட்சி செய்யும் அரசர்களின் பெரிதாக வரையப்பட்ட வரைபடம் பேனர்களாக தொங்க விடப்பட்டுள்ளதை காண முடிந்தது. டீ.வி. நிகழ்வுகளில் இரு புனித நகரங்களிலும் மோசமான, பார்க்கத்தகாதவற்றை அரசு தடை செய்திருக்கலாம். லாட்ச்களில் தங்கிய போது இதை காண முடிந்தது. நானும் எங்களுடன் இருந்த மௌலவி அல்தாப் சாகிப் தாவூதியும் இது பற்றி லாட்ஜ் மேனேஜரிடம், இந்த மோசமான நிகழ்வை இரு புனித நகரங்களில் தவிர்த்திருக்கலாமே என்றோம். இதில் அரசு கவனம் செலுத்துவதாக இல்லை. ஒழிவு மறைவாக இது நடைபெறுவது வேதனையானது. டி.வி. நிகழ்வில் வெளிநாட்டுத் தலைவர்களை வரவேற்கும் நிகழ்வை பார்க்கும் போது சவூதி அரசர் படம் குறிப்பாக முன்னாள் அரசர் போட்டோக்களைப் பார்க்க முடிகிறது. மதீனா பல்கலைக் கழக மாணவர்களை உலகெங்கும் தவ்ஹீதைப் பரப்ப போகின்றோம் என அனுப்பி பிரச்சாரம் செய்யும் நாட்டில் தவ்ஹீத் படும் பாடு கவனிக்காபாலது.*

*தவ்ஹீத் மந்திரம் இஸ்லாமல்ல நம் நாட்டில் பிறந்த பதினென் சித்தர்கள் கூட ஏகத்துவ பாடல்கள் அழகு தமிழில் பாடியுள்ளார்கள். யார் இறைவன் ஒருவனென்றும் அவன் இறுதி தூதர் நபிகள் நாயகம்(ஸல்) என அவர்களை நாவால், உள்ளத்தால் பரிபூரணமாக ஏற்று அடியொற்றி வாழ்வது தான் இஸ்லாம். வெறும், "லா இலாஹ இல்லல்லாஹ்" என்று சொன்னால் ஒருவன் இஸ்லாமியனாக ஆக முடியாது. "லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுற் றசூலுல்லாஹ்" என இதயசுத்தியோடு மொழிந்து செயலாற்றினாலேயே ஒருவன் இஸ்லாமியனாக திகழ முடியும்.*

*இந்திய சுதந்திர போராட்டக் காலத்தில் இந்திய தேசத் தந்தை காந்திஜி ஆங்கிலேயரைப் பார்த்து என்னிடம் இரு சிங்கங்கள் இருக்கும் வரை உங்களை நான் பயப்படமாட்டேன் என அறைகூவல் விட்டார். அது யாரென்றால் அலீ சகோதரர்கள் என்றார். அகில உலக இஸ்லாமிய மாநாட்டில் மௌலானா நீதி தவறிய மன்னருக்கு முன்னால் சத்தியத்தை எடுத்துச் சொல்வது சிறந்த "ஜிஹாத்" என்று நபி பிரான் சொன்ன சொல்லை மெய்பித்தார்கள். மௌலானாவைப் போன்ற வீர தியாகிகள் வாழ்ந்து மறைந்த நாடு நம் நாடு. வீர கேசரியின் மாநாட்டு வீர உரை காலத்தால் அழியாதது.*

**– இது ஜவ்ஹர் நினைவு மலரிலிருந்து குறிப்பெடுத்து**

# நூல் அரங்கம்

| | | |
|---|---|---|
| நூல் | : | **தஃப்சீர் ஷஅராவீ** |
| ஆசிரியர் | : | **மௌலவி எம்.ஒய். முஹம்மது அன்சாரி மன்பஈ** |
| பக்கம் | : | **304** |
| விலை | : | **200. ரூபாய்** |
| வெளியீடு | : | **இமாம் புஹாரி எஜி நேஷனல் டிரஸ்ட்** |
| | | **இமாம் புஹாரி பள்ளிக்கூட வளாகம்** |
| முகவரி | : | **44, மினா தெரு, லால்பேட்டை,** |
| | | **கடலூர் மாவட்டம் 608 303** |
| தொடர்புக்கு | : | **8148402300** |

மிஸ்ர் எனும் எகிப்து நாடு இஸ்லாமிய அறிவுலகத்துக்கு பல உன்னதக் கொடைகளை வழங்கியுள்ளது.

அந்தக் கொடைகளின் வரிசையில் இமாம் ஷஅராவீ அவர்களுக்கு மகத்தானதோர் இடமுண்டு. இவர் மிகச்சிறந்த மார்க்க அறிஞர். நல்ல பேச்சாளர். ஆழ்ந்த மார்க்க ஞானமுள்ள முஃப்தி.

உள்மார்க்க விவகாரங்களில் எழும் எந்த கருத்துச் சிக்கல்களிலும் சிக்கியவரல்ல. மாற்றுக் கருத்துடைய அறிஞர்களையும் மதித்தவர். அவர்களால் மதிக்கப்பட்டவர்.

1980க்கு முந்தைய ஆண்டுகளில் தொலைக்காட்சியில் அவர் திருக்குர்ஆனின் விரிவுரைகளை ஆற்றியுள்ளார். திருக்குர்ஆனின் 60ஆவது அத்தியாயமான "அல் மும்தஹினா" வுக்கு விரிவுரை சொல்லி முடித்து 61 ஆவது அத்தியாயம் "அஸ்ஸஃப்" வுக்கு விரிவுரை சொல்லவிருந்த நிலையில் இறைவனின் அழைப்பை ஏற்றார். (இன்னாலில்லாஹி)

இவ்வுரைகள் யாவும் எழுத்து வடிவில் உள்ளன. 78 ஆவது அத்தியாயம் "அந்நபா" முதல் இறுதி வரை உள்ள அத்தியாயங்களின் விரிவுரை ஒலி வடிவில் உள்ளது.

அரபு மொழியில் அண்ணார் ஆற்றிய உரையின் மொழி பெயர்ப்பே இந்த நூல். இது மிகச் சிறந்த விரிவுரை நூல் என்ற போதிலும் கூட இமாம் ஷஅராவீ அவர்கள் தன்னடக்கம் காரணமாக இதை தஃப்சீர் (குர்ஆனின் விரிவுரை)என்று கூறாமல் "ஹவாத்திரீ ஹவ்லல் குர்ஆன்" குர்ஆனை பற்றிய என் எண்ண ஓட்டங்கள் என்கிறார்.

நபி(ஸல்) அவர்கள் ஏன்(தஃப்சீர்) குர்ஆனுக்கு விரிவுரை ஆற்றவில்லை?(பக்கம்:54)

மனிதர்களை வழிகெடுக்கும் ஷைத்தானை ஏன் அல்லாஹ் படைத்தான்?(பக்கம்: 126)

அல்லாஹ்வை ஏன் வணங்க வேண்டும்? சுவனம் பெறவா? நரகிலிருந்து பாதுகாப்பு பெறவா?(பக்கம்: 127)

இந்தக் கேள்விகளுக்கு நயம்படவும், கூர்மையாகவும் பதில் தருகிறார் இமாம் ஷஅராவீ.

“அல்லாஹ்வின் அருட்கொடையை நீங்கள் எண்ணிப் பார்த்தால் அதைக் கணக்கிட முடியாது(14:34) என்ற வசனத்துக்கு எளிமையான உதாரணம் மூலம் இந்த நூலில் விளக்கம் தருகின்றார். (பக்கம்:171)

யூடியூபில் இமாம் ஷஅராவீ அவர்களின் ஏராளமான உரைகள் பதிவேற்றம் செய்யப் பட்டுள்ளன. கேள்வி, பதில் அமர்வுகளில் பார்வையாளர்கள் பகுதியிலிருந்து கேள்வி கேட்பவர் வாயை மூடும் முன்னரே பாய்ந்து கொண்டு இமாம் பதில் சொல்வது பார்ப்போரை பிரமிப்புக்குள்ளாக்கும்.

கேள்விகளுக்கு பதில் கூறும் போது குர்ஆன் வசனங்களையும் பெருமானாரின் பொன் மொழிகளையும் பொருத்தமாக மேற்கோள் காட்டுவார். சில கேள்விகளுக்கு கூர்மையான எதிர் கேள்விகளால் பதிலளிப்பார்.

அவற்றுள் சில கேள்வி பதில் என்ற அடிப்படையில் அல்லாமல் விரிவுரையின் ஒரு பகுதியாக இந்நூலில் இடம் பெற்றிருக்கிறது. இது வாசிப்போரின் சுவாரஸ்யத்தைக் கூட்டுகிறது.




மொழிபெயர்ப்பாளர் தமிழ் வாசகர்களுக்கு ஒரு சர்வதேச அறிஞரை அறிமுகப் படுத்தியிருக்கின்றார். இலகுவான நடையில் வாசிப்பின் ஓட்டம் தடைபடாத படி மொழிபெயர்த்திருக்கிறார்.

ஒரு நிறுவனம் செய்ய வேண்டிய பணியை தனியொரு நபராக இருந்து செய்தமைக்காக மௌலவி அன்சாரி மன்பஈ அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்த நூலில் இமாம் ஷஅராவியின் வாழ்க்கைச் சுருக்கம். குர்ஆன் பற்றிய ஓர் அறிமுகம். குர்ஆன் அருளப்பட்ட தொடக்கக் கால நிகழ்வு, நுழைவாயில், அல்ஃபாத்திஹா அத்தியாத்தின் விரிவுரை ஆகியன இடம் பெற்றுள்ளன.

எந்த சிந்தனைப் பள்ளிக்கும் (School of thought) சார்பாக நிற்காமல் குர்ஆனின் வசனங்களுக்கு பொதுவான விளக்கங்களை தருவதில் இந்த நூல் சிறப்பாக தன் பணியைச் செய்திருக்கின்றது.

குர்ஆன், சுன்னாவின் ஒளியில் சுயமுன்னேற்ற நூல்கள் பலவற்றை வழங்கிய இமாம் ஷஅராவீ திருக்குர்ஆன் விளீவுரை யாளராகவும் நம் சிந்தனைகளைத் திறக்கிறார்.

வாசிக்க, அன்பளிக்க ஏற்ற நூல். இனிவரும் நாட்களில் அடுத்தடுத்த பாகங்கள் வெளிவரும் என்று நம்பலாம்.

வெளியீட்டாளரும் மொழி பெயர்ப்பாளருமான அன்சாரி மன்பஈ அவர்கள் தன் முயற்சியை தளர்த்தி விடாமல் இப்பணியைத் தொடர்ந்து செய்திட வேண்டும்.

**பேராசிரியர். இல்யாஸ் ரியாஜி**

# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான்
# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)



அபூ அப்ரஹ்

## இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப்போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். தம் சொந்த மக்களையும் கூட அவர்கள் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன்முதலில் அவர்களை நோக்கி தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நியாபகப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னாபின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள். நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

# நூருத்தீன் ஸங்கி அவர்கள் எடுத்த நடவடிக்கைகள்

▼▼▼

இப்போது நூருத்தீன் ஸங்கி அவர்களின் இஸ்லாத்தில் குழப்பம் விளைவிக்க முயன்றவர்களை கட்டுப்படுத்த முயன்றார். அப்போது சிலர் நபித் தோழர்களில் சிலரை குறை காணக்கூடியவர்களாக அவர்களை விமர்சிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் நூருத்தீன் ஸங்கி அவர்கள் எச்சரித்ததன் விளைவாக அவர்கள் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டார்கள். நூருத்தீன் ஸங்கி அவர்களை எதிர்த்து இப்படிப் பட்ட குழப்பங்களை செய்ய அவர்களுக்கு பயம். நூருத்தீன் ஸங்கி அவர்களின் பின்புலத்தில் அவருக்கு அஹ்லுஸ் சுன்னாவினர் இருந்து வழிகாட்டினர்.

அதன் பின்னர் பிரச்சாரகர்கள் பொதுப் பிரச்சனையைப் பற்றி மட்டுமே பேச அனுமதிக்கப்பட்டார்கள். இதற்கு முன்னால் அவர்கள் இஸ்லாமியர்களுக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடுகளைப் பற்றி பேசிப் பேசி அதை பெரியதாக்கிக் கொண்டிருந்தார்கள். அதனால் குழப்பம் மிகைத்திருந்தது. இப்போது நூருத்தீன் ஸங்கி அவர்களின் முயற்சியால் அந்த குழப்பங்கள் நிறுத்தப்பட்டன.

### ஃபாமியா கோட்டை

இப்போது நூருத்தீன் ஸங்கி அவர்களின் கவனம் ஃபாமியா கோட்டையை நோக்கி திரும்பியது. ஃபாமியா கோட்டை அப்போது ஃபிரான்குகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

ஃபிரான்குகள் எனப்படும் ஜெர்மானியர்கள் அவ்வப்போது ஹமாவையும், ஷைஸரையும் தாக்கி அந்த நிலத்தில் வசித்து வந்த மக்களை பெரும் அல்லலுக்கு உள்ளாக்கி வந்தனர். ஃபாமியா கோட்டை ஹமாவிலிருந்து தூரத்தில் இருந்தது. மலையில் உச்சியில் கட்டப் பட்டிருந்த அந்த கோட்டை மிகவும் பாதுகாப்பானது. ஆனாலும் நூருத்தீன் ஸங்கி அவர்கள் அதனை முற்றுகையிட முடிவு செய்து விட்டார். எனவே, மிகுந்த எச்சரிக்கையுடன் அந்த கோட்டையை இரவோ, பகலோ ஒருவரும் அந்த கோட்டையை விட்டு வெளியேறாத வண்ணம் அதனை முற்றுகையிட்டார். தொடர்ந்து அந்த கோட்டையில் உள்ளவர்களிடம் போர் செய்தார்.

அந்த கோட்டையை சுற்றியிருந்த பல பகுதிகளை சேர்ந்த ஃபிரான்குகள் ஃபாமியா கோட்டைக்குள் இருந்தவர்களுக்கு உதவ முடிவு செய்தார்கள். அவர்கள் அனைவரும் இணைந்து தாக்கி நூருத்தீன் ஸங்கி அவர்களை பின்வாங்க வைக்க முடிவெடுத்தார்கள். ஆனால், முன்னதாகவே, நூருத்தீன் ஸங்கி அவர்கள் போதுமான ஆயுதங்கள், படைகள், உணவுப் பொருட்களை சேகரித்து வைத்திருந்தார். ஃபிரான்குகள் தன்னை தாக்க வருவதற்கு முன்பாக நூருத்தீன் அவர்கள் ஃபிரான்குகளை தாக்க முன்னேறி சென்றார். அவருடைய தயாரிப்புகளையும் முன்னேற்பாடுகளையும் கண்ட மற்ற பகுதிகளை சேர்ந்த ஃபிரான்குகள் அப்படியே பின்வாங்கி தங்கள் நிலங்களுக்கே திரும்பி சென்றார்கள். அத்தோடு நில்லாமல் நூருத்தீன் ஸங்கி அவர்களுடன் சமாதான ஒப்பந்தத்தையும் போட்டுக் கொண்டு திரும்பி சென்றார்கள்.

## ஸைஃபுத்தீன் காசி அவர்களின் மரணம்

நூருத்துன் ஸங்கி அவர்களின் தந்தை அதாபேக் அவர்கள் டாரா என்ற இடத்தை முன்னர் கைப்பற்றி இருந்தார்கள். அவருடைய மரணத்திற்கு பின்னர் மர்டின் என்ற இடத்தின் ஆட்சியாளர் அந்த இடத்தை கைப்பற்றிக் கொண்டார். கி.பி.1149இல் ஸைஃபுதீன் அவர்கள் அந்த இடத்தை கைப்பற்ற தன் படைகளை நடத்தி சென்றார். அதில் வெற்றியும் பெற்றார். அவர் மர்டினின் பெரும்பாலான இடங்களை வெற்றிக் கொண்டார். தியார் பக்ர் என்ற இடத்தையும் முற்றுகையிட்டார். அவருடைய தந்தையின் இறப்பிற்கு பின் கைப்பற்றப்பட்ட இடங்களையெல்லாம் அவர் திரும்ப தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.

பின்னர் மர்டினின் ஆட்சியாளர் ஸைஃபுதீன் அவர்களுடன் சமாதானம் பேசினார். அவர் தன் மகள் அல்-காதூனை ஸைஃபுதீன் அவர்களுக்கு மணமுடித்து வைத்தார். ஸைஃபுதீன் அவர்கள் உடனடியாக மொசூலுக்கு திரும்பி விட்டார். ஆனால் காத்தூன் அதற்கு பின்னர் மொசூலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். காத்தூன் மொசூலுக்கு வருவதற்குள் ஸைஃபுதீன் மரணப் படுக்கையில் விழுந்து விட்டார். காத்தூன் அவர்களுடன் வாழ்வதற்கு முன்னரே ஸைஃபுதீன் அவர்களின் வாழ்க்கை முடிந்து விட்டது. ஆம் நூருத்தீன் ஸங்கி அவர்களின் மூத்த சகோதரர் ஸைஃபுத்தீன் அவர்கள் மரணித்து விட்டார்.

## ஹ'ரான்

ஹ'ரான் என்ற பகுதியை ஃபிரான்குகள் கொள்ளையடித்து அழித்து வருவதாகவும் அதனால் அங்குள்ள முஸ்லிம்கள் குறிப்பாக விவசாயிகள் பெருத்த அழிவுள்ளாகி வருவதாகவும் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு செய்திகள் வந்தன. இதனால் கோபமுற்ற நூருத்தீன் ஸங்கி ஹ'ரானை நோக்கி படையெடுக்க திட்டமிட்டார்.

இதற்கு அவருக்கு டமாஸ்கசின் உதவி தேவைப்பட்டது. எனவே, அவர் டமாஸ்கசின் ஆட்சியாளருக்கு 1000 குதிரைப் படையினரையும் அந்தப் படையினரை வழி நடத்த சிறந்த தளபதி ஒருவரையும் அனுப்பி வைக்குமாறு கேட்டிருந்தார். ஆனால் டமாஸ்கசின் ஆட்சியாளரோ ஏற்கனவே ஃபிரான்குகளுடன் முஸ்லிம்களுக்கு எதிரான போரில் ஒருவருக்கொருவர் உதவுவது என்ற ஒப்பந்தம் போட்டிருந்தார்.

எனவே, நூருத்தீன் டமாஸ்கஸை அணுகிய உடன் அவர் ஃபிரான்குகளை தொடர்பு கொண்டு தனக்கு உதவி புரியுமாறு கோரினார். ஆனால் இந்த சதிகளைப் பற்றியெல்லாம் சற்றும் கவலைக் கொள்ளாத ஸங்கி அவர்கள் தன்னுடைய ஜிஹாதிய போரை அவர்களுக்கு எதிராக ஆரம்பிக்க முடிவு செய்தார். தன்னுடைய படையினருக்கு அவர் விவசாயிகளையோ விவசாய நிலங்களையோ

தாக்கக்கூடாது, அழிக்கக்கூடாது என கட்டளையிட்டார். நபி(ஸல்) அவர்களின் கட்டளையை மனதில் கொண்டவராகவே இந்த உத்தரவை நூருத்தீன் அவர்கள் பிறப்பித்தார்.

அவர் ஹூரானை நோக்கி படையெடுத்த நேரம் ஹூரான், அல்-மர்ஜ், அல்குதாஹ் போன்ற பகுதிகளில் கடும் வறட்சி. நீண்ட நாட்களாக மழை இல்லை. எனவே, அந்தப் பகுதிகளை சேர்ந்தவர்களில் பலர் அந்தப் பகுதியை விட்டு சென்று விட்டிருந்தார்கள். நூருத்தீன் ஸங்கி அவர்கள் துல்ஹஜ் மாதம் 3ம் நாள் அந்த பகுதியை அடைந்தவுடன் கடுமையான மழை பொழிந்தது. மக்கள் இந்த மழை இறைவனின் அருள் என்றும் நூருத்தீன் ஸங்கி அவர்களின் நீதிக்கும், நேர்மைக்கும் சாட்சி என இறைவனிடத்தில் அவருக்காக பிரார்த்தனை செய்ய ஆரம்பித்து விட்டனர்.

துல்ஹஜ் மாதம் 26ம் நாள் நூருத்தீன் அவர்கள் அப்பகுதியின் ஆட்சியாளர் முஜ்ரிதீன் என்பவருக்கு செய்தி அனுப்பினார். அதில்;

“நான் உங்களோடு போர் செய்ய வரவில்லை. ஆனால் முஸ்லிம் விவசாயிகள் தங்கள் நிலங்கள் ஃபிரான்குகளால் கொள்ளயடிக்கப்படுவதைப் பற்றியும் அவர்களுடைய மனைவி மக்களை கைப்பற்றி அடிமைப்படுத்தப்படுவதைப் பற்றியும் கொடுத்துள்ள புகார்கள் பற்றி எனக்கு தெரியும். அவர்களுக்கு உதவி செய்வதற்காகவும் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்காகவும் இறைநம்பிக்கையற்றவர்களுக்கு எதிராக போர் புரிவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. முஸ்லிம்களுக்காக போர் செய்ய எனக்கு ஆற்றல் உள்ளது. இறைவனுக்கே புகழனைத்தும்.

நீ பலஹீனமானவன், முஸ்லிம் விவசாயிகள் விஷயத்தில் அலட்சியமானவன் என்பது எனக்கு தெரியும். அதன் காரணமாகவே நீ எனக்கு எதிராக ஃபிரான்குகளிடம் உதவி கோரி உள்ளாய், பலஹீனமானவர்களின் உடைமைகளை ஃபிரான்குகளுக்கு அடைமானம் வைத்து விட்டாய். இது முஸ்லிம்களையும் திருப்திபடுத்தாது. படைத்த இறைவனையும் திருப்திபடுத்தாது. அஷ்கலான் மற்றும் காசா எல்லைகளை பாதுகாக்க எனக்கு உடனடியாக 1000 குதிரை வீரர்கள் தேவை.”

இதற்கு பதிலளித்த முஜ்ரிதீன்;

"போர் என்பதே உங்களுக்கு எங்களுடைய பதில். நீங்கள் எங்களை தாக்கினால், உங்களை வீழ்த்த ஃபிரான்குகள் எங்களுக்கு உதவுவார்கள்"

என்று கூறினார்கள். இந்த பதில் நூருத்தீன் அவர்களை கோபப்படுத்தியது.


-இன்ஷா அல்லாஹ் வளரும்.



வேர்கள் வெளியீட்டகம்

8148129887

8248208144

52/1, மண்ணடி தெரு,
மண்ணடி,
சென்னை - 600001.



# செயல் மழவர் பாசல் அலீ

## சூரன்குடி பாசல் அலீ – ஐ அல்லாஹ் அழைத்துக் கொண்டான்



20.08.2019 அன்று காலை என் குழந்தை பருவ நண்பர், சமுதாயப் பணியில் என்னுடன் தோளோடு தோள் கொடுத்த உற்ற நண்பர் – ஐ பார்த்திட வேண்டும் என நான் சென்னையிலிருந்து புறப்பட்டேன். ஏனெனில் இருதய சிகிட்சை முடிந்து அவர் அப்போது தான் மருத்துவமனை யிலிருந்து வீட்டுக்கு வந்திருந்தான்.

எதற்கும் அவருக்கு ஒரு போன் பன்னுவோம் என போன் பேசினேன். பேசினார். எங்கள் தொலைப்பேசி உரையாடல் எப்போதுமே கொஞ்சம் நீளம் தான். ஆனால் இந்த முறை "நானே ஓய்வெடுக்க வேண்டிய நேரம். நான் தான் வந்து கொண்டிருக்கின்றேனே. இன்ஷா அல்லாஹ் காலை பேசுவோம்" என்றேன்.

காலையில் ஊர் சென்ற போது அவர் கடைக்குப் போயிருக்கின்றார் என்றார்கள். ஊர் நண்பர்களெல்லாம் கூடி காலையில் சந்திப்போம் என்றார்கள். ஆனால் மாலையில் அல்லாஹ் அவரை அழைத்துக் கொண்டான் என்றார்கள். இன்னாலில்லாஹி இன்னா அலைஹி ராஜிஊன். இனி மறுமையில் தான் அந்த மாண்பாளனை, புரவலனைச் சந்திப்போம். இன்ஷா அல்லாஹ் அது நிச்சயம் நடக்கும்.

ஏறத்தாழ 64 ஆண்டுகள் பழக்கம். இந்த 64 ஆண்டுகளும் அவர் சேவை செய்து கொண்டே இருந்தார். வெளிநாடுகளில் 25 ஆண்டுகள் பணியாற்றினார். அந்த 25 ஆண்டுகளும் அவர் பல சமுதாய சேவை அமைப்புகளை உருவாக்கினான். அவை இன்னும் பலன் தந்து கொண்டிருக்கின்றன. அவை இனியும் பலன் தரும். அதற்கான நற்கூலி, அவரையும் சென்று சேரும். அல்லாஹ் அவருக்கு அவற்றின் பலனை தந்தருள்வான். இன்ஷா அல்லாஹ். இன்னும் பல நினைவுகள் புதைக்க முடியாதவை அவை பாசல் அலீ குறித்து வெளிவரும்.

**உலகெங்கும்**

அன்புச் சகோதரர் பாசலின் மரணம், உலகெங்கும் அதிர்வுகளை உருவாக்கிற்று. நினைவு கூரல்கள் மஸ்கட் முதல் எல்லா இடங்களிலும் நடந்தன.

**கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்**

நீண்ட நெடியதொரு போராட்ட வரலாறுக்குச் சொந்தக்காரர் அண்ணன் கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்! அண்ணன் கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்வோடு தான் பாசல் நாகர் கோவில் வந்த போது அதிகமான நேரங்களைச் செலவிட்டிருக்கின்றார். நான் நாகர் கோவில் செல்லும் போது அண்ணன் கொடிக்கால் அவர்களை பெரும்பாலான வேளைகளில் சந்தித்து விடுவேன் பாசலுடன்.

பாசலின் ஜனரஞ்சகமான பழக்கமும், பேச்சமும் இயல்பான இஸ்லாமிய ஈடுபடும் அண்ணன் கொடிக்கால் அவர்களை பெரிதும் ஈர்த்திருந்தது. நன்றி சொல்லுவதில் கொடிக்கால் போல் யாருமில்லை. 25.08.2019 அன்றே மர்ஹூம் பாசல் அலீயின் பெயரால் ஒரு நூலகத்தை கன்னியாகுமரியில் வீற்றிருக்கும் அவரது அமைதி இல்லத்தில் திறந்தார். அதனை திறந்து வைப்பதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தார். பாசலின் மரணத்திற்குப் பின் நடந்த முதல் ஒன்று கூடல் என்பதால் பேசியவர்களும், கேட்டுக் கொண்டிருந்தவர்களும் கண்ணீர் சிந்தினர்.

மர்ஹூம் பாசல் அலீயின் பிரிவால் ஏற்படும் வெற்றிடத்தை "அலீ" சகோதரர்களில் ஒருவரான ஹாஜி அலீ கான் அவர்கள் நிரப்புவார்கள். நிச்சயமாக சமுதாயம் கொடிக்காலுடன் நிற்கும் இன்ஷா அல்லாஹ்.

### செயல் மழவர் பாசல் அலீக்கான நிகழ்ச்சிகள்

நூலகம் திறப்பு: அமைதி இல்லம் 25.08.2019 – நிகழ்ச்சி ஏற்பாடு: கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்.

மனிதநேய அமைப்பின் நிகழ்ச்சி ஏற்பாடு ஜனாப் அலீ கான் அவர்கள்.

சூரங்குடி ஊர் பொது மக்கள் கூட்டமைப்பு நிகழ்ச்சி ஏற்பாடு – ஏ.அப்துல் ரஸாக்.

**சிறப்பு அழைப்பாளர்கள்**

**திரு. சி. ரெத்தின சுவாமி.**
(முன்னாள் வங்கி மேலாளர்)

**திரு. ஆர். சுயம்பு.**
(முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்)

**திரு. என். சுவாமி நாதன்.**
(தி ஹிந்து சிறப்பு நிருபர்)

**திரு. நாகராஜன்.**
(வங்கி மேலாளர்.எஸ்.பி.ஐ.)



அடுத்து இரண்டு நிகழ்ச்சிகள் சூரங்குடியில் நடந்தன. மர்ஹூம் பாசல் அலீயின் தற்போதை பெரும் சேவையின் தளமும், களமும், "ஜன்சேவா" என்ற நிறுவனம். வட்டி இல்லா கடன் சேவை, அதன் அகில இந்திய பொருப்பாளர் ஜனாப் இப்னு சவூத், காயல்பட்டிணம், கிளையின் பொறுப்பாளர் முஜாஹித் இன்னும் இதர பொறுப்பாளர் களும் கலந்து கொண்டார்கள். அதன் பின் நான் கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் அவர்களிடம் பேசிய போது அவர்கள் உங்கள் ஊரில் சூரங்குடியில் எல்லோரும் என்னை வாய் நிறைய மாமா, மாமா என்றழைத்தது என்னை பெரும் பூரிப்பில் ஆழ்த்துகின்றது என்றார்கள்.

**அலீ சகோதரர்கள்**

மர்ஹூம் பாசல் அலீ அவர்களும் ஹாஜி அலீ கான் அவர்களும் சமுதாயச் சேவையில் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் போல், சமுதாயப் பணியாற்றியவர்கள். 1982 முதலே அவர்கள் சமுதாயத்தில்



நலப் பணிகள் ஆற்றியவர்கள். பாசலின் இறப்பு ஏற்படுத்திய வெற்றிடத்தை நிறைவு செய்ய அவர் முயற்சி செய்து கொண்டே இருக்கின்றார். (அல்லாஹ் அவர்களுக்கு ஊற்றத் துணைகளை நிரம்பவே நல்கிடுவானக! )

ஜனாசா தொழுகையை முடித்து விட்டு திரும்பிய உடனேயே என்னிடம் தன் ஆதங்கத்தை வெளியிட்டார். இவரும் ஒரு களப்பணியாளர். அவருடைய ஆதங்கத்தை நிறைவு செய்யும் விதத்தில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தார். இதர நிகழ்ச்சிகளிலும் தவறாமல் கலந்து கொண்டார். முன்னதாக நாகர்கோவில் கலாச்சார மஸ்ஜித்-இல் இமாம் எம்.ஐ. சௌகத் அலீ உஸ்மானி அவர்கள் ஜும்மா சிறப்புரை நிகழ்த்தி பாசல் அலீக்காக துஆ செய்தார்கள்.

## செயல் மழவர் மர்ஹூம் பாசல் அலீயின் முயற்சிகள்.........!

இன்றைக்கு அகில இந்திய அளவில் இருக்கும் அமைப்புகளின் அடிநாதம்.

- **MSA** – இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு.
- **SIMI** – இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம்.
- குமரி மாவட்ட இஸ்லாமிய இளைஞர் பேரவை.
- தாமின் என்ற தமிழ் நாடு முஸ்லிம் லீக் – குவைத்.
- அன்னை கதீஜா அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி – க்கு அடிப்படை உதவிகள்.
- அன்னை கதிஜா IAS - IPS Academy அடிப்படை உதவிகள்.
- ஜன்சேவா என்ற வட்டி இலா வங்கி முறையின் குமரி மாவட்ட தாளாளர்.
- தமுமுக குமரி மாவட்ட துணைத் தலைவர்.

இஸ்லாமிய அழைப்புப் பணிகளுக்கு உதவி. பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள காரணமாக இருந்தவர். குமரி மாவட்டத்தின் திமுக முன்னோடி மர்ஹூம் ஜி.எம். ஷா வின் மருமகனார். அன்றைய குமரி மாவட்டத்தின் மிகப்பெரும் தனவந்தரும், கொடையாளியும், சமூக சேவகருமான மர்ஹூடம் சிராஜுத்தீன் அவர்களின் மகனார்.

செயல் மழவர் பாசல் அலீயின் முழு சேவையும் இன்றைய இளைஞர்களுக்கு பல பயனுள்ள படிப்பினைகளைத் தரும். அதனால் அவருடைய முழு சேவையும் உள்ளடக்கிய சிறப்புப் பதிவு என்று இன்ஷா அல்லாஹ் வெளி வரும்.

**எம்.ஜி.எம்.**



# காவல் துறையின் தடையையும் மீறி

## திருப்பூர் அவிநாசியில்

# செந்தமிழ் நாட்டுச் சேரிகள்

## நூல் வெளியீடு


மறைந்த நீலப்புலிகள் இயக்கத்தின் நிறுவனர் டி.எம். மணி என்கிற டி.எம். உமர் பாரூக் அவர்கள் எழுதிய செந்தமிழ் நாட்டுச் சேரிகள் புத்தகம் வெளியீட்டு நிகழ்ச்சி 01-09-2019 அன்று திருப்பூர் மாவட்டம் அவிநாசியில், நியூ ஆனந்தாஸ் ஹோட்டலில் உள்ள கலையரங்கத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதற்கான முன் தொகையாக 2000 ரூபாய் கொடுத்து ரசீதையும் பெற்றுக் கொண்டோம். இந்நிலையில் 31-08-2019 அன்று மாலையில் அரங்க நிர்வாகம் எங்களை அழைத்து மண்டபம் தர இயலாது என்றனர். என்ன காரணம் என்று விசாரித்த போது வேறொரு நிகழ்ச்சி உள்ளது, அதனால் முன்தொகை வாங்கிக் கொள்ளுங்கள் என்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடெல்லாம் செய்து முடித்தாகிவிட்டது. அதனால் நாங்கள் முன் தொகை வாங்க இயலாதென கூறி திரும்ப வந்து விட்டோம். இந்நிலையில் இரவு 9 மணியளவில் அவிநாசி காவல் நிலைய ஆய்வாளர் நம்மை செல்பேசியில் தொடர்பு கொண்டார். காவல் துறை அனுமதி வாங்காமல் நிகழ்ச்சி நடத்தக் கூடாதென்றார். உள் அரங்க நிகழ்ச்சிக்கு காவல் துறை அனுமதி தேவையில்லை என்றோம்.

நிகழ்ச்சியில் சாதிக் கொடுமைக்கு சாவு மணி அடித்து இஸ்லாத்தை ஏற்ற மீனாட்சிபுரம் மகக்ளின் தற்போதைய வாழ்க்கையை குறித்த குறும்படம் வெளியிடுவதாக இருந்தது. குறும்படம் அனுமதி இல்லாமல் வெளியிடக் கூடாதென காவல் ஆய்வாளர் சொன்னார். மீண்டும் நாம் அரங்க கூட்டத்திற்கு அனுமதி தேவையில்லை என்றதும் இணைப்பை பாதியிலேயே துண்டித்தார். நாம் வழக்கறிஞர்களிடம் ஆலோசனை நடத்தியதில் அனுமதி வாங்க தேவையில்லை என்றனர்.

பின்பு செந்தமிழ் நாட்டுச்சேரிகள் புத்தகம் எடுத்து கொண்டு காவல் நிலையம் வாருங்கள் அனுமதி தருகிறோம் என்றார் ஆய்வாளர். உடனே எடுத்துச் சென்றோம். அங்கே போனதும் அனுமதி






தருகிறேன் என்றவர் டி.எஸ்.பி-ஐ பாருங்கள் என்றார். டி.எஸ்.பி-ஐ பார்க்க சென்றோம் இப்போது தான் சென்றார், காலையில் வாருங்கள் என்றனர் அலுவலகத்தில இருந்தோர். திரும்பி வந்து விட்டோம்.

01-09-2019 காலையில் அவிநாசி காவல் ஆய்வாளர் அனுமதி மறுப்பு என்றார் மீண்டும்! ஏனென்று கேட்ட போது புத்தகம் மதமாற்றத்தை பேசுகிறது என்றார். மதமாற்றம் அரசியல் சட்டப்படி அனுமதிக்கப்பட்டது தானே என்ற போது, இணைப்பை துண்டித்து விட்டார். வழக்கறிஞர் டி.எஸ்.பி-ஐ செல்பேசியில் தொடர்பு கொண்ட போது போனை எடுக்கவில்லை. நேரில் சந்திக்க சென்ற போது இப்போது தான் சென்றார் எனக் கூறினர் வழக்கம் போல. எவ்வளவு தடை வந்தாலும் புத்தகத்தை வெளியிட்டே ஆக வேண்டும் என்ற உறுதியில் இருந்தனர் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள். உடனே மாற்று இடம் தயார் செய்யப்பட்டது.

நிகழ்ச்சியை எப்படியும் நடத்தியே ஆக வேண்டும் என கங்கணம் கட்டி செயல்பட்ட ஆதித் தமிழர் பேரவையின் மாநில துணைப் பொது செயலாளர், விடுதலை செல்வன் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். புத்தகத்தை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் அறக்கட்டளையின் தலைவர் மு. குலாம் முஹம்மது அவர்கள் வெளியிட, இட ஒதுக்கீட்டிற்காக தன்னுயிரை தியாகம் செய்த மகேஷ்வரன் அவர்களின் தாயாரும், ஆதித் தமிழர் பேரவையின் வழக்கறிஞர் அணி செயலாளர் சகோதரர் கனகசபை அவர்களும் பெற்றுக் கொண்டனர்.





நிகழ்ச்சி நாம் ஏற்பாடு செய்திருந்த இடத்திலே நடந்திருந்தால் கூட இவ்வளவு சிறப்பாக அமைந்திருக்காது. அவ்வகையில் அவிநாசி காவல்துறைக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் திருப்பூர் மாவட்ட உளவுத்துறை அதிகாரிகள் நம்மைத் தொடர்பு கொண்டு நிகழ்ச்சிக்கு நாங்கள் தடை விதிக்கவில்லை. அவிநாசி காவல்துறையினர் தான் தடை விதித்துள்ளனர் என்றனர்.



முதலில் பேசிய சகோதரர் கனகசபை, இந்தியாவின் தற்போதைய அரசியல் சூழலை அழகுபட விளக்கினார். மேலும் இந்து மதத்தின் தீண்டாமைக் கொடுமை எந்த அளவிற்கு தலித்துகளை பாதித்துள்ளது என்றும், அதை எல்லோரும் புரியும் வகையில் தொகுக்கப்பட்டதே இந்த புத்தகம் என்றும் கூறினார். மேலும் கிருஸ்தவமும் சாதியை உள்வாங்கிக் கொண்டது ஒழிக்கவில்லை என்றும், இஸ்லாம் மட்டுமே சாதியை ஒழித்துள்ளது. சாதியற்ற சமூகமாய் மாற இஸ்லாமே தீர்வு என்றார்.



அடுத்து பேசிய குலாம் முஹம்மது அவர்கள் சாதியின் தாக்கத்திலிருந்து விடுபட இஸ்லாம் மட்டுமே தீர்வு என்றும், இஸ்லாத்தை ஏற்றவர் களுக்கு ஏற்பட்ட மாற்றத்தை ஆதாரப்பூர்வமாக விளக்கி கூறினார். இவ்வுலகிலும் மறு உலகிலும் விடுதலைப் பெற்று வாழ சமத்துவ மார்க்கமான இஸ்லாத்தை ஏற்று வெற்றி பெற மக்களை அழைத்தார்.

இறுதியில் ஆதித்தமிழர் பேரவையின் வடக்கு மாவட்ட செயலாளர் வேந்தன் மகேஷ் நன்றியுரை ஆற்றும் போது, பள்ளர், பறையர், சக்கிலியர் என்று ஒதுக்கி தள்ளிய போது கலிமா சொன்னதும் கட்டி தழுவி வரவேற்கின்றனர் இஸ்லாமியர்கள் என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.

நிகழ்ச்சி மிக சிறப்பாக நிறைவுற்றது. நாம் விசாரித்த வகையில் சாதியை பார்த்தே அவிநாசி காவல்துறை தடை விதித்ததாக தெரிகிறது. தலித்துகள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் சபாநாயகராகவும், அவிநாசி சட்டமன்ற உறுப்பினராகவும் தலித்தே உள்ளார். தலித் சமூகத்தை சார்ந்த ஆ.ராசா பாராளுமன்ற உறுப்பினராகவும் உள்ள வேளையில், காவல் துறை தலித் எதிர்ப்பு மன நிலையில் செயல்படுவதை கவனிக்கும் போது, இந்த புத்தகத்தை இன்னும் வீரியமாக ஒடுக்கப்பட்ட, அமுக்கப்பட்ட மக்களிடத்தில் எடுத்து செல்லப்பட வேண்டும் என்பதை காட்டுகிறது.

**திருப்பூரிலிருந்து நமது நிரூபர்.**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002